# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

மே 2026 | வைகாசித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | May - 2026 | Issue - 7 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR



மொரிஷியஸில் நடக்கவுள்ள 13ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை தொடங்கி வைக்க மொரிஷியஸ் குடியரசுத் தலைவர் மேதகு தரம்பீர் கோஹெல் அவர்களை மாநாட்டுத் தலைவர், சட்டக்கதிர் ஆசிரியர் முறைப்படி அழைத்தார். உடன் மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,



www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT®
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

மே 2026 http://epaper.sattakadir.com வைகாசித் திங்கள் இதழ் 2026


## பொருளடக்கம்


1. தேங்கி கிடக்கும் வழக்குகளும் சமரசத் தீர்வு மையங்களும்
   – தலையங்கம் 5

2. தண்டனை வழங்கும் நீதி: கர்ம வினையின் திரையைத் தாண்டிய ஓர் அறைகூவல்
   – மாண்புமிகு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் 7

3. உள்நோக்கத்துடன் வழக்கறிஞர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ரத்து; புகார்தாரர் மற்றும் பார் கவுன்சிலுக்கு அபராதம் விதித்து தீர்ப்பு
   – இந்திய உச்சநீதிமன்றம் 9

4. குத்தகை நிபந்தனைகளை மீறி வங்கி நடத்திய ஏல விற்பனை செல்லாது; ஏலக் கொள்முதல் தாரருக்கு வட்டியுடன் பணத்தை வழங்க உத்தரவு
   – இந்திய உச்சநீதிமன்றம் 19

5. விசாரணை நடைமுறையும் முத்திரை வில்லைத் தீர்வையும்
   – சென்னை உயர்நீதிமன்றம் 29

6. வக்பு சட்டம் கீழ் முத்தவல்லியின் நீக்கம் பற்றிய வழக்கை வக்பு தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பிட வேண்டும்.
   – சென்னை உயர்நீதிமன்றம் 32

7. குறைவான முத்திரை வரி செலுத்தப்பட்ட ஆவணத்தைப் பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. நிலுவை செலுத்தாமல் ஆவணத்தைத் திரும்பப் பெற முடியாது.
   – சென்னை உயர்நீதிமன்றம் 40

8. கடன் பற்றுரிமை மாற்றீடும் காப்பீடும்
   – சென்னை உயர்நீதிமன்றம் 46

9. மூத்த குடிமக்கள் பராமரிப்புச் சட்டம் 2017–க்கு பின்னோக்கிய விளைவு கிடையாது: 2004–ல் நிறைவேற்றப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய முடியாது
   – சென்னை உயர்நீதிமன்றம் 55

10. 2006ஆம் சட்டம் நுண்தொழில் மற்றும் சிறுதொழில்களை ஊக்கப்படுத்துவதாக உள்ளது
   – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை ஆயம்) 60

11. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டம்
   – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 65

12. சட்டச் சொற்கள் விளக்கம் – இலக்குவனார் திருவள்ளுவன் 82

# சட்டக்கதிர்

***ஆசிரியர் வெளியிடுபவர்:***
முனைவர் வே.இரா.சே.சம்பத்

***சிறப்பு ஆலோசனைக் குழு:***
***மூத்த வழக்கறிஞர்கள்:***
திரு.ஆர்.காந்தி, திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்,
டாக்டர் எ. தியாகராஜன்

***சட்ட/தமிழ் வல்லுநர்கள்:***
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

***வழக்கறிஞர்கள்:***
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி, திரு. எஸ். பாலமுருகன்

***சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:***
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

***டெல்லி உச்சநீதிமன்றத் தொடர்பாளர்:***
திருமதி இந்திரா, வழக்கறிஞர்

***மொழி பெயர்ப்பாளர் குழு:***
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன், திரு.மா.வெற்றிவேல்

***அலுவலகப் பணிக்குழு:***
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு. கதிரவன் வெங்கடேசன்

***வடிவமைப்பு:*** வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque),** வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-
நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்ட அறிஞர்களின் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque),** வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.



**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

வைகாசித் திங்கள் இதழ்

சட்டம் – 34 மே 2026 கதிர் – 7

## தேங்கி கிடக்கும் வழக்குகளும் சமரசத் தீர்வு மையங்களும்

இந்தியா முழுவதும் இலட்சக்கணக்கான வழக்குகள் கீழமை நீதிமன்றங்களிலும், உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் தேங்கிக் கிடக்கின்றன. இந்தியாவில் கல்வி அறிவு பெருகப் பெருக, வாய்ப்பு வசதிகள் வளர வளர வழக்குகளின் எண்ணிக்கையும் பல மடங்க அதிகரித்துள்ளது. நீதிமன்றப் படிக்கட்டுகளே ஏறக் கூடாது என்று வாழ்ந்த சமூகம் இந்திய சமூகம். இப்போது தங்கள் உரிமைகள், தேவைகளைப் பெற நீதிமன்றம் செல்வதும் வழக்காடுவதும் அன்றாட நடைமுறை வாழ்க்கையாக மாறிவிட்டது.

நீதிபதி பகவதி அவர்கள் சாதாரண அஞ்சல் அட்டையில் வந்த ஒரு கடிதத்தையே உச்சநீதிமன்றத்தில் வழக்காக எடுத்து விசாரித்துத் தீர்ப்பு வழங்கிய பிறகு மெல்ல மெல்ல தினமும் பொதுப் பிரச்சினைகளுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கும் பொது நல வழக்குகள் உயர்நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் வழக்காகப் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. அனைத்து வழக்குகளும் காலமுறையின் அடிப்படையிலோ அல்லது வரிசை முறையிலோ நடத்தப்படாமல் எந்த வழக்கை முதலில் எடுத்துக் கொள்வது, எந்த வழக்கைத் தள்ளிப் போடுவது என்றெல்லாம் நீதிமன்றங்கள் முடிவெடுக்க ஆரம்பித்த பிறகு இலட்சக்கணக்கான வழக்குகள் பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தீர்ப்பு வழங்கப்படாமல் உள்ளன.

நீதிபதிகளைத் தூய தமிழில் நீதியரசர் என்று அழைத்தாலும் அவர்களும் நம்மைப் போல மனிதர்கள் தானே. அவர்களும் ஒரு நாளைக்கு எவ்வளவு வேலைப் பளுவை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு வேலைப் பளுவை எடுத்துக் கொண்டு வாதங்களைக் கேட்டுத் தீர்ப்புகளை வழங்க முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில வழக்குகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் சில வழக்குகளுக்குத் தனி நீதிமன்றம் அமைப்பதும் இன்றைக்கு இலட்சக்கணக்கான வழக்குகள் தேங்கி இருப்பதற்குக் காரணங்களாக அமைகின்றன.

மூன்று உயர்நீதிமன்றங்கள் மட்டுமே இருந்த இந்தியாவில் விடுதலைக்குப் பிறகு அவை பதினைந்தாக உயர்ந்து இன்றைக்கு 30 உயர்நீதிமன்றங்களாக மாறியுள்ள சூழ்நிலையில் வழக்குகள் தேக்கமோ மேலும் மேலும் இலட்சங்களைத் தாண்டிக் கொண்டே இருக்கின்றன. பத்து நீதிபதிகள் இருந்த சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்றைக்கு 75 நீதிபதிகள் என்று அதிகரிக்கப்பட்டிருக்கிறது, அப்படி இருந்து வழக்குகள் முடிந்தபாடில்லை.

சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்றைக்கு அதிக எண்ணிக்கையில் நீதிபதிகளின் பணியிடம் காலியாக உள்ளது. இதைப் போலவே இந்தியா முழுவதும் இதே நிலை நீடிக்கிறது. அதிக எண்ணிக்கையில் நீதிபதிகளின் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தப் பணியிடங்களை நிரப்புவதில் ஏன் காலதாமதம், அரசாங்கத்தில் காலதாமதம் ஏற்பட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லலாம். நீதிமன்றத்தில் காலதாமதம் என்றால் எங்கே செல்வது ?

இதைப் போலவே, உச்சநீதிமன்றம் தொடங்கப்பட்டபோது 9 நீதிபதிகள் இருந்தனர். இப்போது 25லிருந்து 35 ஆக உயர்ந்துள்ளது. வழக்குகளுக்குமேல் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் சச்சரவு மத்திய அரசு குறித்த பிரச்சினைகள், உயர்நீதிமன்றத் தீர்ப்புகளின் மீது மேல்முறையீடுகள், அரசமைப்புச் சட்ட விளக்கம் போன்ற பணிகளையே செய்து கொண்டிருந்த உச்சநீதிமன்றம் இன்றைக்கு எல்லா பிரச்சினைக்கும் அணுகப்படுகிற நீதிமன்றமாக மாறிக் கொண்டிருக்கிறது.

உயர்நீதிமன்ற அதிகாரங்கள், கீழமை நீதிமன்ற அதிகாரங்கள், எல்லாவற்றிலும் தங்குதடையின்றி உச்சநீதிமன்றம் தனது அதிகாரத்தைக் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. அந்தந்த நீதிமன்றம் எடுக்க வேண்டிய முடிவுகளில் உச்சநீதிமன்றம் தலையிடுகின்றது. கீழமை நீதிமன்றங்கள் வழங்கிய

தீர்ப்புகளுக்கு முறையாக மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் என இல்லாமல் நேரடியாக உச்சநீதிமன்றம் செல்லும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. அதிகாரம் பெற்றவர்கள், அந்தஸ்து பெற்றவர்கள், வசதி படைத்தவர்கள், எளிதில் உச்சநீதிமன்றக் கதவுகளைத் தட்ட முடிகிறது. பொதுநல வழக்கு என்ற பெயரால் தினமும் உச்சநீதிமன்றம் பல்வேறு பிரச்சினைகளில் நேரடியாகத் தீர்ப்புகளை வழங்கி வருவது. இப்படிப்பட்ட நீதி நிர்வாகத்தைக் கொண்ட இந்தியாவில் ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா என்ற தமிழ்ப் பழமொழிதான் நம் நினைவுக்கு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைப்பதற்கு நீதிமன்றங்கள் உறுதி செய்தும், ஏழைக் குடிமக்களுக்கு வாய்ப்பிருக்கிறதா என்கிற கேள்வி தினமும் அனைவரது மனத்தில் எழுந்தவண்ணம் உள்ளது.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க நீதிபதிகள் வழக்கறிஞர்கள் அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள். இன்றைக்கு வளர்ந்த நாடுகளில் சமரசத் தீர்வு மையங்கள் அதிகாரப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளன. இதில் வாதாடத் தனிப்பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. இதில் சான்றிதழ் பெற்றவர்கள் எவரும் வாதிடலாம். வழக்கறிஞர்களும் வாதாடலாம். ஆகவே வழக்குகளைக் குறைப்பதற்கு இதுபோன்ற முறைகள் ஏன் இந்தியாவில் முழு அளவில் நிறைவேற்றப்படவில்லை.

(1) பெருமளவில் சமரச மையங்களையும், சமரசத் தீர்வாளர்களையும் சட்டப்படி உருவாக்கிட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2) எந்த ஒரு நீதிமன்றத்திலும் நீதிபதிப் பணியிடம் காலியாகுமானால் நூறு நாட்களுக்குள் புதிய நீதிபதி கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும். அப்படி புதிய நீதிபதி நியமிக்கப்படும் வரையில் அந்தப் பணியிடத்தில் ஓய்வுபெற்ற நீதிபதியே தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்வதனால் நீதிபதி பணியிடமும் நிரப்பப்படும் வழக்குகளும் விரைவில் முடிக்கப்படும்.

(3) எந்தவொரு வழக்கையும் விசாரிக்கத் தனிநீதிமன்றத்தை உருவாக்குவதோ அல்லது வரிசையை மீறி முன்னுரிமை அளிப்பதோ அனுமதிக்கக் கூடாது. எல்லா வழக்குகளும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளாகக் கருதப்பட்டு அவை சமமாக எண்ணப்படுதல் வேண்டும்.

(4) வழக்குகளின் வாதங்கள் முடிந்த பிறகு தீர்ப்புகள் 30 நாட்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும். உச்சநீதிமன்றம் இதுகுறித்துப் பல்வேறு தீர்ப்புகளில்கூட கோடிட்டுக் காட்டியுள்ளன.

(5) உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்புகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்குப் பதிலாக, உயர்நீதிமன்றத்திற்கும், உச்சநீதிமன்றத்திற்கும் இடையில் ஒரு மேல்முறையீட்டு (Court of Appeal) நீதிமன்றத்தை உருவாக்கிட வேண்டும். இதன் தீர்ப்பே முடிவானதாகவும் இருக்க வேண்டும். இதுபோன்ற அமைப்பு கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் உள்ளன.

(6) இப்படி அமைக்கப்படுகின்ற மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் இந்தியாவில் டெல்லி, மும்பை, கல்கத்தா, சென்னை என்ற நான்கு பெருநகரங்களில் உருவாக்கப்பட்டு இந்தியாவை நான்கு பகுதிகளாப் பிரிக்க வேண்டும். இதனால் டெல்லிக்குச் சென்று வருகின்ற போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவு ஆகியவை குறையும்.

(7) வழக்கறிஞர்களால் வாங்கப்படும் கட்டணம் இப்போது இலட்சக்கணக்கில் உயர்ந்து விட்டது. சாதாரண மக்கள் உயர்நீதிமன்றத்திற்கோ, உச்சநீதிமன்றத்திற்கோ செல்ல முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது. இதில் இருந்து மீள ஒரே வழி வழக்கறிஞர்களின் வழக்குக்கான கட்டணம், மணிநேரக் கட்டணம், மொத்த வழக்குக் கட்டணம் என வகைப்படுத்தி அறிவிக்க வேண்டும்.

உச்சநீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் கீழமை நீதிமன்றத்திற்கும் என தனித்தனிக் கட்டணம் உருவாக்கப்பட வேண்டும். இலட்சக்கணக்கில் வழக்கறிஞர்கள் திறமையாக இருந்தும் ஒருசில வழக்கறிஞர்கள் மட்டுமே இலட்சக்கணக்கில் கட்டணம் பெறுவதும், ஒரு சிலர் ஆயிரக்கணக்கிலும், ஒரு சிலர் நூற்றுக்கணக்கிலும் கட்டணம் பெறுவதும் வாடிக்கையாகி விட்டது. இதிலும் ஒரு வழிகாட்டுதல் நெறி வேண்டாமா?

இப்படிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தால்தான் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளைக் குறைக்கவும், பெருமளவில் சமரசத் தீர்வு மையங்கள் தொடங்கவும், நீதிபதிகள் நியமனம் நடைபெறவும் வாய்ப்பு கிட்டும். இவையெல்லாம் உச்சநீதிமன்றமும் மத்திய அரசும் செய்யுமா என எதிர்நோக்கிக் காத்திருப்போமாக.

–ஆசிரியர்

# தண்டனை வழங்கும் நீதி: கர்ம வினையின் திரையைத் தாண்டிய ஓர் அறைகூவல்

**மாண்புமிகு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ்**
**சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி**

சமீபத்திய நீதித்துறை மாநாடு ஒன்றில், ஒரு அடிப்படை கேள்வி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது: ஒருவருக்குக் குற்றம் நிரூபிக்கப்பட்ட பிறகு, அவருக்கு வழங்கப்படும் தண்டனை உண்மையிலேயே எந்த உன்னத நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்? பாதிக்கப்பட்டவர்கள் 'பழிவாங்கலை' எதிர்பார்க்கிறார்கள்; தங்களுக்கு இழைக்கப்பட்ட சொல்லொணாத் துயரத்திற்குப் பிறகு, குற்றவாளி தகுந்த தண்டனையை அனுபவித்துவிட்டார் என்ற மனநிறைவை அவர்கள் நாடுகிறார்கள். சமூகம் 'தடுப்பு நடவடிக்கையை' விரும்புகிறது; இது பொது அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் எதிர்கால குற்றங்களுக்கு எதிரான ஒரு அரணாக அமையும் என்று நம்புகிறது. நீதித்துறையும் அரசும், அளவிடப்பட்ட அபராதங்கள் மற்றும் தண்டனைகள் மூலம் பயனுள்ள நிர்வாகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் பறைசாற்றுகின்றன. இருப்பினும், தண்டனை பெற்ற நபரைப் பொறுத்தவரை, ஒரு பெரிய நிச்சயமற்ற நிலை நிலவுகிறது. சிறைவாசம் என்பது ஆன்மாவின் உண்மையான சீர்திருத்தத்தைத் தூண்டுமா? விடுதலையான பிறகு இந்தச் சந்தேகம் நிறைந்த சமூகம் அவரை ஏற்குமா? சிதைந்துபோன அவரது குடும்பம் அவருக்கு உறுதுணையாக நிற்குமா? இந்தக் கேள்விகள் மாநாட்டின் கூடாரங்களில் எதிரொலித்தன. இவை இந்தியாவின் பண்டைய கலாச்சார நம்பிக்கையான 'கர்மா' (வினைப்பயன்) என்பதோடு நுட்பமாகப் பிணைந்துள்ளன. மனிதர்களின் தீர்ப்புகள் தற்காலிக நிழல்கள் போல மறைந்துவிடும் என்றும், விதியின் இறுதி மற்றும் தப்பிக்க முடியாத நீதியே வெல்லும் என்பதும் இந்த நம்பிக்கையாகும். ஆனால், நமது சிறை அமைப்பின் நிதர்சனம் ஒரு ஆழமான சமத்துவமின்மையை வெளிப்படுத்துகிறது, இது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. 2025-ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் உள்ள 1,332 சிறைகளில் (நெருக்கடியான அறைகள் முதல் பரந்த திறந்தவெளி சிறைகள் வரை) சுமார் 5.77 லட்சம் கைதிகள் உள்ளனர். அதிர்ச்சியூட்டும் விதமாக, இவர்களில் கிட்டத்தட்ட 75% பேர் விசாரணைக் கைதிகள். இவர்களில் 80% பேர் ஏழைகள், விளிம்புநிலை மக்கள் மற்றும் ஆதரவற்றோர்: மலைப்பகுதிகளில் இருந்து வந்த பழங்குடித் தொழிலாளர்கள், நகர்ப்புறச் சேரிகளில் வாழ்பவர்கள் மற்றும் உயிர் பிழைப்பதற்காகத் திருட்டு போன்ற சிறு குற்றங்களில் சிக்கிய தினசரி கூலித் தொழிலாளர்கள். சட்ட உதவிக்கோ அல்லது ஜாமீன் பெறுவதற்கோ அடிப்படை வசதிகள் இல்லாததால், அவர்கள் காலவரையறையின்றி சிறையில் வாடுகிறார்கள். இதற்கு நேர்மாறாக, வசதி படைத்தவர்களும், செல்வாக்கு மிக்கவர்களும், அரசியல் தொடர்பு உள்ளவர்களும் உயர்மட்ட வழக்கறிஞர்களைக் கொண்டு, சில நாட்களிலேயே, ஏன் சில மணிநேரங்களிலேயே விடுதலையைப் பெற்றுவிடுகிறார்கள். தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் இந்த வேறுபாட்டை அப்பட்டமாகக் காட்டுகின்றன: 90% விசாரணைக் கைதிகள் ஏழ்மையான பின்னணியைச் சேர்ந்தவர்கள், நீதிமன்றங்களின் தேக்க நிலையால் பல ஆண்டுகள் சிறையிலேயே கழிக்கிறார்கள்; ஆனால் செல்வந்தர்களோ ஆடம்பரங்களுக்கு மத்தியில் தற்காலிக விடுதலையை அனுபவிக்கிறார்கள். இந்த வர்க்க அடிப்படையிலான அநீதியைக் காணும் சமூகம், 'வலிமைமிக்க தீயவர்களை விதி ஒருநாள் தண்டிக்கும்' என்ற கர்ம வினைத் தத்துவத்தைக் கூறித் தன்னைத் தேற்றிக்கொள்கிறது. ஆனால் இத்தகைய தத்துவ ரீதியான ஆறுதல் ஒரு ஆபத்தான திரையாகும்; இது செல்வம் சுதந்திரத்தை விலைக்கு வாங்குவதையும், வறுமை நிரந்தர விலங்குகளைப் பூட்டுவதையும் மறைக்கிறது. பியோதர் தஸ்தயேவ்ஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்' நாவல் இந்த மனப்போராட்டத்தை மிகச்சிறப்பாகப் பகுப்பாய்வு செய்கிறது. ஒரு கைதியின் ஆழமான வேதனை என்பது இரும்பு கம்பிகளாலோ அல்லது உடல் ரீதியான இழப்புகளாலோ வருவதல்ல, மாறாக மனசாட்சியின் இடைவிடாத சாட்டையடியால் ஏற்படுகிறது: 'நீங்கள் பாவம் செய்தால், நீங்கள் அறிந்தோ அறியாமலோ துன்பப்பட வேண்டும்.'

இந்த காலமற்ற நுண்ணறிவு தண்டனை வழங்கலின் மிக உயர்ந்த சாத்தியத்தை வெளிப்படுத்துகிறது – வெறும் சிறைவாசம் மட்டுமல்ல, உள்ளிருந்து எழும் தார்மீக விழிப்புணர்வே உண்மையான தண்டனை. தண்டனை என்பது பல நோக்கங்களுக்காகச் செயல்படுகிறது. நிர்பயா வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டபோது, அது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு தற்காலிக ஆறுதலை அளித்தது. இருப்பினும் சமூக மாற்றம் இல்லாமல் உண்மையான குணமடைதல் சாத்தியமில்லை. போக்ஸோ போன்ற கடுமையான சட்டங்கள் அச்சத்தை ஏற்படுத்தினாலும், இந்தியாவில் அது தோல்வியையே சந்திக்கிறது: சிறைகளில் நிலவும் 118% இடநெருக்கடி மற்றும் வன்முறை காரணமாக, சிறு குற்றங்களுக்காக உள்ளே வரும் ஏழைகள் சில காலத்திலேயே கொடூரமான குற்றவாளிகளாக மாறுகிறார்கள். 'மறுவாழ்வு' என்பதே ஒரு தண்டனையின் உன்னதமான இலக்காக இருக்க வேண்டும். தையல், தச்சு வேலை, கல்வி மற்றும் யோகா போன்ற பயிற்சிகள் மூலம் கைதிகளை மாற்றுவது அவசியம். தமிழகத்தின் கிராமப்புறத்தைச் சேர்ந்த ஒரு முன்னாள் கைதி, சிறையிலிருந்து வெளிவந்து நிலையான விவசாயத் தொழிலைத் தொடங்கி, தனது குடும்பத்தோடும் ஊரோடும் இணைந்தது போன்ற ஒரு சில வெற்றிக் கதைகள் இருந்தாலும், முறையான ஆலோசகர்கள் மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் இல்லாததால் பெரும்பாலான ஏழைகளுக்கு இத்திட்டங்கள் எட்டாக்கனியாகவே உள்ளன. சமூக இழிவு என்பது ஒரு மிகப்பெரிய தடையாக உள்ளது. குறிப்பாகத் தமிழ்நாட்டின் பழமைவாத கிராமப்புறங்களில் 'ஒருமுறை திருடியவன் எப்போதும் திருடன் தான்' என்ற வசவுச் சொற்கள் சிறை வடுக்களை விட ஆழமான காயங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் 60% முன்னாள் கைதிகள் சமூகத் தனிமைக்கு ஆளாகி, மீண்டும் குற்றச் செயல்களிலேயே ஈடுபடுகிறார்கள். ஆனால் மேல்தட்டு மக்களோ, தங்களின் குற்றங்களைச் செல்வாக்கின் மூலம் மறைத்துவிட்டு எளிதாகச் சமூகத்தில் இணைந்துவிடுகிறார்கள். கர்ம வினைத் தத்துவம் செயல்களுக்கான பலனை உறுதி செய்தாலும், அது ஒருவிதமான மெத்தனப் போக்கை உருவாக்கி, நிறுவனங்களின் முடக்கத்தை நியாயப்படுத்துகிறது. தண்டனை வழங்கும் முறை இனி மாற வேண்டும்: பாதிக்கப்பட்டவர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் இடையிலான நீதி மீட்பிற்கான உரையாடல், சமூக சேவை மூலம் இழப்பீடு? வழங்குதல் மற்றும் நலிந்த பிரிவினருக்கான வாழ்வாதார உதவிகள் போன்றவை முன்னெடுக்கப்பட வேண்டும். 'கண்ணுக்குக் கண் என்பது ஒட்டுமொத்த உலகையும் குருடாக்கிவிடும்' என்ற மகாத்மா காந்தியின் பொன்மொழி. பழிவாங்கலை விடக் கருணையே மேலானது என்பதை வலியுறுத்துகிறது. நார்வே நாட்டின் மாதிரி இதற்கு ஒரு சிறந்த உதாரணம்: கல்வி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய மனிதாபிமான சிறைச்சாலைகள் அங்கு குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்வதை 20% ஆகக் குறைத்துள்ளன. இந்தியாவின் ராஜஸ்தானில் உள்ள திறந்தவெளி சிறைகள், கேரளாவின் இடைநிலை இல்லங்கள் மற்றும் புதுச்சேரி காலாப்பட்டு மத்திய சிறையில் கைதிகள் இயற்கை விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவது போன்ற முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. இவை ஏழைக் கைதிகளை மையமாகக் கொண்டு மேலும் விரிவாக்கப்பட வேண்டும். விசாரணைக் கைதிகளில் 90% பேர் ஏழைகளாக இருப்பதும், செல்வந்தர்கள் எளிதில் தப்பிப்பதும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள 'சமத்துவ உரிமை'யைப் பறிப்பதாகும். இதற்கான தீர்வாக, இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையங்கள், குடும்பத்தோடு மீண்டும் இணைப்பதற்கான திட்டங்கள், சிறு குற்றவாளிகளுக்கான விரைவு நீதிமன்றங்கள் மற்றும் சமூக விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் அவசியம். இந்த மாநாட்டின் அறைகூவல் இதுதான்: தண்டனை என்பது வெறும் தீர்ப்பு மட்டுமல்ல, அது ஒருவரின் விதியை வடிவமைப்பது. சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அது ஒரு புதிய விடியலாக அமையட்டும். சட்டத்தில் கருணையை இணையுங்கள். இந்தியா தனது புனிதமான நீதிப் பிரமாணத்தைக் காக்கட்டும். சிறைச்சாலைகளைத் தண்டனைப் படுகுழிகளாக மாற்றாமல், மாற்றத்திற்கான கூடங்களாக மாற்றுவோம். மீட்டெடுக்கப்படும் ஒவ்வொரு உயிரும் இந்த நாட்டைச் சமத்துவத்தை நோக்கி இட்டுச் செல்லும்.

**(நன்றி:லைவ்லா இணையதளம். கட்டுரையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில்பணியாற்றும் நீதிபதி)**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத்,மதுரை**

# உள்நோக்கத்துடன் வழக்கறிஞர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ரத்து; புகார்தாரர் மற்றும் பார் கவுன்சிலுக்கு அபராதம் விதித்து தீர்ப்பு

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி விக்ரம் நாத்**
**மாண்புமிகு நீதிபதி சந்தீப் மேத்தா**
SLP (C) 27606/2023, SLP (C) 1492/2024
2025 (6) CTC 87
**நாள்: 24 செப் 2025**

**மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம்** ...**மேல்முறையீட்டாளர்(கள்)**

**–எதிர்–**

**ராஜீவ் நரேஷ்சந்திர நருலா மற்றும் பலர்** ...**எதிர்மனுதாரர்(கள்)**

SLP (C) 27606/2023

## தீர்ப்பு:

**நீதிபதி திரு. மேத்தா**

1. தரப்பினர்கள் கேட்டறியப்பட்டது.

2. சிறப்பு அனுமதி அனுமதிக்கப்படுகிறது

3. மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம், 2023ஆம் ஆண்டின் ஒழுங்கு நடவடிக்கை வழக்கு எண் 27–ல் மேல்முறை யீட்டாளரான மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றத்தால் 06 ஜுலை 2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு தடை விதித்து, பம்பாய் உயர்நீதிமன்றத்தால் நீ.பே. மனு (L) எண் 23662/2023–ல் 04 நவம்பர் 2023 அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை எதிர்த்து, சிறப்பு அனுமதி கோரும் மேல்முறையீடு எங்கள் முன் முன்னிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவு பின் வருமாறு:

**'சான்றாவணம் – ''அ''**

புகார்தாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பை விசாரித்த பிறகும், பதிவேட்டில் உள்ள ஆவணங்களை முழுமையாகப் பரிசீலித்த பிறகும், வழக்கறிஞர்கள் சட்டம் பிரிவு 35–ன் கீழ் உள்ள அதிகார வரம்பைப் பயன்படுத்தி புகார்தாரர் ஒரு முகாந்திரத்தை உருவாக்கி யுள்ளார் என்பது எனது கருத்தாகும்;

எதிர்மனுதாரருக்கு எதிராக புகார்தாரரால் முகநிலை வழக்கு உள்ளதென நிரூபிக்கப் பட்டுள்ளது. எனவே, நான் பின்வரும் உத்தரவைப் பிறப்பிக்கிறேன்.

**உத்தரவு**

**நீதிபதி ஆஷிஷ் பி. தேஷ்முக்,**
06.07.2023

சட்டத்தின்படி மேலும் விசாரணை மற்றும் தீர்வுகாணலுக்காக புகார் ஒழுங்குமுறைக் குழுவிற்கு இந்த வழக்கு பரிந்துரைக்கப் படுகிறது.

4. மேற்கண்ட உத்தரவின் மூலம், நீதிபதி –வழக்கறிஞரின் புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார் மற்றும் 1961ஆம் ஆண்டின் வழக்கறிஞர்கள் சட்டத்தின் 35ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறை முறைகேடு குற்றச்சாட்டுக்காக, 1ஆம் எதிர்மனுதாரரான திரு.ராஜீவ் நருலாவிற்கு எதிராக விசாரணை நடத்த வழக்கறிஞர் பெருமன்றத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கு பரிந்துரைக்க உத்தர விட்டார்.

5. இந்த புகாரானது கிம்ஜி தேவ்ஜி பார்மர் என்பவரால் 2022ஆம் ஆண்டில் எதிர்மனு தாரரான வழக்கறிஞருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. அதில், திருவாளர்கள் வோல்கா

எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் செயல்படும் நிறுவனத்தில் தாரா நாரிமன் சர்க்காரியின் கூட்டாளியாக வாழ்ந்த தேவ்ஜி பார்மர் என்பவரின் வாரிசு தான் என்று அவர் கோரியிருந்தார். திரு. தேவ்ஜி பார்மர் 2009ஆம் ஆண்டில் கால மானார். அதன் பிறகு புகார்தாரர் அவரது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மரபுரிமை யாகப் பெற்றார்.

6. மலாட் தாலுகா, வல்னை கிராமத்தில் பழைய புல எண் 30 ஹிஸ்ஸா எண் 4 (P), CTS எண்கள் 433 மற்றும் 438 ஆகியவற்றைக் கொண்ட நிலத்தின் உரிமையாளராக நுஸ்லி ராண்டேலியா என்பவர் இருந்தார் என்றும், அவர் அதனை தாரா நாரிமன் சர்க்காரிக்கு குத்தகைக்கு விட்டிருந்தார் என்றும் புகார்தாரர் ஒரு வழக்கை முன்வைத்தார்.

7. திரு. தேவ்ஜி பார்மர் கூட்டாளியாக இருந்த திகள். வோல்கா எண்டர்பிரைசஸ் நிறுவனத் துடன் நுஸ்லி ராண்டேலியா ஒரு மேம்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தார், மேலும் அந்த தகுதியில் அவர் (பார்மர்) அந்த சொத்தை சுவாதீனத்தில் வைத்திருந்தார். மேற்கண்ட நிலம் தொடர்பாக பம்பாய் சிறு வழக்கு களுக்கான நீதிமன்றத்தில் தாரா நாரிமன் சர்க்காரியால் வழக்கு எண் 1129/1987 தொடரப்பட்டது. அதில் நுஸ்லி ராண்டேலியா மற்றும் அந்தச் சொத்தின் மீது உரிமை கோரிய திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் ஆகியோருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டது.

8. திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தால் தொடரப்பட்டு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இதேபோன்ற மற்றொரு வழக்கான எண் 2541/1985-ல் தாரா நாரிமன் சர்க்காரி ஏற்கனவே ஒரு தரப்பு-பிரதிவாதியாக (பிரதிவாதி எண் 2) சேர்க்கப்பட்டுள்ளார் என்ற காரணத்தால், அவரது உரிமைகள் அதில் தீர்மானிக்கப்படும் என்பதால் இந்த வழக்கு (1129/1987) தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. திகள். வோல்கா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் கூட்டாளி என்ற முறையில் சொத்தின் மீதான தனது உரிமை சார்ந்த வழக்கு எண் 2541/1985 நிலுவையில் இருப்பதாக தனது தந்தை தன்னிடம் எப்போதும் கூறுவார் என்று புகார்தாரர் கூறினார்.

9. புகார்தாரரின் தந்தை திரு.தேவ்ஜி பார்மர் 2009ஆம் ஆண்டில் காலமானார், அதன் பிறகு அவர் வழக்கின் நிலை குறித்து விசாரித்த போது, சமரச நிபந்தனைகளின்படி வழக்கு தீர்த்து வைக்கப்பட்டு முடிக்கப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அதன் பிறகு, அவர் தாரா நாரிமன் சர்க்காரியை அணுக முயன்றார். ஆனால் பல முயற்சிகள் செய்தபோதிலும், கடைசியாக அறியப்பட்ட முகவரியில் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. புகார்தாரர் நுஸ்லி ராண்டேலியாவைக் கண்டறியும் முயற்சிகளை யும் மேற்கொண்டார். ஆனால் அதுவும் பலனளிக்கவில்லை. இதையடுத்து, புகார்தாரர் தனது தந்தையின் வழக்கறிஞரைத் தொடர்பு கொண்டு கேள்விக்குரிய வழக்கு தொடர்பான ஆவணங்களை சேகரித்தார். அதனைப் பரிசீலித்ததில், அந்த வழக்கின் வாதியான திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் 1ஆம் பிரதி வாதியான நுஸ்லி ராண்டேலியா ஆகியோர், 2ஆம் பிரதிவாதியான தாரா நாரிமன் சர்க்காரி யின் அறிவு மற்றும் சம்மதம் இல்லாமல் ஒரு சமரசத் தீர்ப்பாணையை பெற்றுள்ளனர் என்பதை அறிந்து கொண்டார். புகார்தாரர் தாரா நாரிமன் சர்க்காரியின் இருப்பிடத்தைத் தேடுவதைத் தொடர்ந்தார், முடிவில் அவர் இறந்துவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டார்.

10. புகார்தாரரின் கூற்றுப்படி, அவரது தந்தை தாரா நாரிமன் சர்க்காரியுடன் M/s.வோல்கா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் ஒரு கூட்டாளியாக இருந்தார். எனவே, 1991இல் தாரா நாரிமன் சர்க்காரியின் மரணத்திற்குப் பிறகு, அவரது தந்தை தேவ்ஜி பார்மர், கூட்டாண்மை நிறுவனத்தின் எஞ்சியிருக்கும் ஒரே கூட்டாளியாக அதன் அனைத்து உரிமை களையும் தொடரவும் பாதுகாக்கவும் தகுதி பெற்றார். தேவ்ஜி பார்மரின் மரணத்தைத் தொடர்ந்து, புகார்தாரர் மற்றும் தேவ்ஜி பார்மரின் பிற வாரிசுகள் அத்தகைய உரிமை களை மரபுரிமையாகப் பெற்றனர்.

11. வழக்கு நிலுவையில் இருந்தபோது, நுஸ்லி ராண்டேலியா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திடீரென மாற்றப்பட்டதாக புகார் தாரர் மேலும் குற்றம் சாட்டினார். 3ஆம்

எதிர்மனுதாரரான வழக்கறிஞர் திருமதி ஷீத்தல் டி.மிஸ்ரா, முந்தைய வழக்கறிஞரிடமிருந்து ‘தடையின்மை சான்றிதழ்’ பெறாமல், 06 ஜூன் 2005 அன்று நுஸ்லி ராண்டேலியா சார்பாக வக்காலத்து தாக்கல் செய்தார். வக்காலத்து தாக்கல் செய்யப்பட்ட உடனேயே, அந்த வழக்கில் திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் நுஸ்லி ராண்டேலியா இடையே சமரச நிபந்தனைகள் எட்டப்பட்டன. இந்தச் செயல், நுஸ்லி ராண்டேலியாவை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்த, முந்தைய வழக்கறிஞரின் கவனத்திற்குச் செல்லாமலேயே நடந்தது. தாரா சர்க்காரிக்குத் தெரிவிக்காமலும், அந்தச் சமரச நிபந்தனைகளில் அவரது கையொப்பத்தைப் பெறாமலும் ஒரு சமரசத் தீர்ப்பாணை பெறப் பட்டது.

12. புகார்தாரரின் கூற்றுப்படி, தாரா நாரிமன் சர்க்காரி இந்த வழக்கில் ஒரு தரப்பினர் என்பதை யும், அவர் சமரச நிபந்தனைகளில் கையொப்ப மிடவில்லை என்பதையும் உயர்நீதிமன்றத்திடம் இருந்து எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் மறைத்து ள்ளார். வழக்கின் வாதியான திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் சார்பில் ஆஜரான வழக்கறிஞரின் இந்தத் திட்டமிட்ட மறைப்பு நடவடிக்கையானது, முக்கியமான உண்மையை மறைத்ததற்கு ஒப்பாகும். இதன் மூலம் தாரா நாரிமன் சர்க்காரி மற்றும் தேவ்ஜி பார்மரின் சட்டபூர்வமான வாரிசுகள் ஏமாற்றப்பட்டு, வழக்குச் சொத்தில் அவர்களுக்குள்ள நியாயமான பங்கை இழக்கச் செய்யப்பட்டுள்ளனர்.

13. வழக்குச் சொத்தில் தாரா நாரிமன் சர்க்காரி மற்றும் திகள். வோல்கா எண்டர் பிரைசஸ் ஆகியோரின் உரிமைகளை அங்கீகரிக்காமலேயே சமரச நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டன என்று புகார்தாரர் தரப்பில் மேலும் வாதிடப்பட்டது. சமரச நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மறுபயன் தொகை நுஸ்லி ராண்டேலியாவுக்குச் சென்றிருக்காது என்றும், நீதிமன்றத்தின் முன் அவருக்குப் பதிலாக வேறு யாராவது ஆள்மாறாட்டம் செய்திருக்கலாம் என்றும், அவரது கையொப்பங்கள் போலியாகப் புனையப்பட்டிருக்கலாம் என்றும் அவர் சந்தேகம் தெரிவித்தார்.

14. புகார்தாரரின் கூற்றுப்படி, சமரச நிபந்தனைகளை நிறைவேற்ற நுஸ்லி ராண்டேலியாவைத் தவிர வேறு யாராவது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கலாம், அல்லது அதிக வாய்ப்பாக, நுஸ்லி ராண்டேலியா மீது வற்புறுத்தல்/மிரட்டல் பிரயோகிக்கப்பட்டு, எவ்வித மறுபயனும் இன்றி சமரச நிபந்தனை களில் கையெழுத்திடுமாறு அவர் தூண்டப்பட்டு, அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கலாம். நுஸ்லி ராண்டேலியாவைக் காணவில்லை என்ப தாலும், அவருடைய இறப்புச் சான்றிதழும் கிடைக்கவில்லை என்பதாலும், அவர் கடத்தப் பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் புகார்தாரர் ஊகித்தார்.

15. புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கறிஞர்கள், இந்த மோசடியான பரிவர்த்தனைகள் மூலம் நேரடிப் பயனாளிகள் என்பதால், அவர்கள் இந்தக் குற்றத்தில் உடந்தையாக இருந்தனர் என்று புகார்தாரர் மேலும் குற்றம் சாட்டினார். இந்தப் புகாரின் அடிப்படையில், மகாராஷ்டிரா மற்றும் கோவா பெருமன்றத்தின் நடுவர் நீதிபதி–வழக்கறிஞர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 06 ஜூலை 2023 தேதியிட்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

16. எதிர்மனுதாரரான திரு. ராஜீவ் நருலா, இந்த ஒழுங்கு நடவடிக்கைப் புகாருக்குப் பதிலளிக்கும் வகையில் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அதில், முக்கியமான உண்மைகளை மறைத்தே இந்தப் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். கேள்விக்குரிய நிலம் தொடர்பாக நுஸ்லி ராண்டேலியாவால் தொடரப்பட்ட வேறு பல வழக்குகள் அவருக்கு எதிராகவே தீர்ப்பளிக்கப்பட்டன என்றும், அனைத்து சட்ட நடவடிக்கைகளிலும் தோற்ற பிறகு, நீதிமன்ற உத்தரவுகள்/தீர்ப்பாணைகளை முறியடிக்கும் நோக்கில் தாரா சர்க்காரிக்கு சில உரிமைகளை உருவாக்குவது போல் ஒரு ஆவணத்தை நுஸ்லி ராண்டேலியா போலியாகத் தயாரித்தார் என்றும் கூறினார்.

17. இந்த மோசடியை அறிந்துகொண்டதும், நுஸ்லி ராண்டேலியாவால் போலியாகத் தயாரிக்கப்

பட்டதாகக் கூறப்படும் அனைத்து ஆவணங்களையும் பறிமுதல் செய்யக் கோரி, திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் 1987ஆம் ஆண்டின் அறிவிப்பு மனு எண். 2903-ஐ தாக்கல் செய்தது.

18. இதன் விளைவாக, நுஸ்லி ராண்டேலியா நம்பியிருந்த அனைத்து ஆவணங்களையும் பறிமுதல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தர விட்டது. உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது, பேச்சுவார்த்தைகள் நடந்தன, அதன் அடிப்படையில் தகராறுகள் தீர்க்கப்பட்டு சமரச நிபந்தனைகள் வரையப் பட்டன. அதன்படி, வழக்குச் சொத்து தொடர்பாக தனக்கு எந்த உரிமையும், தலைப்பும், பங்கும் இல்லை என்பதை நுஸ்லி ராண்டேலியா உறுதிப் படுத்தினார். அதற்கேற்ப, உயர்நீதிமன்றம் சமரச நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, அந்தச் சொத்தின் மீது நியமிக்கப்பட்டிருந்த அதிகாரியை விடுவித்ததுடன், சொத்தின் சுவாதீனத்தை திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷனிடம் ஒப்படைக்க உத்தர விட்டது.

19. மேல்முறையீட்டாளரான வழக்கறிஞர் பெருமன்றம் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உத்தரவுக்கு எதிரான இந்த வழக்கு முதிர்ச்சியடையாத தன்மையுடையது என்று கடுமையாகவும் தீவிரமாகவும் வாதிட்டார். கிம்ஜி தேவ்ஜி பார்மர் அளித்த செல்லுபடியாகும் புகாரின் பேரில் வழக்கறிஞர் பெருமன்றத்தின் நீதிபதி-வழக்கறிஞர் பிறப்பித்த இடைக்கால பரிந்துரை உத்தரவுக்கு எதிராக எதிர்மனு தாரர்-வழக்கறிஞர் தாக்கல் செய்த ரிட் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றிருக்கக் கூடாது என்றும் வாதிட்டார்.

20. ஒரு புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் கட்டத்தில், விரிவான காரணங்கள் தேவையில்லை என்றும், முறைகேட்டிற்காக வழக்கறிஞருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முகாந்திரம் உள்ளது என்ற பரிந்துரை உத்தரவில் உள்ள முடிவே, புகாரை ஒழுங்குநடவடிக்கைக் குழுவிற்கு பரிந்துரைக்கப் போதுமானது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தில் பிறப்பிக்கும் உத்தரவுகளை இந்திய வழக்கறிஞர் பெருமன்றம் முன்பு மேல்முறையீடு செய்து சவால் செய்ய முடியும்.

21. எனவே, பரிந்துரை உத்தரவுக்கு எதிராக எதிர்மனுதாரர்-வழக்கறிஞர் தாக்கல் செய்த நீ.பே. மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டதிலும், ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் முன்பான நடவடிக்கைகளுக்குத் தடை விதித்த திலும் உயர்நீதிமன்றம் அப்பட்டமான அதிகார வரம்புப் பிழையை செய்துள்ளதாக அவர் தனது வாதத்தில் வலியுறுத்தினார்.

22. இதற்கு மாறாக, எதிர்மனுதாரர் -வழக்கறிஞர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், திரு. கிம்ஜி தேவ்ஜி பார்மர் தாக்கல் செய்த புகார் வெளிப்படையாகவே தீய நோக்கம் கொண்டது மற்றும் உள்நோக்கம் கொண்டது என்று தீவிரமாக வாதிட்டார்.

23. எதிர்மனுதாரர் புகார்தாரருக்காக ஆஜராக வில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை யாகும். எனவே, எதிர் தரப்பின் வழக்கறிஞருக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது சட்ட நடை முறைகளை அப்பட்டமாக துஷ்பிரயோகம் செய்வதற்கு இணையானதாகும்.

24. மூல வழக்கில் பதிவு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய சமரச நிபந்தனைகளைத் திரும்பப் பெறும் அல்லது ரத்து செய்யும் எந்த உத்தரவும் இன்றுவரை இல்லை என்றும், எனவே இந்தப் புகாருக்கு எந்த அடிப்படையும் இல்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, நீதிப்பேராணை கோரும் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு, மேலும் நடைபெறும் நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றம் தடை விதித்தது நியாய மானதே.

25. ஜுலை 6, 2023 தேதியிட்ட உத்தரவில், எந்த அடிப்படையில் புகார் ஒழுங்குமுறைக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டது என்பதோ அல்லது எதிர்மனுதாரர்-வழக்கறிஞருக்கு எதிராக கூறப்பட்டுள்ள மிகச் சிறிய குற்றச்சாட்டுகளோ கூடக் குறிப்பிடப்படவில்லை என்று மேலும் வாதிடப்பட்டது. புகார்தாரர் 1961ஆம் ஆண்டின் சட்டத்தின் 35வது பிரிவின் கீழ் அதிகார

வரம்பைப் பயன்படுத்துவதற்கான முகாந்திரத்தை உருவாக்கியுள்ளார் என்று ஒரு மர்மமான திருப்தி மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் பெருமன்றம் போன்ற ஒரு ஒழுங்குமுறை அமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு வழக்கறிஞருக்கு எதிராகத் தொழில்முறை முறைகேட்டிற்காக நடவடிக்கை எடுக்க உத்தேசித்தால், புகாரை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்குப் பரிந்துரைக்கும் முன்பாக, புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து குறைந்தபட்ச அளவிலான விவாதமாவது செய்யப்படுவது அவசியம்.

26. இந்தக் காரணங்களின் அடிப்படையில், பார் கவுன்சில் முன்பு நிலுவையில் உள்ள ஒழுங்குமுறைக் குழுவின் முழு நடவடிக்கைகளையும் ரத்து செய்யுமாறும், மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யுமாறும் எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் நீதிமன்றத்திடம் மன்றாடினார்.

27. இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களையும் நாங்கள் கேட்டோம் மற்றும் பதிவேட்டில் உள்ள ஆதாரங்களை ஆராய்ந்தோம்.

28. தற்போதைய வழக்கானது ஒரு இடைக்கால உத்தரவிலிருந்து எழுகிறது என்பதால், சாதாரண சூழ்நிலையாக இருந்திருந்தால், இந்த சிறப்பு அனுமதி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நீ.பே. மனுவைத் தொடருமாறு தரப்பினரை நாங்கள் அறிவுறுத்தியிருப்போம். இருப்பினும், தரப்பினர் தாக்கல் செய்த வாதங்களை, பதிவேட்டில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மற்றும் குறிப்பாக, மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம் முன்பு விசாரிக்கப் படவிருந்த எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் தாக்கல் செய்த எதிருரைப் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மிகத் தெளிவான மற்றும் அப்பட்டமான உண்மைகளைப் பரிசீலித்த பிறகு, புகாரின் மீதான முழு நடவடிக்கைகளையும் ரத்து செய்ய இந்திய அரசியலமைப்பின் 136 வது பிரிவின் கீழ் உள்ள அதன் அதிகார வரம்பைப் பயன்படுத்த இந்த நீதிமன்றம் தீர்மானித்து உள்ளது.

29. உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் ஒருபோதும் நுஸ்லி ராண்டேலியா, தாரா சர்க்காரி அல்லது திகள். வோல்கா எண்டர்பிரைசஸ் சார்பாக ஆஜராக வில்லை என்பது இரு தரப்பினரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் சமரச நிபந்தனைகளில் திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷனின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி என்று வாதியை அடையாளப்படுத்தியுள்ளார் மட்டுமே, அந்தச் சமரச நிபந்தனைகள் இன்றுவரை எந்த இடையூறும் இன்றி உள்ளன. எனவே, வாதியை அடையாளப்படுத்திய காரணத்திற்காக மட்டுமே, எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் 1961ஆம் ஆண்டின் சட்டத்தின் 35வது பிரிவின் கீழ் நடவடிக்கைகளை எதிர் கொள்ள பொறுப்பாளியாக முடியாது.

30. உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட சமரச நிபந்தனைகள் தொடர்ந்து செல்லுபடியாகின்றன என்பதிலும், அவை திரும்பப் பெறப் படவோ அல்லது ரத்து செய்யப்படவோ இல்லை என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்தச் சமரச நிபந்தனைகளில் வாதியை அடையாளப்படுத்தும் பணி மட்டுமே எதிர்மனுதாரர்–வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனவே, வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே எட்டப்பட்ட சமரச நிபந்தனைகளை கேள்விக்குள்ளாக்கும் எந்தவொரு பிரச்சினையையும் எழுப்ப யாரையும் அனுமதிக்க முடியாது என்பது எங்களின் உறுதி யான கருத்தாகும்.

31. தேவ்ஜி பார்மர் இந்த வழக்கில் ஒரு தரப்பினர் அல்ல. வழக்குச் சொத்தில் தேவ்ஜி பார்மருக்கு ஏதேனும் உரிமை அல்லது கோரிக்கை இருப்பதற்கான முகாந்திரம் இருந்திருந்தால், நுஸ்லி ராண்டேலியா கண்டிப்பாக அவரை வழக்கில் ஒரு தரப்பினராகச் சேர்க்கக் கோரியிருப்பார். அதுமட்டுமின்றி, வழக்கு வளாகம் தொடர்பான தகராறில் திகள். வோல்கா எண்டர்பிரைசஸ் என்று அழைக்கப் படும் நிறுவனத்திற்கு எந்தப் பங்கும் இருப்பதாக நுஸ்லி ராண்டேலியா ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை.

32. எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் புகார்தாரர் அல்லது அவரது முன்னோடியான தேவ்ஜி

பார்மர் சார்பாக ஆஜராகவில்லை என்பதால், 1961 ஆம் ஆண்டின் சட்டத்தின் 35வது பிரிவின் அர்த்தத்திற்குள் கூறப்படும் முறை கேட்டிற்கான புகாரில் அவரைச் சேர்த்ததற்கு எந்த நியாயமும் இல்லை.

33. எதிர்மனுதாரர்–வழக்கறிஞருக்கும் புகார்தாரருக்கும் இடையே எந்தத் தொழில் முறை உறவும் இல்லை என்ற காரணத்திற் காகவே நாங்கள் இதைச் சொல்கிறோம். உயர் நீதிமன்ற வழக்கில் எதிர் தரப்பின் வழக்கறிஞராக இருந்த அவரை விசாரிப்பது மிகவும் ஆட்சேபனைக்குரியது, முற்றிலும் அனுமதிக்க முடியாதது மற்றும் முற்றிலும் தேவையற்றது. பொதுவாக, புகார்தாரருக்கும் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கும் இடையே ஒரு சட்டபூர்வமான உறவு இருப்பது ‘தொழில்முறை முறைகேடு’ என்ற அடிப்படையில் ஒழுங்குமுறை அதிகார வரம்பைப் பயன்படுத்துவதற்கான முன் நிபந்தனையாகும்.

34. எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் வாதியை வெறுமனே அடையாளப்படுத்தாமல், வழக்கில் வாதியான திகள். யூனிக் கன்ஸ்ட்ரக்ஷன் சார்பாக உண்மையில் ஆஜராகி வழக்காடியிருந்தாலும் கூட; அந்தச் செயலை மட்டுமே 1961 ஆம் ஆண்டின் சட்டத்தின் 35 வது பிரிவின் அர்த்தத்திற்குள் முறைகேடு என்று குறிப்பிட முடியாது என்பதே எங்களின் தீர்க்கமான கருத்தாகும். ஏனெனில் வழக்கறிஞர் மீது சுமத்தப்படும் செயல்களை, அப்படியே எடுத்துக் கொண்டாலும், தொழில்முறையான அல்லது வேறுவிதமான முறைகேடாகக் கருத முடியாது.

35. 1961 ஆம் ஆண்டின் வழக்கறிஞர்கள் சட்டத்தின் 35 வது பிரிவின் திட்டம் என்ன விளக்குகிறது என்றால், மாநில வழக்கறிஞர் பெருமன்றத்திடம் ஒரு புகார் பெறப்படும்போது, அதன் பதிவேட்டில் உள்ள எந்தவொரு வழக்கறிஞரும் தொழில்முறை அல்லது பிற முறைகேடுகளில் குற்றவாளி என்று நம்புவதற் கான காரணங்களை அது பதிவு செய்ய வேண்டும். அதன் பின்னரே விஷயத்தை தீர்வு காணலுக்காக ஒழுங்குநடவடிக்கைக் குழுவிற்கு பரிந்துரைக்க முடியும். உடனடியாகப் பார்ப்ப தற்காக, சட்டத்தின் 35 வது பிரிவு கீழே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது:

‘35. முறைகேட்டிற்காக வழக்கறிஞர்களுக்குத் தண்டனை. (1) ஒரு புகார் பெறப்பட்டாலோ அல்லது வேறு வகையிலோ, ஒரு மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் பதிவேட்டில் உள்ள எந்தவொரு வழக்கறிஞரும் தொழில் முறை அல்லது பிற முறைகேடுகளில் குற்றவாளி என்று நம்புவதற்கு அதற்கு முகாந்திரம் இருந்தால், அது அந்த வழக்கை தனது ஒழுங்குமுறைக் குழுவிற்குத் தீர்வு காணலுக்காகப் பரிந்துரைக்க வேண்டும்.

[(1A) மாநில வழக்கறிஞர் பெருமன்றம், தானாக முன்வந்தோ அல்லது ஆர்வம் உள்ள நபர் எவரேனும் அளிக்கும் விண்ணப்பத்தின் பேரிலோ, தனது ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் முன் நிலுவையில் உள்ள ஒரு நடவடிக்கையைத் திரும்பப் பெறலாம் மற்றும் அந்த விசாரணையை அதே மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் வேறு ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவால் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தலாம்.]

(2) ஒரு மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் ஒழுங்குநடவடிக்கைக் குழு வழக்கின் விசாரணைக்கான தேதியை நிர்ணயம் செய்ய வேண்டும் மற்றும் அது தொடர்பான அறிவிப்பைச் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கும் மாநிலத்தின் அரசு தலைமை வழக்கறிஞருக்கும் வழங்கச் செய்ய வேண்டும்.

(3) ஒரு மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் ஒழுங்குநடவடிக்கைக் குழு, சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கும் அரசு தலைமை வழக்கறிஞருக்கும் கேட்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பை அளித்த பிறகு, பின்வரும் உத்தரவுகளில் ஏதேனும் ஒன்றைப் பிறப்பிக்கலாம். அதாவது: (a) புகாரைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது, மாநில பார் கவுன்சிலின் தூண்டுதலின் பேரில் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தால், நடவடிக்கைகளைக் கோப்பிட உத்தரவிடலாம்; (b) வழக்கறிஞரைக் கண்டிக்கலாம்; (c) பொருத்த மானது என்று கருதும் காலத்திற்கு வழக்கறிஞரைப் பயிற்சி செய்வதிலிருந்து இடைநீக்கம் செய்ய

லாம்; (d) வழக்கறிஞர்களின் மாநிலப் பதிவேட்டிலிருந்து வழக்கறிஞரின் பெயரை நீக்கலாம்.

(4) துணைப்பிரிவு (3)–ன் உட்பிரிவு (c)–ன் கீழ் ஒரு வழக்கறிஞர் பயிற்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்படும்போது, அந்த இடை நீக்கக் காலத்தில் அவர் இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலும் அல்லது எந்த அதிகார அமைப்பு அல்லது நபரின் முன்பாகவும் பயிற்சி செய்வதிலிருந்து தடை செய்யப்படுவார்.

(5) துணைப்பிரிவு (2)–ன் கீழ் அரசு தலைமை வழக்கறிஞருக்கு ஏதேனும் அறிவிப்பு வழங்கப்பட்டால், அரசு தலைமை வழக்கறிஞர் மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் முன்பு நேரில் அல்லது அவர் சார்பாக ஆஜராகும் ஏதேனும் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகலாம். [விளக்கம் – இந்தப் பிரிவில், [பிரிவு 37 மற்றும் பிரிவு 38], 'அரசு தலைமை வழக்கறிஞர்' மற்றும் 'மாநிலத்தின் தலைமை வழக்கறிஞர்' என்ற சொற்றொடர்கள், டெல்லி யூனியன் பிரதேசத்தைப் பொறுத்த வரை, இந்தியாவின் கூடுதல் தலைமை வழக்கறிஞரைக் குறிக்கும்.] (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது)

36. நந்த்லால் கோடிதாஸ் பரோட் –எதிர்– குஜராத் வழக்கறிஞர் பெருமன்றம் என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் செய்துள்ள பின்வரும் அவதானிப்புகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அந்த வழக்கில், ஒரு முகாந்திரம் இருப்பதற்கான திருப்தியைப் பதிவு செய்யாத காரணத்தால், புகாரை ஒழுங்குநடவடிக்கைக் குழுவிற்குப் பரிந்துரை செய்த மாநில வழக்கறிஞர் பெருமன்றத்தின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது:

'ஒரு மாநில பார் கவுன்சில் ஒரு புகாரைப் பெறுவது மட்டுமல்லாமல், எந்தவொரு வழக்கறிஞரும் தொழில்முறை அல்லது பிற முறைகேடுகளில் குற்றவாளி என்று நம்புவ தற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்பதைக் கண்டறிய தனது சிந்தனையைப் பயன்படுத்த வேண்டும் என்பது வெளிப்படையானது. ஒரு மாநிலத்தின் வழக்கறிஞர் பெருமன்றம் அந்த நியாயமான நம்பிக்கையின் அடிப்படையில் தான் செயல்படுகிறது....

...வழக்கறிஞர் பெருமன்றம் தொழில்முறை நடத்தை நெறிமுறைகளின் காவலராக செயல்படுகிறது மற்றும் வழக்கறிஞர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் மற்றும் தொழிலின் தூய்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றில் முக்கிய அக்கறை கொண்டு உள்ளது.

..வழக்கறிஞர்களுக்கு எதிரான புகார்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில் வழக்கறிஞர் பெருமன்றத்தின் செயல்பாடு என்னவென்றால், முறைகேடு நடந்திருப்பதற்கான ஒரு முகாந்திரம் உள்ளது என்ற நியாயமான நம்பிக்கை வழக்கறிஞர் பெருமன்றத்திற்கு இருக்கும்போது, அந்த விசாரணையானது ஒரு ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிடம் ஒப்படைக்கப்படுகிறது....' (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது)

37. எனவே, புகாரை விசாரணைக்காக ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்குப் பரிந்து ரைக்கும் முன்பாக, வழக்கறிஞர் முறைகேடு செய்துள்ளார் என்று நம்புவதற்கான காரணங் களைப் பதிவு செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

38. தற்போதைய வழக்கில், புகாரை ஒழுங்குநடவடிக்கைக் குழுவிற்குப் பரிந்துரை செய்து நீதிபதி–வழக்கறிஞர் முன்பு பிறப்பித்த உத்தரவானது, முற்றிலும் மர்மமானதாகவும், சுருக்கமானதாகவும் உள்ளது. ஏனெனில், 1961 ஆம் ஆண்டின் சட்டத்தின் 35வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளபடி எதிர்மனு தாரர்–வழக்கறிஞர் முறைகேடு செய்துள்ளார் என்பதற்கான எந்தவொரு திருப்தியையும் அது பதிவு செய்யவில்லை. 06 ஜுலை 2023 தேதி யிட்ட உத்தரவில், புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளின் சுருக்கத்தைக் குறிக்கும் சாதாரண குறிப்பு கூட இல்லை. எனவே, இது சிந்தனை யின்மை என்ற குறையால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குநடவடிக்கைக் குழுவிடம் ஒரு புகாரைப் பரிந்துரைப்பது, அந்த வழக்கறிஞரின் தொழில் வாழ்க்கையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதோடு, தொழிலில் அவரது பிம்பத்தை

யும் அந்தஸ்தையும் களங்கப்படுத்தலாம். எனவே, புகாரில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்த குறைந்தபட்ச விவாதம் கூட இல்லாமல், புகாரை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்குப் பரிந்துரைக்கும் சுருக்கமான உத்தரவு, செல்லுபடியாகும் பரிந்துரை உத்தரவின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது.

39. அத்தகைய முகாந்திர திருப்தி இல்லாத நிலையில், 35வது பிரிவின் கீழ் உள்ள சட்ட ரீதியான தேவை நிறைவேற்றப்படாமல் உள்ளது. மேலும் பரிந்துரை உத்தரவானது 1961 ஆம் ஆண்டின் சட்டத்தின் 35(1) பிரிவுக்கு வெளிப்படையாகவே முரணாக உள்ளது. எனவே, இதை நிலைநிறுத்த முடியாது.

40. இதன் விளைவாக, புகார்தாரரால் மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2023 ஆம் ஆண்டின் புகார் எண் 27 மற்றும் அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன. உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நீ.பே. மனு முடித்து வைக்கப்படும்.

41. அற்பமான ஒரு புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதற்காகவும், எதிர்மனுதாரர்–வழக்கறிஞரான திரு.ராஜீவ் நருலாவை இந்த நீதிமன்றத்திற்கு இழுத்ததற்காகவும் மேல்முறையீட்டாளரான மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றத்திற்கு ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அபராதம் செலவு தொகையாக விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகை இன்று முதல் நான்கு வாரங்களுக்குள் பம்பாய் உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும். அதன்பிறகு அந்த தொகை எதிர்மனுதாரர்–வழக்கறிஞரான திரு. ராஜீவ் நருலாவுக்கு வழங்கப்பட வேண்டும்.

42. அதன்படி, இந்த மேல்முறையீடு மேற்கண்ட நிபந்தனைகளுடன் முடித்து வைக்கப்படுகிறது.

43. நிலுவையில் உள்ள அனைத்து விண்ணப்பம்(கள்) ஏதேனும் இருந்தால், அவையும் முடித்து வைக்கப்படுகின்றன.

சிறப்பு அனுமதி மனு (சிவில்) எண் (நாட்குறிப்பு எண்(கள்). 38238 / 2023)

சிறப்பு அனுமதி மனு (சிவில்) எண் 1492/ 2024.

44. தாமதம் மன்னிக்கப்படுகிறது.

45. எழுப்பப்பட்ட சட்டப் பிரச்சினைகள் பொதுவானவை என்பதால், இந்த வழக்குகள் மேற்கண்ட வழக்குடன் சேர்த்து விசாரிக்கப்படுகின்றன. இருப்பினும், உண்மைகள் வேறுபடுவதால், இணைக்கப்பட்ட வழக்கின் உண்மைகளைத் தனித்தனியாகக் குறிப்பிட முற்படுகிறோம்.

46. இந்த இரண்டு சிறப்பு அனுமதி மனுக்களும் பம்பாய் உயர் நீதிமன்றத்தால் ரிட் மனு (ஃ) எண் 7383 / 2023–ல் 09 ஆகஸ்ட் 2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலிருந்து எழுகின்றன. 1–ம் எதிர்மனுதாரரும் பயிற்சி செய்யும் வழக்கறிஞருமான திருமதி கீதா ராமானுஜ சாஸ்திரியால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை அனுமதித்து, 20 செப்டம்பர் 2020 தேதியிட்ட உத்தரவு மற்றும் அறிக்கை மற்றும் மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம் (SLP (C) எண் 1492 / 2024–ல் மனுதாரர்)இல் பதிவு செய்யப்பட்ட ஒழுங்குநடவடிக்கை வழக்கு எண் 264/ 2017–ன் நடவடிக்கைகளை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

47. பன்சிதர் அன்னாஜி பகட் (2023 ஆம் ஆண்டின் SLP (C) நாட்குறிப்பு எண் 38238–ல் மனுதாரர்) தாக்கல் செய்த புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளின் சாரம் மற்றும் அடிப்படை என்னவென்றால், அவருக்கும் அவர் விரிவுரையாளராகப் பணியாற்றிய மாநில அரசு கல்வி நிறுவனமான இஸ்மாயில் யூசுப் ஜுனியர் கல்லூரிக்கும் இடையே ஒரு தகராறு இருந்தது என்பதாகும். 1 டிசம்பர் 1993 முதல் அவரது சேவைகள் கல்லூரியால் நிறுத்தப்பட்டன. அதன்பிறகு, திரு. பகட் வழக்கறிஞராகப் பயிற்சி செய்யத் தொடங்கினார்.

48. அவர் கல்லூரியிடம் இருந்து ரூ.43 லட்சம் இழப்பீடு கோரி உயர்நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பை பயன்படுத்தி கல்லூரிக்கு எதிராக வழக்கு எண் 1204/1995–ஐத் தொடர்ந்தார். பண வரம்பில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் இருந்து பம்பாய் நகர சிவில் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

49. அதன்பிறகு, கல்லூரி தனது எழுத்துப் பூர்வமான வாதத்தை திருத்தம் செய்யக் கோரி வழக்கில் ஒரு அறை அழைப்பாணையை தாக்கல் செய்தது. அழைப்பாணையுடன் சில ஆவணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அவை ஒரு பிரமாணப் பத்திரத்தால் ஆதரிக்கப்பட்டன.

50. அறை விசாரணைக்கான அழைப்பாணை யுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை உண்மை நகல்கள் என வழக்கறிஞர் திரு.என்.பி.பண்டிட் சான்றளித்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. புகார்தாரரின் கூற்றுப்படி, அறை அழைப்பாணையுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தை அளித்தவரை எதிர்மனு தாரர்–வழக்கறிஞர் அடையாளப்படுத்தினார், அவ்வாறு செய்ததன் மூலம், அந்தப் பிரமாணப் பத்திரம் மற்றும் அழைப்பாணையின் உள்ள டக்கங்கள் தனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என அவற்றின் உண்மைத்தன்மையை அவர் சான்றளித்ததாகக் கூறப்படுகிறது. புகார் தாரரின் கூற்றுப்படி, பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள அறிக்கைகள் முடிவில் பொய்யானவை எனக் கண்டறியப்பட்டன. எனவே, எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிட்டதன் மூலம், பொய்யான விவரங்களுக்கு ஆதரவளித்து, பிரமாணப் பத்திரத்தின் உள்ளடக்கங்களின் அடிப்படையில் பொய்யான வாக்குமூலம் அளித்துள்ளார்.

51. புகாரில் கூறப்பட்டுள்ள வழக்கின் முக்கியக் குற்றச்சாட்டு என்னவென்றால், பிரமாணப் பத்திரத்தின் உட்பகுதியில் உள்ள அறிக்கைகளின் உண்மைத்தன்மைக்குப் பொறுப்பேற்காமல், பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தவரின் கையொப்பங்களை எதிர்மனுதாரர் –வழக்கறிஞர் அடையாளப்படுத்தியிருக்க முடியாது என்பதாகும். புகார்தாரரின் கூற்றுப்படி, பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தவர் தவறான அறிக்கைகளை அளித்து, போலி ஆவணங் களைத் தாக்கல் செய்துள்ளார். எனவே, அதில் கையொப்பமிட்டு அவரை அடையாளப்படுத்திய வழக்கறிஞரும் மோசடி, பொய்ச்சாட்சியம் அல்லது ஏமாற்றுதல் ஆகிய குற்றங்களுக்குச் சமமாகப் பொறுப்பாவார்.

52. எதிர்மனுதாரர்–வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட நீ.பே. மனுவைத் தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம், பதிவேட்டில் உள்ள ஆவணங்களைப் பரிசீலித்து, வழக்கிலோ, தீர்மானத்திலோ, இடைக்கால மனுவிலோ அல்லது சேம்பர் சம்மன்ஸிலோ எதிர்மனு தாரர்–வழக்கறிஞர் எந்தவொரு கட்டத்திலும் எந்தப் பிரமாணப் பத்திரத்தையும் தாக்கல் செய்ய வில்லை என்று தீர்ப்பளித்தது. அழைப்பாணை யுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் அதை அளித்தவரை வெறுமனே அடையாளப்படுத்துவது அந்தப் பிரமாணப் பத்திரத்தின் உள்ளடக்கங்களுக்கு வழக்கறிஞரைப் பொறுப்பாக்காது. ஆவணங்களை ஒட்டு மொத்த மாக மதிப்பீடு செய்ததில், புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் முற்றிலும் அபத்தமானவை மற்றும் நிலைநிறுத்த முடியாதவை என்று உயர் நீதிமன்றம் கண்டறிந்தது.

53. எங்களின் தீர்க்கமான கருத்தின்படி, உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட அந்த முடிவு முற்றிலும் நியாயமானது. எனவே அதனை மறுக்க முடியாது. ஒரு வழக்கறிஞர், பிரமாணப் பத்திரத்திற்கு வெறுமனே சான்ற ளிப்பதன் மூலம், பிரமாணப் பத்திரத்தின் உள்ளடக்கங்களுக்கு உடந்தையானவர் ஆக மாட்டார். எனவே, வெளிப்படையாகப் பார்த்தால், மனுதாரர் பன்சிதர் அன்னாஜி பகட், எதிர்மனு தாரர்–வழக்கறிஞருக்கு எதிராகத் தாக்கல் செய்த புகாரானது. சாரமற்றது மட்டுமல்லாமல், பிரமாணப் பத்திரத்தில் எதிர்த்தரப்பை வெறுமனே அடையாளப்படுத்திய வழக்கறிஞருக்கு எதிராக இயக்கப்பட்ட உள்நோக்கமுடைய மற்றும்

பழிவாங்கும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலானதுமாகும்.

54. புகாரைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தியதிலும், விசாரணையை மேற்கொள்வதற்காக அதை ஒழுங்குமுறைக் குழுவிற்குப் பரிந்துரைத்ததிலும் மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் பிறப்பித்த உத்தரவானது வெளிப்படையாகவே சட்டவிரோதமானதும், விபரீதமானதும் ஆகும். எதிர்த்தரப்பு வழக்காடியின் தூண்டுதலின் பேரில் வழக்கறிஞர் மீது தொடுக்கப்பட்ட தீய நோக்கத்துடனான வழக்கு என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

55. நீதிப்பேராணை அதிகார வரம்பில் புகாரை ரத்து செய்து உயர்நீதிமன்றம் 09 ஆகஸ்ட் 2023 அன்று பிறப்பித்த எதிர்ப்புக்குரிய உத்தரவில், வெளிப்படையாக எந்தவொரு குறையும் இல்லை. புகார்தாரர் மற்றும் அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம் ஆகியவை எதிர்மனுதாரர்-வழக்கறிஞருக்கு அளவிட முடியாத துயரத்தையும் துன்புறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளனர்.

56. எனவே, இரண்டு சிறப்பு அனுமதி மனுக்களும் தகுதியற்றவை மற்றும் அவ்வாறே தள்ளுபடி செய்யப்படுகின்றன.

57. புகார்தாரர்-மனுதாரர் பன்சிதர் அன்னாஜி பகட் மற்றும் மகாராஷ்டிரா மற்றும் கோவா வழக்கறிஞர் பெருமன்றம் ஆகிய இருவருக்கும் தலா ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகையானது இன்று முதல் நான்கு வாரங்களுக்குள் பம்பாய் உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் வைப்பீடு செய்யப்பட வேண்டும். அங்கிருந்து அது எதிர்மனுதாரர்-வழக்கறிஞரான திருமதி கீதா ராமானுஜ சாஸ்திரிக்கு வழங்கப்படும்.

58. நிலுவையில் உள்ள விண்ணப்பம்(கள்) ஏதேனும் இருந்தால், அவை முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## கொலை வழக்கில் 17 வயது சிறுவனுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை ரத்து. சிறார் நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவு

கொலை வழக்கில் 17 வயது சிறுவனுக்கு ஆயுள் தண்டனை விதித்த அமர்வு நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2022ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் வன்னியர் சங்க நகரத் தலைவர் கண்ணன் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் 17 வயது சிறுவன் கைது செய்யப்பட்டார். சிறுவன் மீதான வழக்கை சிறார் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கை வயது வந்த மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உடன் விசாரித்து சிறுவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், சிறுவனை சீர்த்திருத்தப்பள்ளியில் அடைக்க நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் சிறுவன் கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

எனவே, இந்த வழக்கை நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றம் விசாரித்தது தவறு. அதேபோல் சிறுவனை மத்திய அறையில் அடைத்ததும் தவறு. எனவே, சட்டவிரோத காவலில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுவிக்கக் கோரி அந்த சிறுவனின் தாய் சவீதா, சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் அனிதா சுமந்த், சுந்தர்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. சம்பவம் நடந்தபோது, 18 வயது பூர்த்தி அடையாத சிறுவன் மீதான வழக்கை குற்றஞ்சாட்டப்பட்ட மற்றவர்களுக்கு எதிரான வழக்குடன் இணைத்து விசாரித்தது சிறார் நீதி சட்டப்படி தவறானது. தண்டனை விதிக்கப்பட்ட பின்னர், சிறுவனை சீர்திருத்தப் பள்ளியில் அடைக்காமல், மத்திய சிறையில் அடைத்ததும் சட்டப்படி தவறாகும்.

எனவே, இந்த வழக்கில் சிறுவனை குற்றவாளி என அறிவித்து தண்டனை விதித்த தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட சிறுவன் மீதான வழக்கு மயிலாடுதுறை சிறார் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது. இந்த வழக்கை ஆறு மாதங்களில் சிறார் நீதிமன்றம் விசாரித்து முடிக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும், கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் முதல் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறுவனுக்கு நிபந்தனை பிணை வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர். சட்டவிரோதமாக கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிறுவனுக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**நன்றி: தினமணி 12.4.2026**

# குத்தகை நிபந்தனைகளை மீறி வங்கி நடத்திய ஏல விற்பனை செல்லாது; ஏலக் கொள்முதல் தாரருக்கு வட்டியுடன் பணத்தை வழங்க உத்தரவு

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி சஞ்சய் குமார்**
**மாண்புமிகு நீதிபதி அலோக் ஆராதே**

உரிமையியல் மே.மு.எண் 11269/2016

டெல்லி மேம்பாட்டு ஆணையம் ...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

கார்ப்பரேஷன் வங்கி மற்றும் இதர நபர்கள் ...எதிர்மனுதாரர்கள்

## தீர்ப்பு

**நீதியரசர் அலோக் ஆராதே**

1. இந்த மேல்முறையீடானது, டெல்லி உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட ரிட் மனு (இ) எண். 5005/2014–ல் 11.08.2014 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலிருந்து உருவானதாகும்.

தற்போதைய மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தின் முன்பாக உரிமைகளுக்கானப் போட்டி மட்டுமல்லாது, கடமைகளைப் பற்றிய ஒன்றாகவும் அமைந்துள்ளது – குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மதிக்கும் குத்தகை தாரரின் கடமை, பொதுப் பணத்தை கடனாக வழங்குவதற்கு முன் தகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய ஒரு வங்கியின் கடமை மற்றும் பொதுச் சொத்தின் அறங்காவலராகத் தனது உரிமையின் மீதான ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் ஒரு அரசு நிறுவனத்தின் கடமை. இது, நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏலத்தில் சொத்தை வாங்கி, இறுதியில் தான் நிற்கும் நிலம் நிலையற்றது என்பதைக் கண்டறிந்த ஒரு ஏலக் கொள்முதல் தாரரின் அவல நிலையையும் எங்கள் முன் கொண்டு வருகிறது.

2. இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப் படுவதற்கு வழிவகுத்த தொடர்புடைய உண்மைகள் பின்வருமாறு

(i) **பொருண்மைகள்:**

3. மேல்முறையீட்டாளரான டெல்லி மேம்பாட்டு ஆணையம், 01.10.2001 அன்று புது டெல்லி, ஜசோலா, காளிந்தி குஞ்ச் சாலையில் உள்ள வசதி மையம்–33–ல் அமைந்த 877.50 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனை எண் 25-I, 2–வது எதிர்மனுதாரரான சரிதா விஹார் குழாமிற்கு (கிளப்பிற்கு) குத்தகை அடிப்படையில் ஒதுக்கியது. பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு குழாம் கட்டுவதற்காக ரூ.62,96,664/– மதிப்பு உயர்த்திய தொகையில் குறிப்பிட்ட மனை குழாமிற்கு ஒதுக்கப் பட்டது. குறிப்பிட்ட மனைக்காக, ஏக்கருக்கு ரூ.2,90,40,000/– என்ற விகிதத்தில் தற்காலிக தவணைத் தொகையும், மொத்த தொகைக்கு ஆண்டுக்கு 2.5% என்ற விகிதத்தில் ஆண்டு நில வாடகையையும் குழாம் செலுத்த வேண்டியிருந்தது. 01.10.2001 தேதியிட்ட ஒதுக்கீட்டுக் கடிதத்தின்படி, டெல்லி துணை நிலை ஆளுநரின் முன் அனுமதியுடன், அவர் தனது முழு விருப்பத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கும் ஒரு நபரிடம் குறிப்பிட்ட மனையை குழாம் அடமானம் வைக்கவோ அல்லது பிணையாக ஒப்படைக்கவோ முடியும்.

4. குழாம் 28.11.2001 அன்று ரூ.29,50,000/– தொகையை டெல்லி மேம்பாட்டு ஆணையத்திடம் செலுத்தியது. குழாம் ரூ.35,00,000/– கடன் அனுமதி கோரி 1–வது எதிர்மனுதாரரான கார்ப்பரேஷன் வங்கியிடம் (இனி 'வங்கி' என்று அழைக்கப்படும்) விண்ணப்பித்ததாகத் தெரிகிறது. அதன் பின்னர், வங்கி 07.02.2002 தேதியிட்ட தகவல் பரிமாற்றத்தின் மூலம், கடன் அனுமதி முன் மொழிவு பரிசீலனைக்காக உயர்

அதிகாரி களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட குழாமிற்குத் தெரிவித்ததுடன், குறிப்பிட்ட மனையை அடமானம் வைப்பதற்கான அனுமதியை டெல்லி மேம்பாட்டு ஆணையத்திட மிருந்து பெறுமாறு கோரியது. குழாம் 11.2.2002 தேதியிட்ட கடிதத்தின் மூலம், மீதமுள்ள தொகையைச் செலுத்துவதற்காகக் குறிப்பிட்ட மனையை அடமானம் வைக்க அனுமதிக்கு மாறு டெ.மே.ஆணையத்திடம் கோரியது. ஆணையம், 22.02.2002 தேதியிட்ட கடிதத்தின் மூலம், மனையின் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக வங்கியிடம் கடன் கோர குழாமிற்குத் தடையில்லாச் சான்றிதழ் வழங்கியது; ஆனால், குத்தகை ஆவணம் நிறைவேற்றப் பட்டுப் பதிவு செய்யப்பட்ட பின்னரே அடமானத்திற்கான அனுமதி வழங்கப்படும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அதன்பின் வங்கி 22.03.2002 அன்று டெ.மே. ஆணை யத்திடம் குறிப்பிட்ட மனையை அடமானம் வைக்க அனுமதி கோரியதுடன், அந்த மனை யின் மீது வங்கியின் பற்று ரிமையை குறித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. குழாம் 12.04.2002 அன்று தாமதமாகச் செலுத்திய தற்கான வட்டி உட்பட கூடுதலாக ரூ.2,05,000/- தொகையை ஆணையத்திடம் செலுத்தியது. அதன் பேரில் ஆணையம், 29.04.2002 அன்று குழாமிற்கு ஒரு திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதத்தை வழங்கியது, அதில் ஆரம்ப தவணைத் தொகை ரூ.64,53,107/- என்பது ரூ.64,54,126/- ஆகத் திருத்தப்பட்டது.

5. குறிப்பிட்ட மனையைப் பொறுத்தவரை, 28.1.2005 அன்று டெல்லி மேம்பாட்டு ஆணையத்திற்கும் குழாமிற்கும் இடையே ஒரு நிரந்தர குத்தகை ஆவணம் நிறைவேற்றப் பட்டது. குத்தகை ஆவணத்தின் ஷரத்து 5(b)-இன்படி, குறிப்பிட்ட மனையை அடமானம் வைக்கவோ அல்லது பிணையாக வைக்கவோ டெல்லி துணை நிலை ஆளுநரின் எழுத்துப் பூர்வமான முன் அனுமதி அவசியம் என்று கூறப்பட்டிருந்தது. ஷரத்து (6) உழைக்காமல் ஈட்டிய மதிப்பு உயர்வுத் தொகையை வசூலிப்பதற் கான ஆணையத்தின் உரிமை மற்றும் குறிப்பிட்ட மனையை வாங்குவதற்கான முன்னுரிமை குறித்துக் குறிப்பிடுகிறது. குழாம் இரண்டு ஆண்டு காலத்திற்குள் கட்டுமானப் பணிகளை முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது.

6. குறிப்பிட்ட மனை வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டதாகவும், அசல் பதிவு செய்யப்பட்ட நிரந்தர குத்தகை ஆவணம் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதன்பின் வங்கி 9.3.2005 தேதியிட்ட கடிதத்தின் மூலம், குழாம் குறிப்பிட்ட மனையைத் தன்னிடம் அடமானம் வைத்துள்ளதாக டெ.மே. ஆணை யத்திற்குத் தெரிவித்ததுடன், அந்த அடமான விவரத்தைக் குறித்துக் கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டது.

7. கிளப் வங்கியிடம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியது. அதன் பேரில், வங்கி ரூ.86,46,790.37 தொகையை வசூலிப்பதற்காக, டெல்லி கடன் வசூல் தீர்ப்பாயம்-Iஇல், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச் சேர வேண்டிய கடன் வசூல் சட்டம், 1993-இன் பிரிவு 19-இன் கீழ் (தற்போது கடன் வசூல் மற்றும் திவால் சட்டம், 1993 என அழைக்கப்படுகிறது) ஒரு அசல் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தது. மேற் கூறிய விண்ணப்பம் 27.8.2010 அன்று டெ.க.வ.தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டது. தீர்ப்பாயத்தின் வசூல் அதிகாரி 2.2.2011 அன்று விற்பனைப் பிரகடனத்தைத் தயாரிப்ப தற்கும் அதன் நிபந்தனைகளைத் தீர்மானிப்ப தற்கும் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். மேலும், குறிப்பிட்ட மனை அல்லது அதன் எந்தப் பகுதி யுடனும் தொடர்புடைய வில்லங்கங்கள், பொறுப்புகள் மற்றும் கோரிக்கைகளைத் தனது கவனத்திற்குக் கொண்டு வருமாறு வங்கிக்குத் தெரிவித்தார். டெல்லி மேம்பாட்டு ஆணையம், 24.02.2011 தேதியிட்ட கடிதத்தின் மூலம் கடன் வசூல் அதிகாரியிடம், குழாமானது வங்கியின் ஆதரவாக அடமானத்தை உருவாக்க மேம்பாட்டு ஆணையத்தின் அனுமதியைப் பெறவில்லை என்றும், எனவே வங்கிக்கு ஆதரவாகச் செய்யப் பட்ட அந்த அடமானம் சட்டவிரோதமானது

மற்றும் செல்லுபடியாகாது என்றும் தெரிவித்தது. சொத்தின் விற்பனையை ரத்து செய்ய வேண்டும் என்றும், விற்பனைப் பிரகடனத்தைத் தயாரிக்கும் மற்றும் அதன் நிபந்தனைகளைத் தீர்மானிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் டெ.மே.ஆணையம் அந்தத் தகவலில் குறிப்பிட்டிருந்தது.

8. அதன்பின்னர் மேம்பாட்டு ஆணையம், 30.06.2011 அன்று கடன் வசூல் அதிகாரி யிடம் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது. அதில் குறிப்பிட்ட மனையை அடமானம் வைக்க ஆணையம் ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை என்றும், எனவே வங்கிக்கு ஆதரவான அடமானம் சட்டவிரோதமானது என்றும் கூறி விற்பனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. அதன் பிறகு வங்கி 22.07.2011 தேதியிட்ட கடிதத்தின் மூலம், குறிப்பிட்ட மனை யின் விற்பனை முடிந்த பிறகு டெ.மே. ஆணை யத்திற்குச் செலுத்த வேண்டிய ‘ஈட்டா மதிப்பு உயர்வு தொகை எவ்வளவு என்பது குறித்துத் தெரிவிக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டது.

9. அதன் தொடர்ச்சியாக, டெ.மே. ஆணையம் மீண்டும் கடன் வசூல் அதிகாரியிடம் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது. அதில், குத்தகை ஆவணத்தின்படி ‘ஈட்டா மதிப்பு உயர்வு’ தொகையை வசூலிக்கத் தங்களுக்கு உரிமை உள்ளது என்றும், குறிப்பிட்ட மனையை வாங்குவதற்கு முன்னுரிமை உள்ளது என்றும் கூறி விற்பனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. வசூல் அதிகாரி 27.02.2012 தேதியிட்ட உத்தரவின் மூலம், 16.02.2012 மற்றும் 30.06.2011 தேதியிட்ட பிரமாணப் பத்திரங்களில் டெ.மே.ஆணையம் எழுப்பிய ஆட்சேபனை களை நிராகரித்தார்.

10. வசூல் அதிகாரியின் 27.02.2012 தேதியிட்ட உத்தரவை எதிர்த்து டெ.மே. ஆணையம், கடன் வசூல் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்தது. அந்த மேல்முறையீடு 25.06.2012 அன்று DRT–ஆல் தள்ளுபடி செய்யப்பட்டது. கடன் வசூல் தீர்ப்பாயத்தின் வசூல் அதிகாரி 21.09.2012 தேதியிட்ட உத்தரவின் மூலம், குறிப்பிட்ட மனை 09.11.2012 அன்று (மெய்நிகர்) மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் என்று அறிவித்தார். அதன் பின்னர், 27.09.2012 அன்று மின்–ஏல விற்பனை அறிவிப்பு மற்றும் விற்பனைப் பிரகடனம் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் வெளியிடப்பட்டது. அதில் மின்–ஏல அறிவிப்பிற் கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

11. அக்டோபர் 2012–ல், நிதிச் சொத்துக் களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002–இன் பிரிவு 18–இன் கீழ், கடன் வசூல் தீர்ப்பாயம் பிறப்பித்த 27.02.2012 மற்றும் 25.06.2012 தேதியிட்ட உத்தரவுகளை எதிர்த்து டெல்லி மேம்பாட்டு ஆணையம் மேல்முறையீடு செய்தது.

12. டெல்லி மேம்பாட்டு ஆணையம், 03.11.2012 அன்று டெல்லி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு (C) எண் 6972/2012–ஐ தாக்கல் செய்தது. அதில் கடன் வசூல் தீர்ப்பாயம் பிறப்பித்த 25.06.2012 தேதியிட்ட உத்தரவை யும், தீர்ப்பாய வசூல் அதிகாரி வெளியிட்ட 27.09.2012 தேதியிட்ட மின்–ஏல அறிவிப்பை யும் ரத்து செய்யக் கோரியது. அந்த ரிட் மனுவின் விசாரணையின்போது, 05.11.2012 அன்று வங்கியின் தரப்பு வழக்கறிஞர், இந்த ஏலமானது குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்று ஒரு அறிக்கையை அளித்தார். வங்கியின் இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் அதனைத் தனது உத்தரவில் பதிவு செய்தது. இதனையடுத்து, டெ.மே. ஆணைய தரப்பு வழக்கறிஞர் ரிட் மனுவைத் தொடர விரும்பவில்லை. அதன்பேரில் உயர் நீதிமன்றம் 05.11.2012 தேதியிட்ட உத்தரவின் மூலம் ரிட் மனுவை திரும்பப் பெறப்பட்டதாகக் கருதி தள்ளுபடி செய்தது. டெ.மே.ஆணையம், 06.11.2012 தேதியிட்ட கடிதத்தின் மூலம் உயர் நீதிமன்ற உத்தரவில் பதிவான வங்கியின் அந்த உறுதிமொழியை வங்கி மேலாளர் மற்றும் தீர்ப்பாயத்தின் வசூல் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு சென்றது.

13. குறிப்பிட்ட மனையின் ஏலம் 09.11.2012 அன்று நடைபெற்றது. அதில் 6வது எதிர்மனு தாரரான 'மெசர்ஸ் ஜெய் பாரத் கமர்ஷியல் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட்' (இனி 'ஏலக் கொள்முதல்தாரர்' என்று அழைக்கப் படும்) அதிக தொகை கோரிய ஏலதாரராக அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட மனையின் அடிப்படை விலையான ரூ.8.85 கோடிக்கு எதிராக, ஏலக் கொள்முதல் தாரரின் ஏலத் தொகையான ரூ.13.15 கோடி ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஏலக் கொள்முதல் தாரர் விற்பனைத் தொகையை பல்வேறு வங்கி பண விடைகள் மூலம் தீர்ப்பாய வசூல் அதிகாரியிடம் செலுத்தினார். தீர்ப்பாய வசூல் அதிகாரி 08.07.2013 தேதியிட்ட உத்தரவின் மூலம் ஏலக் கொள்முதல் தாரருக்கு ஆதரவாக விற்பனையை உறுதி செய்தார். 12.07.2013 அன்று ஏலக் கொள் முதல் தாரருக்கு ஆதரவாக விற்பனைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் 17.07.2013 அன்று குறிப்பிட்ட மனையின் சுவாதீனம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

14. ஏலக் கொள்முதல் தாரர் 29.07.2013 அன்று கடன் வசூல் தீர்ப்பாய வசூல் அதிகாரி யிடம் ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். அதில், பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்ட அந்த மனையின் மீதான பொறுப்புகள் மற்றும் கோரிக்கைகளைச் செலுத்துவதிலிருந்து தனக்கு விலக்கு அளிக்கக் கோரினார். அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில், 'ஈட்டா மதிப்பு உயர்வு' தொகையைத் தெரிவிக்குமாறு டெ.மே. ஆணையத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இருப்பினும், மேம்பாட்டு ஆணையம் அந்த நடவடிக்கைகளில் ஒத்திவைப்பு கோரியது. வசூல் அதிகாரி 18.09.2013 அன்று டெ.மே. ஆணையத்திற்கு ஒரு உத்தரவு பிறப்பித்தார். அதில், 'ஈட்டா மதிப்பு உயர்வு' தொகையைக் கணக்கிடும் விதிகள் மற்றும் சமீபகாலமாக டெல்லி மேம்பாட்டு ஆணையத்தால் விற்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட நிறுவன நிலங்களின் விவரங்களைப் பிரமாணப் பத்திரமாகத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார். இதன் மூலம் குத்தகை அடிப்படையிலான நிறுவனச் சொத்துக்களின் தற்போதைய சந்தை விலையைத் தெரிந்து கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

15. உயர் நீதிமன்றம் 05.11.2012 அன்று பிறப்பித்த உத்தரவை எதிர்த்து டெ.மே. ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுவை தாக்கல் செய்தது. காலதாமதம் காரண மாக அந்த சிறப்பு விடுப்பு மனு 25.10.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேம்பாட்டு ஆணையம், 07.11.2013 அன்று தீர்ப்பாய வசூல் அதிகாரியிடம் தனது சிறப்பு அனுமதி கோரும் மனு தள்ளுபடி செய்யப்பட்டதைத் தெரிவித்ததுடன், கடன் வசூல் தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவுகளை நிறைவேற்ற கால அவகாசம் கோரியது. டெ.மே.ஆணையம், 10.12.2013 அன்று 'ஈட்டா மதிப்பு உயர்வு' தொகையைக் கணக்கிடுவது தொடர்பாக வசூல் அதிகாரியிடம் ஒரு இணக்கப் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது. வசூல் அதிகாரி 22.01.2014 தேதியிட்ட உத்தரவில், தோராய மாக கோரப்பட்ட ரூ.27.73 கோடி செலவில் அந்தச் சொத்தை மீட்க டெ.மே.ஆணையம் தயாராக இல்லை என்று பதிவு செய்தார். ஆணையம், 1993-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 22-இன் கீழ் வசூல் அதிகாரியிடம் ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தது. அதில் இந்த ஏல விற்பனை செல்லுபடியாகும் என்று கருதப்பட்டாலும், ஏலக் கொள்முதல் தாரர் ஒரு குத்தகைதாரர் என்ற அந்தஸ்தை மட்டுமே கொண்டிருப்பார் என்று குறிப்பிட்டது.

16. மேம்பாட்டு ஆணையம், டெல்லி உயர் நீதிமன்றத்தில் 2014-ஆம் ஆண்டின் ரிட் மனு (இ) எண் 5005 என்ற மற்றொரு மனுவைத் தாக்கல் செய்தது. அதில் 27.09.2012 தேதி யிட்ட ஏல அறிவிப்பின் தொடர்ச்சியாக 9.11.2012 அன்று வசூல் அதிகாரியால் நடத்தப்பட்ட மின்-ஏலத்தை ரத்து செய்யவும், குறிப்பிட்ட மனையைப் பொறுத்தவரை வங்கி மற்றும் கிளப்பின் செயல்பாடுகள் மற்றும் தவறுகளை ரத்து செய்யவும் கோரியது. உயர் நீதிமன்றம் 11.08.2014 தேதியிட்ட உத்தரவில், கடன் வசூல் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் 12.03.2014 அன்று பிறப்பித்த உத்தரவை சட்டப்படி

எதிர்ப்பதற்கு டெ.மே.ஆணையத்திற்கு உரிமை உண்டு என்று கூறியது. மேலும், 05.11.2012 அன்று திரும்பப் பெறப்பட்டு தள்ளுபடி செய்யப் பட்ட ரிட் மனு (C) எண். 6972/2012–இல் மேம்பாட்டு ஆணையம் எழுப்பிய அதே பிரச்சினைகளே தற்போதைய மனுவிலும் எழுப்பப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது. ரிட் மனு (C) எண் 6972/ 2012–இல் 05.11.2012 அன்று பிறப்பிக்கப் பட்ட உத்தரவு இறுதியானது என்றும், அதே பிரச்சினைகளை மீண்டும் எழுப்ப முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உரிமை யியல் நடைமுறைச் சட்டம் 1908–இன் பிரிவு 11–க்கு (முன்தீர்ப்புத் தடை) இணையான கோட்பாடுகள் இதற்குப் பொருந்தும் என்றும் கூறப்பட்டது. அதன்படி, அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இத்தகைய பின்னணியிலேயே இந்த மேல்முறையீடு பரிசீலனைக்கு வந்துள்ளது.

17. இந்த மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, ஏலக் கொள்முதல் தாரர் தாக்கல் செய்த விண்ணப்பத்தின் அடிப்படையில், கடன் வசூல் தீர்ப்பாயம் 01.12.2014 தேதியிட்ட உத்தரவின் மூலம் ரூ.12,26,42,478/– தொகையை ஏலக் கொள்முதல் தாரரிடம் விடுவித்தது. இந்த நிலையில் விற்பனையை ரத்து செய்ய முடியாது என்றும், அதிகபட்சமாக டெ.மே.ஆணையம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சிறப்பு விடுப்பு மனு முடிவாகும் வரை, நிரந்தர வைப்புத் தொகையிலுள்ள பணத்தை ஏலக் கொள்முதல் தாரரிடம் திருப்பி அளிக்கலாம் என்றும் கடன் வசூல் தீர்ப்பாயம் தனது உத்தரவில் குறிப்பிட்டது.

**(ii) DDA–வின் வாதங்கள்:**

18. டெ.மே.ஆணையத்தின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் வாதிடுகையில், குத்தகை ஆவணத்தின் நிபந்தனைகளின்படி, குறிப்பிட்ட மனையை அடமானம் வைக்கவோ அல்லது பிணையாக வைக்கவோ துணை நிலை ஆளுநரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி அவசியம் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார். வங்கிக்கு ஆதரவாக அடமானம் உருவாக்கப்படுவதற்கு முன்பு துணை நிலை ஆளுநரின் அத்தகைய எழுத்துப்பூர்வ அனுமதி பெறப்படவில்லை என்றும், எனவே ஆணையம் தனது சட்டப்பூர்வ நிலுவைத் தொகையைப் பெற உரிமை உண்டு என்றும் வாதிடப்பட்டது. 22.07.2011 தேதியிட்ட கடிதத்தின் மூலம் ‘ஈட்டா மதிப்பு உயர்வு’ தொகையைச் செலுத்த வேண்டும் என்று வங்கிக்குத் தெரிவிக்கப்பட்ட தாகச் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், நில வாடகை நிலுவை மற்றும் ‘ஈட்டா மதிப்பு உயர்வு’ உள்ளிட்ட தனது சட்டப்பூர்வ கோரிக்கைகள் குறித்து வசூல் அதிகாரியிடம் விரிவான பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்ததும் சுட்டிக் காட்டப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு (C) எண். 6972/2012–இல் அளிக்கப்பட்ட மற்றும் 05.11.2012 தேதியிட்ட உத்தரவில் பதிவு செய்யப்பட்ட அறிக்கைக்கு முரணாகவே குறிப்பிட்ட மனை விற்கப்பட்டதாக வாதிடப்பட்டது.

19. கடன் விண்ணப்பம் முதல் நில விற்பனை வரை வங்கி பல சட்டமீறல்களைச் செய்துள்ள தாக வாதிடப்பட்டது. டெ.மே.ஆணையத்திற்குத் தெரிவிக்காமலேயே வங்கி கிளப்பிற்கு கடனை வழங்கியுள்ளது என்றும், 35 லட்சம் வரை கடன் கோருவதற்கு மட்டுமே DDA தடையில்லாச் சான்று அளித்திருந்தது என்பதை வங்கி கவனித்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டது. ஆனால், வங்கி ரூ.60 லட்சம் கடன் வழங்கியது. இந்தச் சொத்து முழு உரிமை சொத்து அல்ல என்பதும், DDA–விற்கு சட்டப் பூர்வ நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டும் என்பதும் வங்கிக்குத் தெரிந்திருந்தது என்று வாதிடப்பட்டது. எனவே, இந்த விற்பனையை ரத்து செய்து, குறிப்பிட்ட மனையை மீண்டும் மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், வங்கியிடமிருந்து தனது சட்டப்பூர்வ நிலுவைத் தொகையை வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

(iii) **வங்கியின் வாதங்கள்:**

20. வங்கியின் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகை யில், கிளப் குறிப்பிட்ட மனையை வங்கியிடம் அடமானம் வைத்துள்ளதாகவும், 28.01.2005 தேதியிட்ட நிரந்தர குத்தகை ஆவணத்தை வங்கி யிடம் ஒப்படைத்துள்ளதாகவும் 09.03.2005

தேதியிட்ட கடிதத்தின் மூலம் வங்கி டெ.மே. ஆணையத்திற்குத் தெரிவித்திருந்தது என்றார். இருப்பினும், 25.02.2011 அன்று கடன் வசூல் தீர்ப்பாய வசூல் அதிகாரி முன் முதன்முதலில் ஆஜராகும் வரை மேம்பாட்டு ஆணையம் இது குறித்து மௌனம் காத்தது. 27.09.2012 தேதியிட்ட ஏல அறிவிப்பின்படி, குறிப்பிட்ட மனை 'உள்ளபடி உள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்கப்பட்டது. எனவே டெ.மே.ஆணையம் தனது ஏலத்தின் மூலம் சொத்தை வாங்கும் முன்னுரிமையை பயன்படுத்தித் தனது நிலுவைத் தொகையை மீட்டிருக்கலாம் என்று வாதிடப் பட்டது. ஆணையத்திற்கு மட்டுமே தெரிந்த காரணங்களினால், அந்த மனையை வாங்கும் விருப்பத்தேர்வு பயன்படுத்தப்படவில்லை. கொள்கை அளவில், 22.02.2002 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மேம்பாட்டு ஆணையம் தடையில்லாச் சான்று வழங்கியிருந்தது என்றும், அந்த மனையின் மீது வங்கிக்கு இருந்த பற்றுரிமை ஆணையம் அறிந்திருந்தது என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த மேல்முறையீடு சட்ட நடைமுறைகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம் என்றும், இந்த வழக்கின் உண்மைகளுக்கு 'வாக்குறுதித் தடை' கோட்பாடு பொருந்தும் என்பதால் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

(iv) **ஏலக் கொள்முதல் தாரரின் வாதங்கள்:**

21. ஏலக் கொள்முதல் தாரரின் மூத்த வழக்கறிஞர் வாதிடுகையில், 1993-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 29-ஆனது, வருமான வரிச் சட்டம் 1961-இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணைகளையும், வருமான வரி (சான்றிதழ் நடைமுறைகள்) விதிகள் 1962-ஐயும் 1993-ஆம் ஆண்டு சட்டத்தின் கீழான அசையாச் சொத்து விற்பனைக்குப் பொருந்தச் செய்கிறது என்றார். 1962-ஆம் ஆண்டு விதிகளின் விதி 16-இன்படி, விற்பனைப் பிரகடனம் வெளியிடுவதற்கு முன்பே, சொத்தின் மதிப்பு அல்லது விதி 18-இன் கீழ் நிர்ணயிக்கப்படும் அடிப்படை விலையைப் பாதிக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் வசூல் அதிகாரியும் DRT முன் உள்ள தரப்பினரும் தீர்மானித்து முடித்திருக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டு சட்டத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணைகளை மீறி இந்த விற்பனை நடைபெற்றுள்ளதால், இந்த ஏல விற்பனை ரத்து செய்யப்படத்தக்கது என்று வாதிடப்பட்டது. மேலும், விற்பனைப் பிரகடனத்தில் டெ.மே. ஆணையம் கோரும் தொகை குறிப்பிடப்பட வில்லை அல்லது DDA கோரும் சந்தை மதிப்பை அடிப்படை விலை பிரதிபலிக்கவில்லை. ஏலத் தொகைக்கு மேலதிகமாக, 'ஈட்டா மதிப்பு உயர்வு' தொகையைத் தன்னிடம் கோரும் உரிமையை மேம்பாட்டு ஆணையம் ஏலக் கொள்முதல் தாரர் மீது சுமத்த முடியாது என்று வாதிடப்பட்டது. எனவே, 09.11.2012 அன்று DRT வசூல் அதிகாரியால் நடத்தப்பட்ட மின்-ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும், வங்கியால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூ.1,68,28,488/- தொகையை, விற்பனைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 15% வட்டியுடன் ஏலக் கொள்முதல் தாரருக்குத் திருப்பி வழங்க வங்கிக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

(v) **பரிசீலனை:**

22. இருதரப்பினரும் முன்வைத்த வாதங்களை நாங்கள் பரிசீலித்தோம். மேலும் டெ.மே. ஆணையம், வங்கி மற்றும் ஏலக் கொள்முதல் தாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் எழுத்துப்பூர்வமான வாதங்களையும் ஆய்வு செய்தோம். மேற்கொண்டு செல்வதற்கு முன், தொடர்புடைய சட்ட விதிகளைக் கவனிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

23. 1993-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 29, வருமான வரிச் சட்டத்தின் சில விதிகளைப் பயன்படுத்துவது குறித்துக் கூறுகிறது. வருமான வரிச் சட்டம் 1961-இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணைகள் மற்றும் வருமான வரி (சான்றிதழ் நடைமுறைகள்) விதிகள் 1962 ஆகியவை, அந்தந்த காலங்களில் நடைமுறையில் உள்ளபடி, தேவையான மாற்றங்களுடன் இந்தச் சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள கடன் தொகைக்கும் பொருந்தும் என்று அது கூறுகிறது.

இரண்டாவது அட்டவணை வரி வசூலிப்ப தற்கான நடைமுறையை வழங்குகிறது, அதே நேரத்தில் மூன்றாவது அட்டவணை மதிப்பீட்டு அதிகாரி அல்லது வரி வசூல் அதிகாரியின் ஜப்தி நடைமுறைகளைக் கையாள்கிறது. 1961ஆம் ஆண்டு சட்டத்தின் இரண்டாவது அட்டவணை யின் விதி 53, விற்பனைப் பிரகடனத்தின் உள்ளடக்கங்கள் குறித்துக் கூறுகிறது. அசையாச் சொத்து விற்பனைக்கான பிரகடனம், கடனாள ருக்கு அறிவிப்பு வழங்கிய பிறகு தயாரிக்கப்பட வேண்டும் என்றும், அதில் விற்பனை நடை பெறும் நேரம் மற்றும் இடம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும் என்றும், பின்வருவன வற்றை முடிந்தவரை நியாயமாகவும் துல்லிய மாகவும் குறிப்பிட வேண்டும் என்றும் அது கூறுகிறது:

‘(அ) விற்பனை செய்யப்பட வேண்டிய சொத்து;

(ஆ) அந்தச் சொத்து அல்லது அதன் ஒரு பகுதியின் மீது விதிக்கப்பட்ட வரி (வருவாய்) ஏதேனும் இருப்பின் அது;

(இ) எந்தத் தொகையை வசூலிப்பதற்காக விற்பனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதோ அந்தத் தொகை;

(ஈ) சொத்தின் தன்மை மற்றும் மதிப்பைத் தீர்மானிக்க ஒரு வாங்குபவர் தெரிந்து கொள்வது அவசியம் என்று வரி வசூல் அதிகாரி கருதும் மற்ற விவரங்கள்.‘

24. எனவே, ஒரு வாங்குபவர் சொத்தின் தன்மை மற்றும் மதிப்பைத் தீர்மானிக்கத் தேவையான முக்கியமான பிற விவரங்கள் எவை என்று வசூல் அதிகாரி கருதுகிறாரோ, அவற்றை விற்பனைப் பிரகடனத்தில் குறிப்பிட வேண்டும் என்று விதி 53 கட்டாயப்படுத்துகிறது.

25. 1961–ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 295(1) மற்றும் 1961–ஆம் ஆண்டு சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் விதிகள் 91 மற்றும் 92–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, மத்திய வருவாய் வாரியம் ‘வருமான வரி (சான்றிதழ் நடைமுறைகள்) விதிகள் 1962’–ஐ உருவாக்கியுள்ளது. இந்த விதிகளின் விதி 16, விற்பனைப் பிரகடனம் தொடர்பான எந்தவொரு விஷயத்திலும் அவசிய மென்று கருதப்படும் எவரையும் நேரில் அழைத்து விசாரணை நடத்தவும், அது தொடர்பான ஆவணங்களைத் தாக்கல் செய்யு மாறு உத்தரவிடவும் வசூல் அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கிறது.

26.மேற்கூறிய சட்ட விதிகளின் பின்னணி யில், இந்த வழக்கின் உண்மைகளை நாங்கள் கவனிக்கிறோம். 2008–ஆம் ஆண்டில், கிளப்பிற்கு எதிரான நிலுவைத் தொகையை வசூலிக்க 1993–ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 19ன் கீழ் வங்கி ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தது. குத்தகைதாரருக்கும் கிளப்பிற்கும் இடையே நிறைவேற்றப்பட்ட குத்தகை ஆவணத்தின் ஷரத்து 5(a) மற்றும் 5(b)–ன் படி, DDA–விற்கு முன்னுரிமைக்கான உரிமை இருந்தது என்பதைக் குறிப்பிடுவது அவசியமாகும். குறிப்பிட்ட மனை டெல்லி மேம்பாட்டு ஆணையத்தால் குழாமிற்கு குத்தகைக்கு விடப்பட்டது என்ற உண்மை வங்கிக்குத் தெரிந்தே இருந்தது. இருப்பினும், 1993–ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 19இன் கீழ் நடந்த அந்த நடவடிக்கைகளில் ஆணையம் ஒரு தரப்பாகச் சேர்க்கப்படவில்லை. ரூ.86,46,790.37 தொகையை வசூலிப்பதற்காக 27.08.2010 அன்று DRT வழங்கிய வசூல் சான்றிதழின் தொடர்ச்சியாக, வசூல் அதிகாரி 02.02.2011 அன்று விற்பனைப் பிரகடனத்தைத் தயாரிப்ப தற்கும் அதன் நிபந்தனைகளைத் தீர்மானிப்ப தற்கும் நோட்டீஸ் வழங்கினார். மேலும், அந்தச் சொத்துடன் தொடர்புடைய வில்லங்கங்கள், பொறுப்புகள் மற்றும் கோரிக்கைகளைத் தெரிவிக்குமாறு வங்கிக்கு உத்தரவிட்டார். குறிப்பிட்ட மனையை வங்கிக்கு அடமானம் வைக்க தான் எந்த அனுமதியும் வழங்கவில்லை என்ற அடிப்படையில் ஆணையம் ஒரு ஆட்சேப னையைத் தாக்கல் செய்தது. இருப்பினும், அந்த ஆட்சேபனை 27.02.2012 அன்று வசூல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டது. குறிப்பிட்ட மனை தொடர்பாக ‘ஈட்டா மதிப்பு உயர்வு’ தொகையைக் கணக்கிட்டுத் தெரிவிக்குமாறு

DDA–விற்கு உத்தரவிடாமலும், அந்தத் தொகையை உறுதி செய்யாமலும், விற்பனைப் பிரகடனத்தை வெளியிடுமாறு வசூல் அதிகாரி உத்தரவிட்டார்.

27. 27.09.2012 அன்று மின்–ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பில் விற்பனை விலை ரூ.8.85 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும், குறிப்பிட்ட மனையின் மீது மே.ஆணையத்திற்கு வில்லங்கம் உள்ளது, அதாவது 'ஈட்டா மதிப்பு உயர்வு' தொகைக்கான கோரிக்கை உள்ளது என்ற உண்மை மின்–ஏல அறிவிப்பில் வெளிப்படுத்தப் படவில்லை. வங்கியும், டெ.மே.ஆணையம் மற்றும் கிளப்பிற்கு இடையே இருந்த குத்தகை நிபந்தனைகளை வசூல் அதிகாரியிடம் தெரிவிக்கத் தவறி விட்டது. டெல்லி உயர் நீதிமன்றத்தில் (ரிட் மனு எண் 6972/2012) 05.11.2012 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் பதிவாகியுள்ள வங்கியின் அறிக்கையின்படி, அந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டிய கடமை வங்கிக்கு இருந்தது. எனவே, இந்த மின்–ஏல அறிவிப்பு 1961–ஆம் ஆண்டு சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் விதி 53 மற்றும் 1962–ஆம் ஆண்டு விதிகளின் விதி 16 ஆகியவற்றை மீறி வெளியிடப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆகவே, 27.09.2012 தேதியிட்ட மின்–ஏல விற்பனை அறிவிப்பு மற்றும் விற்பனைப் பிரகடனம், அதேபோல் 08.07.2013 மற்றும் 12.07.2013 ஆகிய தேதிகளில் ஏலக் கொள்முதல் தாரருக்கு ஆதரவாக வழங்கப்பட்ட விற்பனை உறுதிப்படுத்தல் மற்றும் விற்பனைச் சான்றிதழ் ஆகியவற்றிற்கு எந்தவொரு சட்டப்பூர்வ அங்கீகாரமும் அளிக்க முடியாது.

28. இந்த நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு, தார்யாவோ மற்றும் இதர நபர்கள் –எதிர்– உத்திரப்பிரதேச அரசு மற்றும் இதர நபர்கள் (1961 SCC OnLine SC 21 : (1962) 1 SCR 574 : AIR 1961 SC 1457) என்ற வழக்கில், ரிட் மனு நடவடிக்கைகளில் 'முன்தீர்ப்புத் தடை' கோட்பாட்டைப் பயன்படுத்துவது குறித்த கேள்வியைக் கையாண்டு, தனது முடிவை அந்தத் தீர்ப்பின் பத்தி 26–ல் சுருக்கமாகக் கூறியுள்ளது. மேற்கூறிய பத்தியானது, இந்த நீதிமன்றத்தின் மற்றொரு அரசியலமைப்பு அமர்வால் குலாப் சந்த் சோட்டாலால் பரிக் –எதிர்– குஜராத் அரசு என்ற வழக்கின் பத்தி 53–ல் பின்வருமாறு எடுத்தாளப்பட்டுள்ளது:

"53. தார்யாவோ வழக்கில், இந்த நீதிமன்றம் ரிட் மனு நடவடிக்கைகளில் 'முன்தீர்ப்புத் தடை' கோட்பாட்டைப் பயன்படுத்துவது குறித்த கேள்வியை மீண்டும் கையாண்டது. இந்த விவகாரம் மிகவும் விரிவாக ஆராயப்பட்டது மற்றும் அதன் இறுதி முடிவுகள் பக்கம் 592–இல் காணப்படுகின்றன. அவற்றை நாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 226இன் கீழான ஒரு மனு, தகுதியின் அடிப்படையில் ஒரு எதிர்த்தரப்பு விவகாரமாகப் பரிசீலிக்கப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டால், அந்த முடிவானது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மேல்முறையீடு அல்லது பிற பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் மாற்றப்படவோ அல்லது ரத்து செய்யப்படவோ இல்லை என்றால், அது தரப்பினரைக் கட்டுப்படுத்தும்.

2. ஒரு தரப்பினர் அந்தத் தீர்ப்பைப் புறக்கணித்துவிட்டு, அதே உண்மைகளின் அடிப்படையில் மற்றும் அதே போன்ற உத்தரவுகள் அல்லது ரிட் ஆணைகளைப் பெறுவதற்காகப் பிரிவு 32இன் கீழ் இந்த நீதிமன்றத்தில் அசல் மனுவைத் தாக்கல் செய்ய முடியாது.

3. உயர்நீதிமன்றத்தில் பிரிவு 226இன் கீழான மனு, தகுதியின் அடிப்படையில் அல்லாமல், மனுதாரரின் காலதாமதம் காரணமாகவோ அல்லது அந்தத் தரப்பிற்கு மாற்றுத் தீர்வு உள்ளது என்பதன் காரணமாகவோ தள்ளுபடி செய்யப்பட்டால், அந்தத் தள்ளுபடி பிரிவு 32–ன் கீழான ஒரு பிந்தைய மனுவிற்குத் தடையாக அமையாது.

4. இருப்பினும், உயர்நீதிமன்றத்தால் கண்டறியப்பட்ட உண்மைகள் பிரிவு 32–ன் கீழும் பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில், அத்தகைய தள்ளுபடி பிரிவு 32–ன் கீழான பிந்தைய விண்ணப்பத்திற்குத் தடையாக

அமையலாம்.''

29. எனவே, 'முன்தீர்ப்புத் தடை' கோட்பாடானது, ஒரு விவகாரம் ஒருமுறை கேட்கப்பட்டு, தரப்பினரிடையே இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டு விட்டால், அதை மீண்டும் கிளற முடியாது என்ற அடிப்படையைக் கொண்டது. மேற்கூறிய நன்கு நிறுவப்பட்ட சட்டக் கோட்பாடுகளின் வெளிச்சத்தில், இந்த வழக்கின் உண்மை களைக் கவனிக்கலாம். DDA–வால் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய ரிட் மனு (C) எண் 6972/2012, குத்தகை நிபந்தனைகளின்படி ஏலம் நடைபெறும் என்று வங்கி அளித்த உறுதிமொழியின் அடிப்படையில் திரும்பப் பெறப்பட்டது. அந்த முந்தைய ரிட் மனு தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவில்லை. உயர்நீதிமன்றத்தின் 05.11.2012 தேதியிட்ட உத்தரவில் பதிவான வங்கியின் உறுதிமொழியின்படி, குத்தகை நிபந்தனைகளின்படி ஏலம் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்த DDA–விற்கு உரிமை இருந்தது. ஆனால் 09.11.2012 அன்று நடைபெற்ற ஏலம் குத்தகை நிபந்தனைகளை மீறி நடத்தப்பட்டது. எனவே, நீதிமன்றத்தை அணுக DDA–விற்கு ஒரு புதிய வழக்குக் காரணம் உருவானது. ஆகவே, உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908–இன் பிரிவு 11–க்கு இணையான கோட்பாடுகள் இந்த வழக்கின் உண்மைகளுக்குப் பொருந்தாது. குத்தகை ஆவணத்தின் நிபந்தனைகள் மற்றும் 1961ஆம் ஆண்டு சட்டம் மற்றும் 1962–ஆம் ஆண்டு விதி களுக்கு முரணாக நடத்தப்பட்டதால் செல்லாத தாக இருந்த ஏலத்தின் சட்டப்பூர்வத் தன்மையைப் பரிசீலிக்காமல், சி.பி.சி பிரிவு 11–க்கு இணையான கோட்பாடுகளால் மனு தடைபட்டுள்ளது என்று கூறி ரிட் மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றத்தின் செயல் தவறானது.

30. இப்போது ஏலக் கொள்முதல் தாரரின் நிலையைப் பார்ப்போம். ஃபைபுரோசா ஸ்போல்கா அக்ய்ஜனா எஃபைர்பெய்ர்ன் லாசன் கோம்பே பார்போர் லிட் என்ற வழக்கில், 'அநீதியான முறையில் செழிப்படைதல்' அல்லது அநீதியான பலனைத் தடுப்பதற்கு எந்தவொரு நாகரிகமான சட்ட அமைப்பும் தீர்வுகளை வழங்கக் கடமைப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. அதாவது, ஒரு நபர் மற்றொன்றிடமிருந்து பெற்ற பணத்தையோ அல்லது பலனையோ மனசாட்சிக்கு விரோதமாகத் தன்வசம் வைத்திருப்பதைத் தடுக்க வேண்டும். ஆங்கிலச் சட்டத்தில் இத்தகைய தீர்வுகள் பொதுவாக ஒப்பந்தம் அல்லது உரிமையியல் தவற்றிலிருந்து மாறுபட்டவை. மேலும் இவை 'பகுதி–ஒப்பந்தம்' அல்லது 'மீட்டளித்தல்' என்று அழைக்கப்படும் பொதுச் சட்டத்தின் மூன்றாவது பிரிவின் கீழ் வருவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய சட்டக் கோட்பாடு இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வால் நாக்பூர் கோல்டன் டிரான்ஸ்போர்ட் கம்பெனி –எதிர்– நாத் டிரேடர்ஸ் மற்றும் இதர நபர்கள் என்ற வழக்கில் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, மீட்டளித்தல் என்பது ஒரு சட்ட சாதனம் மட்டுமல்ல. அது ஒரு தார்மீகக் கட்டாயமாகும். எவரும் மற்றவர் செலவில் அநீதியாகச் செழிப்படையக் கூடாது என்பதும், தவறு செய்யாமல் பாதிக்கப்பட்டவர்கள் பணத்தால் ஈடுசெய்யக் கூடிய அளவிற்குத் தங்களின் பழைய நிலைக்குத் திரும்பக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதும் நீதியின் அடிப்படைத் தத்துவமாகும். மீட்டளித்தல் வழங்கும் அதிகாரம் ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் இயல்பாகவே உள்ளது, மேலும் வழக்கின் நீதி தேவைப்படும் இடங்களில் அது பயன்படுத்தப்படும்.

31. இந்த வழக்கின் உண்மைகளில், ஏலக் கொள்முதல் தாரர் தான் உருவாக்காத ஒரு சூழ்நிலையில் சிக்கியுள்ளார். இந்த சட்ட நாடகத்தில் உள்ள அனைத்துப் பாத்திரங்களிலும், அவர் ஒருவரே அப்பாவி. ஏலக் கொள்முதல் தாரர் நல்லெண்ணத்தில் ஏலத்தில் பங்கேற்று, ஏலத் தொகையைச் சமர்ப்பித்து, சட்டம் இந்த ஏலத்திற்குச் சட்டப்பூர்வ அங்கீகாரத்தை அளித்துள்ளது என்ற நம்பிக்கையில் தனது கடின உழைப்பால் ஈட்டிய பணத்தைச் செலுத்தினார். ஏலக் கொள்முதல் தாரர் நிபந்தனைகளை மீறவில்லை அல்லது கவனக்குறைவாகச் செயல்படவில்லை. மேலும் அவர் சட்டவிரோதத்தி

லிருந்து லாபம் ஈட்ட முயலவில்லை. எனவே, மீட்டளித்தல் என்பது ஒரு சட்ட சாதனம் மட்டுமல்ல. ஒரு தார்மீகக் கட்டாயமாகும். இந்த தத்துவமே ஏலக் கொள்முதல் தாரருக்கு நிவாரணம் வழங்குவதில் வழிகாட்டியாக இருக்க வேண்டும். சட்டவிரோதமான அடமானத்தின் அடிப்படையில் பணத்தை வழங்கியதும், சட்டப் பூர்வமாகத் தனது வசம் இல்லாத ஒன்றை ஏலம் விடத் துணிந்ததும் வங்கியே என்பதால், அதன் விளைவுகளுக்கு வங்கியே பொறுப்பேற்க வேண்டும்.

(vi) **முடிவு:**

32. இதன் விளைவாக, உயர் நீதிமன்றத்தால் ரிட் மனு (C) எண் 5005/2014-இல் 11.08.2014 அன்று பிறப்பிக்கப்பட்ட மேல் முறையீடு செய்யப்பட்ட உத்தரவு, 27.09.2012 தேதியிட்ட மின்-ஏல அறிவிப்பு, 09.11.2012 அன்று ஈகீகூ வசூல் அதிகாரியால் நடத்தப்பட்ட மின்-ஏலம், ஏலக் கொள்முதல் தாரருக்கு ஆதரவாக வழங்கப்பட்ட 08.07.2013 மற்றும் 12.07.2013 தேதியிட்ட விற்பனை உறுதிப் படுத்தல் மற்றும் விற்பனைச் சான்றிதழ் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. வைப்பீட்டில் உள்ள முழுத் தொகையையும் ஏலக் கொள்முதல் தாரருக்குத் திருப்பி அளிக்குமாறு வங்கிக்கு உத்தரவிடுகிறோம். ஏலக் கொள்முதல் தாரர் கணிசமான காலத்திற்குத் தனது பணத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பை இழந்துள்ளார், அந்தப் பணம் வேறு எங்காவது இருந்திருந்தால் பலன் அளித்திருக்கும். எனவே, வங்கியிடம் டெபாசிட்டில் உள்ள மீதித் தொகைக்கு வட்டி பெற ஏலக் கொள்முதல் தாரருக்கு உரிமை உண்டு. ஆகவே, ஏலக் கொள்முதல் தாரர் வைப்பீடு செய்த மற்றும் வங்கியிடம் உள்ள மீதித் தொகையை, வைப்பீடு செய்த தேதியிலிருந்து திருப்பிச் செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு 9% வட்டி யுடன் ஒரு மாதத்திற்குள் ஏலக் கொள்முதல் தாரரிடம் திருப்பி அளிக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறோம்.

33. இந்த மேல்முறையீடு மேற்கூறிய நிபந்தனைகளின்படி அனுமதிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்:எஸ்.சம்பத், மதுரை**

## சாலைகள், தெருக்களில் ஜாதிப் பெயர்கள்: தமிழக அரசு பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

சாலைகள், தெருக்கள் உள்ளிட்ட பொது இடங்களின் ஜாதிப் பெயர்களை நீக்க பிறப்பித்த உத்தரவுக்கு தடை கோரிய மனு குறித்து, தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு 20.3.2026 உத்தரவிட்டது.

மதுரையைச் சேர்ந்த பரமசிவம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு. தமிழகத்தில் உள்ள குடியிருப்புகள் நீர்நிலைகள், சாலைகள், தெருக்களில் ஜாதிப் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. இந்தப் பெயர் களை நீக்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஜாதிப் பெயர்களை நீக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

இதன்படி ஆதிதிராவிடர் காலனி, ஹரிராஜன் குடியிருப்பு, வண்ணான் குளம் போன்ற ஜாதி பெயர்களை நீக்கி புதிய பெயரிடம் பணிகளைத் தொடங்கவும் தமிழக அரசு உத்தரவிட்டது. இதை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, தமிக அரசு பிறப்பித்த இந்த அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் அவர் கோரினார்.

இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்றம், ஜாதி பெயர்களை நீக்குவது குறித்து தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் அதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டது குறித்து பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். அதுவரை ஜாதி பெயர்களை நீக்குவது குறித்து மக்கள் கருத்துக் கேட்பது ஆய்வு நடத்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இறுதி முடிவு எதுவும் எடுக்க வேண்டாம் என உத்தவிட்டது.

இந்த நிலையில், இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார், எம் ஜோதிராமன் அமர்வு முன் 20.3.2026 மீண்டும் விசாரணைக்கு வந்தது.

நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு. தமிழகம் முழுவதும் எந்தெந்த தெருக்கள், ஊர்ப் பெயர்கள் ஆட்சபேங்களுக்கு உரிய வகையில் உள்ளன. எந்தெந்த தெருக்களின் சாதி பெயர்களை நீக்க வேண்டும் என்பது குறித்து விவரங்களை தமிழக அரசு பதில் மனுவாக தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

**நன்றி: தினமணி 21.3.2026**

# விசாரணை நடைமுறையும் முத்திரை வில்லைத் தீர்வையும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி பி.பி.பாலாஜி**
**உ.சீ.ம.(P.D.) எண் 2637/2023, உ.ப.ம. எண் 16282/2023**
**நாள்: 1.8.2025**
**2025 (5) CTC 767**

**அப்துல் மாலிக் சாயுபு ...மனுதாரர்**

**–எதிர்–**

**அலிமாபீ (இறப்பு) முகமது சையது (2) ஹசீமா 3. பத்ருநிஷா**
**4. குருசிதாமா 5. முகமது அலி ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

எம்.முருகானந்தம்
மனுதாரரின் வழக்கறிஞர்

எஸ். சசிகலா
எதிர்வழக்கீட்டாளர் எண் 1இன் வழக்கறிஞர்

எதிர்வழக்கீட்டாளர் எண் 2 முதல் 5 வரையிலானவர்களுக்கு எவரும் முன்னிலையாகவில்லை.

உ.சீ.ம. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை** : மு.வ.எண் 232/2012, 10.4.2023 தேதியிடப்பட்டது. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கோப்பில் உள்ளது. மு.மே.எண் 545/2019 குறை கூறப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் சீராய்வு மனுவானதுஇந்திய அரசியலமைப்பின் 227ஆம் உறுப்பின்படி முன்னிடப்பட்டுள்ளது.

## தீர்ப்பு

1. மு.வ.எண் 232/2012இல் முதல் 1ஆம் எதிர்வாதி கூடுதல் மாவட்ட முனிசிப் உளுந்தூர்பேட்டையில் சீராய்வு மனுவை முன்னிட்டுள்ளார்.

2. வாதிகள் மு.மே.எண் 545/2019இனை முன்னிட்டுள்ளனர். கட்டளை 13 விதி 8 உரிமை வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டம் 1908இன்படி அதில் 1.7.1993 தேதியிடப்பட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணத்தை பற்றுகை செய்ய கோரியும் முத்திரைவில்லையில் குறைந்த இருந்த தொகையை சேகரிக்க கோரியுள்ளார். சொல்லப்பட்ட விண்ணப்பம் கூடுதல் மாவட்ட முனிசீப்பினால் அனுமதிக்கப் பட்டது. இதற்கு எதிராக தற்போதைய சீராய்வு செய்யப் பட்டுள்ளது.

3. நான் மனுதாரரின் வழக்கறிஞர் திரு.என்.முருகானந்தம் மற்றும் முதல் எதிர் வழக்கீட்டாளரான வழக்கறிஞர் திருமதி சசிகலாவும் என்னால் கேட்டறியப்பட்டனர்.

4. மனுதாரரின் வழக்கறிஞர் விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டு பிறப்பிக்கப் பட்ட ஆணையை என்னை காரணம் கூறி அதில் பின்பற்ற நடைமுறை ஆந்திரபிரதேச உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு ஏ.தெய்வ சிகாமணி கவுண்டர் வி.எம்.ஏ. ஆண்டமுத்துக் கவுண்டர் 1955 (68) LW 146; ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது. கே. சாந்தகுமாரி –எதிர்– கே. சுசிலாதேவி, AIR 1961 AP 4241. இவர் இந்த நீதிமன்ற முடிபு இந்த வழக்கில் கூறப்பட்டதும் ஆதாரமாக்கப்பட்டது. நாச்சிமுத்து –எதிர்– ராமண்ணன் 2024 (3) த.த.வ. 399. இதில் இந்த நீதிமன்றம் கூறியதாவது, குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டதன்பேரில், வாதி தனது உரிமை மூல பாத்தியதையின் சொத்தான பிரிக்கப்பட்டது. பதிவு செய்யப்படாததன் விளைவு, இது சரி செய்யப்பட முடியாதது. இது தொடர்பான சாட்சி இந்த நீதிமன்றம் மேலும், கூறியதாவது, போதிய முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை என்பது. இதனை சரி செய்ய, தண்டத்துடன் செலுத்தம் செலுத்தி சரி செய்யப்படலாம். எனினும் பதிவு செய்யப்படாதது சரி செய்ய

முடியாத தவறாகும்.

5. மேலே கூறப்பட்ட முடிவுகளினை ஆதார மாகக் கொண்டு, மனுதாரரின் வழக்கறிஞர், கூறியதாவது. விசாரணை நீதிமன்றம் பதிவு செய்யப்படாத பாகப் பிரிவினை ஆவணத்தை சான்றாக ஏற்குமாறு பணிப்புரை வழங்கி யிருக்கக் கூடாது. அதுவும் குறையும் முத்திரை வில்லையினை செலுத்துவதன்பேரில், விசாரணை நீதிமன்றம், அந்த ஆவணம் ஏற்கப்படத்தக்கதா என்பதை முதலில் தீர்மானித்து விட்டு, பின்னர், அதில் உரிய முத்திரை வில்லை மற்றும் தண்டத்தை செலுத்தப்பட வேண்டுமா என்பதை கண்டறிதல் வேண்டும். எனவே இவர் இதனை சீராய்வு செய்ய அனுமதிக்க கோருகிறார் மற்றும் விசாரணை நீதிமன்ற ஆணையை தள்ளுபடி செய்ய கோருகிறார்.

6. மாறாக, திருமதி எஸ். சசிகலா முதல் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்ப தாவது 1.7.1993 தேதியிடப்பட்ட பாகப் பிரிவினை ஆவணம், பதிவு செய்யப்படாதது அதன்படி தாவாவில் உள்ள சொத்தானது ஷாருன்னிசா பீவி என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனை 3.3.2009 அன்று வாதி சார்பாக விற்றுள்ளார் மற்றும் பின்னர் வாதி இந்தச் சொத்தினை அனுபவித்து வந்துள்ளார் மற்றும் அவரது இறப்பிற்குப் பின்னர், வாதிகள் 2 முதல் 5 வரையிலானவர்களின் அவரது சட்ட வாரிசுகள் இதனை உடைமையில் கொண்டு துய்த்தும் வந்துள்ளனர். இதனால் அவள் மேலும் அந்த ஆணையில் கூறியது. வாதுரை யில் வாதிக்கப்பட்டதற்கு பங்களிப்பு ஆவணத்தை செயற்படுத்த வேண்டிய கட்டாயம் மற்றும் குறைந்ததாக கூறப்படும் முத்திரை வில்லைத் தீர்வையை தண்டத்துடன் செலுத்துவதாக கூறப்பட்டது. மேலும் கூறியதாவது விசாரணை நீதிமன்றம் வாதிகளால் முன்னிடப்பட்ட விண்ணப்பத்தினை அனுமதித்ததன் மூலம் எந்தத் தவறையும் இழைக்கவில்லை என்பது.

7. வழக்கறிஞர் தான் ஆதாரமாகக் கொண்டது. உச்சநீதிமன்ற வழக்கின் முடிபு அவினாஷ் குமார் சாஹன் –எதிர்– விஜய் கிருஷ்ணா மிஸ்ரா, 2008 (6) CTC 516 (SC): 2009 (2) SCC 532. இதில் உச்சநீதிமன்றம் கூறியதாவது ஆவணம் சாட்சியாக கொண்டு வரப்படுவது நோக்கங்கள் அனைத்தும் நீக்கப்பட்டாலும் இந்த ஆவணம் ஏற்கப்பட எந்த வழியும் இல்லை. இதனை துணைச் சான்றாகக் கூட ஏற்க முடியாது என்பது உச்சநீதிமன்றம் மேலும் கூறியதாவது போதிய முத்திரை வில்லை ஒட்டப்படாதபோது, முத்திரை வில்லைச் சட்டத்தின் 35ஆம் பிரிவின் வரை யுரைகளின்பேரில் ஆணையை நிறைவேற்ற அதிகாரம் கொண்டுள்ளது மற்றும் பிரிவு 33 ஒரு சட்டக் கடமைப் பொறுப்பை கொண்டுள்ளது. அனைத்து அதிகாரங்களின்படியும் ஆவணத்தை நிறுத்தி வைக்க முடியும்.

8. நான் கவனமாக இரு தரப்பினரின் பணிந்தனுப்புதல்களை கவனித்துள்ளேன்.

9. சீராய்வு மனுதாரரின் குறிப்பிட்ட வாத மாவது, பாகப்பிரிவினை ஆவணம் செயற் படுத்தப்பட முடியாது. ஏனெனில் சீராய்வு மனுதாரருக்கிணங்க, 1.7.1993இல் எந்த பாகப்பிரிவினை ஆவணமும் இல்லை. முதலிடத்தில் மற்றும் 27.9.1993 தேதியிடப் பட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தையொட்டி தாவாவில் உள்ள சொத்தானது ஒதுக்கீடு செய்யப்பட்டது. தாவாவில் உள்ள சொத்தானது ஷாருன்னிசா பீவி என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனை பின்னர் அவர் வாதி சார்பாக அளித்துள்ளார். எனவே, சீராய்வு மனுதாரரின் வாதமாவது, 1.7.1993 தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்யப்பட்டிருந்தால் அன்றி அது சான்றாக பெறப்பட முடியாது மற்றும் இதில் முத்திரைவில்லைத் தாளின் மதிப்பினைச் செலுத்துவது பற்றிய கேள்வி எழவில்லை.

10. விசாரணை நீதிமன்றம், கண்டறிவ தாவது, சொல்லப்பட்ட 1.7.1993 தேதியிடப்பட்ட பங்களிப்பு ஆவணம், கட்டாயமாக பதிவு செய்யப் பட வேண்டியது. 1908 பதிவுச் சட்டத்தில் 17(1)(ஆ) பிரிவின்படி எனினும், அத்துடன் நிறுத்தி விடாது. அந்த ஆவணத்திற்கு போதிய முத்திரை வில்லை ஒட்டப்படவில்லை என்பதும் அந்த முறையாவணம் சான்றாக ஏற்கத்தக்க தல்ல. அதாவது துணைச் சான்றாகவும் கூட

ஏற்கப்பட முடியாததாகிறது. எனவே, இதனைச் செயற்படுத்த இயலாது. சொல்லப்பட்ட விசாரணை நீதிமன்ற ஆணை, நேரடியாக இயலாது. சொல்லப்பட்ட விசாரணை நீதிமன்ற ஆணை, நேரடியாக இல்லாது நீதிமன்ற வழக்கின் முடிவுக்கு மாறாக உள்ளது. அதாவது தெய்வ சிகாமணி கவுண்டர் வழக்கு (மேலே குறிப்பிடப் பட்டுள்ளது) இந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் கூறியுள்ளதாவது, ஆவணம் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் இதற்கு முத்திரைவில்லைச் சட்டப்படி போதிய முத்திரை வில்லைத் தீர்வை செலுத்தப்பட வேண்டியது. அதுவும் அதற்கான சட்டத்துடன் சேர்த்து என்பதாகும்.

11. இந்த நீதிமன்றம், கண்டறிவதாவது விசாரணை நீதிமன்றம், இந்த முறையாவணம் பிரிவு 17இன்படி வருவதாகக் கூறத் தவறி யுள்ளது மற்றம் இதன் விளைவாக இது சான்றாக ஏற்கப்படுமா என்பதும் பார்க்கப் படவில்லை. இந்த நீதிமன்றம் கூறியதாவது விசாரணை நீதிமன்றத்தினால் பின்பற்றப்பட்ட வேறுபட்ட முறையாவண நடைமுறை முழுவது மாக ஏற்கத்தக்கதல்ல. இந்த நீதிமன்றம் மேலும் கூறியதாவது. இந்த ஆவணத்தினை ஏற்பது குறித்த எதிர்ப்பு உள்ளபோது, அதுவும் அது பதிவு செய்யப்படாது உரிய முத்திரைத் தீர்வை ஒட்டப்படாதபோது, இது இரண்டு பற்றியும் விசாரணை நீதிமன்றம் தீர்மானித்திருத்தல் வேண்டும் மற்றும் விசாரணை நீதிமன்றம் இதனை ஏற்க நிராகரித்தல் வேண்டும் அதாவது அது பதிவு செய்யப்படாத காரணத்தால் அது ஏற்கப்பட முடியாது என்றும் மற்றும் அதன் பின்னர் அது பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை தீர்மானித்தல் வேண்டும்.

12. ஆந்திரா உயர்நீதிமன்றம் நமது நீதிமன்றத்தின் முழுமைப் பின்பற்றி கூறியுள்ள தாவது இது ஏற்கத்தக்கதா என்பது பற்றிய கேள்வியைத் தீர்மானிக்காமல், நீதிமன்றம் குறைவானதாக உள்ள முத்திரை வில்லைத் தீர்வையை தண்டத்துடன் செலுத்த கோர முடியாது. இந்த முடிவுகள் இந்த வழக்கில் பொருண்மை களுக்குப் பொருந்துவதாக அமைகிறது.

13. சீராய்வு மனுதாரரால் மறுப்பானது, எழுப்பப்பட்டது. ஆவணம் பதிவு செய்யப்பட வேண்டியது. எனவே அது சான்றாக ஏற்கத் தக்கதல்ல என்பது. எனினும் வாதிகள், ஆவணத்தை செயற்படுத்த விரும்பினர் மற்றும் குறைவுபட்ட முத்திரை வில்லைத் தீர்வையையுடன் தண்டத்தை யும் செலுத்திய பின்னர், அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத காரணத்தால் அது ஏற்கப்பட முடியாது என்ற காரணம் கூறப் பட்டபோது, இதில் போலி முத்திரை வில்லை தண்டத்துடன் தீர்வையாகச் செலுத்தப்பட வில்லை என்று குறையும் ஒத்தி வைக்கப்படும் மற்றும் விசாரணை நீதிமன்றம், முதலில் தீர்மானிக்கப்பட வேண்டியது. இதில் ஆவணம் சான்றாக ஏற்கப்பட முடியுமா என்பது. நீதிமன்றம் ஆவணம் ஏற்கப்பட முடியாது என்று கண்டறியப் பட்டவுடன் அல்லது அது துணைநோக்கங்களுக் காகப் பயன்படுத்தப்படும் என்று அறிந்த பின்னர், தண்டத்தையும் செலுத்த முற்பட்ட பின்னர், அதனை மேற்கொண்டு நடத்த ஏற்கப் படத்தக்கதா என்பதை கண்டறியும் முன்னர் குறைவுபட்ட முத்திரை வில்லைத் தீர்வை தண்டத்துடன் செலுத்த கோரப்படுதல் ஆகாது.''

14. மேற்சொல்லப்பட்ட கருத்துக்களின்படி விசாரணை நீதிமன்ற தள்ளுபடி செய்யும். விசாரணை நீதிமன்றம் ஏற்கனவே கண்டறிந்த வாறு ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றதும் ஆவணம் நிறைவேற்றப்படுவது பற்றியும் மற்றும் ஆவணத்தின் குறைவுபட்ட முத்திரை வில்லைத் தீர்வையை தண்டத்துடன் செலுத்துவது பற்றிய கேள்வி எழவில்லை.

15. அறுதியாக, உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்படுகிறது. மு.மே.எண் 545/2019இன் மு.வ.எண் 232/2012, 10.4.2023 தேதியிடப்பட்டது. கூடுதல் மாவட்ட முனிசீப் நீதிமன்றம் உளுந்தூர்பேட்டை கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கோப்பில் உள்ளது. அது தள்ளுபடி செய்யப்படுகிறது. இதன் விளைவாக தொடர்பு டைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது. செலவுத் தொகையின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# வக்பு சட்டம் கீழ் முத்தவல்லியின் நீக்கம் பற்றிய வழக்கை வக்பு தீர்ப்பாயம் விசாரித்து தீர்ப்பிட வேண்டும்.

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி வி.லக்சுமி நாராயணன்**
**உ.சீ.ம. எண் 93/2025 – உ.ப.ம. எண் 807/2025**
**2025(3) CTC 641**

**ஏ.அலி அகபர் ...மனுதாரர்**

**–எதிர்–**

1. **தமிழ்நாடு வக்பு வாரியம், சார்பாற்றம்: அதன் தலைமை செயல் அலுவலர், எண் 1, ஜாபர் சைரன் வீதி, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–1.**
2. **தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்பு வாரியம், எண் 1, ஜாபர் சைரன் வீதி, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–1.**
3. **வக்பு கண்காணிப்பாளர்/செயல் அலுவலர், மதுரை வக்பு வாரிய அலுவலக வட்டாரம், தமிழ்நாடு வக்பு வாரியம், மதுரை 1**
4. **எம்.அப்துல் நசீர் ...எதிர்மனுதாரர்கள்**

**திரு.நிசார் அஹமத்,**
**முதுநிலை வழக்குரைஞர்,**

**திரு.ஐ.கௌசர் நிசார், வழக்குரைஞர்,**
**மனுதாரர் சார்பில்**

குமரி யாஸ்மின் அலி,
1–3வது எதிர்மனுதாரர்கள் சார்பில்.

திரு.ராஜா முகமது, 4வது எதிர்மனுதாரர் சார்பில்.

## ஆணை

உபம எண் 17/2024 இல் ஏ.ஏ. எண் 4/ 2024 இல் சென்னயிலுள்ள தமிழ்நாடு வக்பு தீர்ப்பாயத்தால் இயற்றப்பட்ட 23.12.2024 தேதிய ஆணைக்கு இந்த உரிமையியல் சீராய்வு மனு சவாலிடுகிறது.

2.தீர்ப்பாயத்தில் மனுதாரராக உள்ளவர் ஒங்குள்ள மனுதாரர் ஆவார். மதுரை தெற்கு வாசல் மொகைதீன் ஆண்டவர் புராதரண தர்காவின்து மற்றும் மீனா நூர்தீன் புராதன தரகா மற்றும் பள்ளிவாசலின் மேலாண் பொறுப்பாட்சியராக அவர் உள்ளார்.

3.இரு மத நிலையங்களை ஆட்கொள்ளும் திட்ட விதிமுறைகளின் படி நிர்வாக/மேலாண் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்பட வேண்டியதாகும். குழுவில் மொத்தத்தில் 20 பதவிகள் உள்ளன. தேர்தல் நடத்தப்பட்டு மற்ற் 49 பேர்களுடன் மனுதாரரும் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. புதிதாக வழக்கில் சேர்க்கப்பட 4வது எமேமு அத்தகைய ஒருவர் ஆவார். 11.9.2022– 10.9.2025 எனும் மூன்றாண்டுகள் பதவிக் கால அளவாக உள்ளது.

4. உரிமையியல் சீராய்வு மனுதாரரான செயல்பாடுகள் மற்றும் விடுபாடுகள் பற்றி குற்றஞ்சாட்டிக் கொண்டு, புகார் 20.4.2023 அன்று வாரியத்தில் நான்காவது எமேமுஆல் வைக்கப்பட்டது. நான்காவது எமேமு இனது கூற்றுப்படி, உரிமையியல் சீராய்வு மனுதாரரால் இழைக்கப்பட்டதாக சொல்லப்படும் செயல் பாடுகள் வக்பு சட்டப் பிரிவு 64இன் வகை யங்களை ஈர்க்கினறன. இந்த புகார் மீதான விசாரணை வக்பு வாரியத்தால் துவக்கப்படாத தால் இந்த நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கலானது. விசாரணை மேற்கொண்டு உத்தரவுகள் பிறப்பிக்குமாறு வாரியத்தை பணித்துக் கொண்டு ஆணை இயற்றப்பட்டது.

5. அதற்கிணங்க 23.8.2023 அன்று விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னராக வக்புகள் மீது தனிப்பட்ட ஆய்வு மேற்கொள்ள

வக்பு வாரியம் முடிவை செய்தது. வாரியத்தின் தலைமை செயல் அலுவலருடன் சேர்ந்து தலைவரும் இதர நான்கு உறுப்பினர்களும் 3.9.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள். 3.9.2023 தேதிய ஆய்வின் பின்தொடர்கையாக ஓர் அறிக்கையை தலைமை செயல் அலுவலர் சமர்ப்பித்தார். தலைமை செயல் அலுவலரது அறிக்கை அடிப்படையில் புதிய விசாரணை 31.10.2023 அன்று வக்பு வாரியத்தால் நடத்தப்பட்டது. விசாரணையின்போது உரிமை யியல் சீராய்வு மனுதாரர பங்கெடுத்தார். அவர் ஒரு வழக்குரைஞராலும் சார்பாற்றம் செய்யப் பட்டார். மனுதாரரானலான செயல்பாடுகள் வக்பு சட்டப் பிரிவு 64 மேலீடாக ஈர்க்கின்றன என 27.11.2023 அன்று வாரியம் தீர்மானித்து காரணங்கேட்பு அறிவிப்பு இயற்றப்படலை பணித்தது.

6. 6.2.2024 அன்று காரணங்கேட்பு அறிவிப்புகளை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வாரியம் அனுப்பியது. மறுமொழிகள் 23.2.2024 அன்று அனுப்பப்பட்டன. சேர்மானமாக, விவகாரங்களது தற்போதய நிலையறிதலுக்காக 18.4.2024 அன்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு மதுரை வக்பு கண்காணிப்பாளர் கோரப்பட்டார். அதன் கடமையாற்றலின் போது 2.5.2024 அன்று அறிக்கையை உள்ளாட்சி நிதி தணிக்கை சமர்ப்பித்தது. வக்பு கண்காணிப்பாளரால் தரப் பட்ட அறிக்கைக்கு பதில் பதவி வகிப்பவர் களால் 6.5.2024 அன்று தரப்பட்டது. மீண்டும் விசாரணைக்காக விஷயத்தை 2.7.2024 அன்று வாரியம் எடுத்துக் கொண்டது. உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை பரிசீலிக்கப்பட்டு அதன் நகலொன்று உரிமையியல் சீராய்வு மனுதார ருக்கு தரப்படாது. மறுமொழியை தாக்கலிட அவருக்கு இரு வார கால அவகாசம் அளிக்கப் பட்டது. மறுமொழியை தாக்கலிடலுக்கான காலக்கெடு 15.7.2024 அன்று முடிந்த போதிலும் அவரது 18.7.2024 தேதிய மறுமொழி வாரியத்தால் வரப்பெறப்பட்டது.

7. காரணங்கேட்பு அறிவிப்பிலும் பதிலிலும் இறுதி வாதங்கள் 15.10.2024 அன்று வைக்கப்பட்டன. அந்த தேதியன்று மனுதாரர் திரு.எம்.ஏ.நசீர் ஹுசைனால் சார்பாற்றம் செய்யப்பட்டார். மனுதாரருக்கு விசாரணை பற்றிய அறிவிப்பு சார்வாக்கப்பட்டபோது கூட, தர்க்காவுக்கான உர்ஸ் திருவிழா 4.10.24– 17.10.2024 இடையில் நடத்தப்பட வேண்டிய தாகும் என கூறிக் கொண்டும் ஒத்தி வைத்தலுக்கு வேண்டுகை வைத்துக் கொண்டும் ஒரு மேற் குறிப்பை அறிவிப்பில் மனுதாரர் செய்திருந்தார் என் திரு.எம்.ஏ.ஹுசைனால் சுட்டிக் காட்டப் பட்டது. மற்ற இரு தர்காக்களின் மேலாண் பொறுப்பாட்சியராக அவரது கட்சிக்காரர் உள்ள தாலும் 17.10.2024 அன்று மட்டுமே உர்ஸ் முடியவிருப்பதாலும் அவர் தள்ளி வைத்தலை வேண்டினார் எனவும் அவர் கூடுதலாக கூறினார். வக்பு வாரியம், ஆகஸ்ட் 2023இல் ஏதோ காலகட்டத்தில் நடவடிக்கைகள் துவக்கப் பட்டிருந்தன எனும் பொருண்மையை பரிசீலித்துக் கொண்டு ஒத்தி வைத்தலுக்கான வேண்டு கோளை நிராகரித்து விஷயத்தில் ஆணைகளை தள்ளுவைக்க முனைந்தது. தொடர்ச்சியாக வக்பு வாரியம் ஆணை இயற்றி அதனை தேதி யிட்டு அதன்பேரில் 15.10.2024 அன்று வாதங்கள் கேட்டறியப்பட்டன.

8. உரிமையியல் சீராய்வு மனுதாரருக்கும் இதர முத்தவாலிகளுக்கும் இந்த உத்தரவு சார்வானது. உத்தரவு காரணமாக குழு நீக்கப் பட்டு வக்பு வாரியம் நேரடி மேலாண்மையை எடுத்துக் கொண்டது. வக்பு சட்டப் பிரிவு 38 கீழான அதிகாரம் செலுத்தலில் வக்பு விவகாரங்களை பொறுப்பில் எடுத்திட செயல் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

9. வக்பு வாரியத்தால் இயற்றப்பட்ட ஆணைக்கு சவாலிட்டுக் கொண்டு நீதிப் பேராணை மனு இந்த நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தாக்கலானது. சட்டமுறை மேல் முறையீடு உரிமை மனுதாரருக்கு கிட்டுவதால் வக்பு தீர்ப்பாயத்தை அணுகுமாறு தரப்பினர் களை பணித்துக் கொண்டு நீதிப்பேராணை மனு தள்ளுபடியாக்கப்பட்டது. அதனால் துயருற்று மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வில் முன்னிட்டப்பட்டது.

10. கிட்டும் மாற்றுமுறை தீர்வழியை பயன் படுத்துமாறு தரப்பினர்களை பணிக்கும் தனி நீதிபதியின் ஆணையை இரு நீதியர் அமர்வு உறுதியாக்கியது. ஆனால், ஒரு வார கால அளவுக்கு ஏற்கனவே உள்ள நிலை உத்தரவை அது வழங்கியது. உயர்நீதிமன்றததால் அளிக்கப் பட்ட காலக்கெடுவுக்குள் மேல்முறையீடு ஏ.ஏ. எண் 4/20124 வக்பு தீர்ப்பாயத்தில் தாக்க லானது. சொன்ன மேல்முறையீடுடன், முத்தவல்லி பதவியிலிருந்து மனுதாரரை அகற்றிக் கொண்டு தமிழ்நாடு வக்பு வாரியத்தால் எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகளுக்கும் தலைமை செயல் அலுவலரால் இயற்றப்பட்டிருந்த விளைவுறு அனைத்து மேல் நடவடிக்கைகளுக்கும் எதிராக தடையாணை கோரும் உபம எண் 17/2024 எனும் எண்ணுள்ள விண்ணப்பமும் தாக்கலிடப் பட்டது.

11. விண்ணப்பத்தில் தமிழ்நாடு வக்பு தீர்ப்பாயம் அறிவிப்பு இயற்றிய இரண்டாவது எமேமு இடமிருந்து எதிருரையை வரப்பெற்றது. இருதரப்பினர்களும் ஆவணங்களை தீர்ப்பாயத்தில் குறியிட்டார்கள். மனுதாரர் தரப்பில் சா.பி1–பி10 குறியீடாகின. எமேம தரப்பில் சா.ஆர்1–ஆர்23 குறியீடாகின.

12. மனுதாரரது மற்றும் எமேமுஇன் வாதங்களை கேட்டறிந்து பின்பு, வக்பு வாரியத்தால் இயற்றப்பட்ட ஆணை பிரம ஃபசியாக் செல்லுவதாகும் என வக்பு தீர்ப்பாயம் முடிவெடுத்து தடையானைக்கான சொன்ன மனுவை தள்ளுபடி செய்தது. அதனால் துயருற்று இப்போதைய உரிமையியல் சீராய்வு மனு ஏற்படுகிறது.

13. சீராய்வு மனுதாரரது வழக்குரைஞர் திரு. என்.ஏ.நசீர் ஹுசைன் சார்பில் முதுநிலை வழக்குரைஞர் திரு. என்.ஏ. நிசார் அகமதையும் தமிழ்நாடு வக்பு வாரியம் சார்பாக குமார் யஸ்மின் அலியையும் வழக்கில் சேர்க்கப்பட்ட நான்காவது மேமு சார்பில் திரு.ராஜா முகமதை யும் நான கேட்டறிந்தேன்.

14. நீக்கப்படலுக்காக உத்தரவு இயற்றப்பட்ட போதிலும் சொத்தின் உடைமை அவரது கட்சிக் காரர் வசம் தொடர்கிறது என திரு.என்.ஏ. நிசார் அகமது வாதுரைக்கிறார். குழு அகற்றப் பட்டிருந்து செயல் அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார் என்ற மரணத்தால் மட்டுமே வளாகங்களில் செயல் அலுவலர் நுழைந்து உடைமை கொள்ளவியலும் எனவாக அர்த்த மாகாது என அவர் கூடுதலாக கூறுகிறார்.

15. 1995இன் தமிழ்நாடு வக்பு பிரிவு 68 இக்கு எனது கவனத்தை ஈர்த்துக் கொண்டு உடைமை எடுத்தல் நோக்கத்துக்காக ஆணை செயல் நடுவரால் பிறப்பிக்கப்பட வேண்டும் என வற்புறுத்துகிறார். பிரிவு 68(1)இன் விதிமுறைகள் படி உடைமையை ஒப்புவிக்க அவருக்கு ஒரு மாத கால அவகாசம் உண்டு எனவும் அதன் பின்பே பிரிவு 68(2) பொருந்துகையாகும் எனவும் அவர் கூறுகிறார்.

16. மாறாக, இங்குள்ளது பிரிவு 64(1)(கே) கீழான முத்தவல்லி நீக்கமாகும் எனவும் ஆகையால் தீர்ப்பாயாயத்தில் மனுதாரராலான மேல்முறையீடே தடையாகிறது எனவும் குமரி யாஸ்மின் அலியும் திரு.ராஜா முகமதுவும் வாதுரைக்கிறார்கள். அவர்களது கூற்றுப்படி அகற்றல் பிரிவுகள் 64(1)(ஸி–ஜி) மற்றும் 64(1)(கே))இல் உட்படும் போது மட்டுமே மேல்முறையீடு நிலைக்கதக்கதாகும். மேல் முறையீடு வகையத்தின் குறியெல்லைக்கு அது அப்பாலுள்ள நிலையில் மேல்முறையீடே நிலைக்காதபோது. இடைக்கால ஆணை வழங்கல் பற்றிய கேள்வி எழவில்லை.

17. வக்பு வாரியத்தால் நியமிக்கப்பட்ட செயல் அலுவலர் சொத்தின் உடைமையை எடுக்க முயன்றிருந்தபோது அவர் உரிமையியல் மனுதாரராலும் அவரது கூட்டாளிகளாலும் தடுக்கப்பட்டார் எனவும் ஆகையால் காவல் துறை புகார் 19.12.2024 அன்று தரப்பட்டது எனவும் குமரி யாஸ்மின் அலி சேர்த்துக் கூறுகிறார். தடையாணைக்கான மனு 23.12.2024 அன்று தள்ளுபடியான பின்பு பாதுகாப்புக்காக வருவாய் அதிகாரிகளையும் ஆள்வையுறு காவல் நிலையத்தையும் செயல் அலுவலர் நாடினார். போதிய படையை அவர் பெற்று

வக்புவின் உடைமையை 25.12.2024 அன்று வசமாக்கிக் கொண்டார்.

18.சேர்மானமாக நீபேம(ஏம்டி) எண் 11904 / 2019இல் 3.6.2024 தேதியதும் நீபேம(ஏம்டி) எண் 4773/2024இல் 19.8.2024 தேதி யதும் ஆன இந்த நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட இரு ஆணைகளும் வக்பு வாரியத்துக்கு எதிராக செயலாற்றிக் கொண்டிருந்ததால் திரு.என்.ஏ. நசீர் ஹுசைனால் வைக்கப்பட்ட வேண்டு கோளை தள்ளி வைத்திட வாரியம் சரியாக மறுத்தது என திரு.ராஜா முகமது பணிந்து ரைக்கிறார்.

19.இரு தரப்பு பணிந்துரைகளையும் நான் கவனமாக பரிசீலித்துள்ளேன்.

20.விஷயத்தின் கூறுகள் பற்றி கலந்தாயு முன், மேல்முறையீடு நிலுவயின்போது வக்பு தீர்ப்பாயத்தால் இயற்றப்பட்ட இடைக்கால உத்தரவுக்கு எதிராக முன்னிடப்படும் சீராய்வு இதுவாகும் என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும். இது உரிமையியல் விசாரணை முறை தொகுப்பு சட்டத்து வகுமுறை 41இன் விதி 5 கீழ் இயற்றப்பட்ட ஆணையை ஒத்த தாகும். இடைக்கால உத்தரவு வழங்குதல் அல்லது மறுத்தல் முற்றிலும் விவேகாளவவை யானதாகும். அத்தகைய உத்தரவில் சீராய்வு மூலமாக தலையிடுதலின் குறியெல்லை தெளிவாக வரம்பிடப்பட்டதாகும்.

21. உத்தரவு வெளிப்படையில் சட்ட விரோத மானதாக உள்ளது அல்லது தன்னிச்சையான தாகும் அல்லது சட்டமுறை வகையம் அல்லது அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் எதனையும் புறக்கணித்துக் கொண்டு ஆணை இயற்றப் பட்டுள்ளது என காட்டப்படுமானால் மட்டுமே தலையீடு நிலைமை எனக்கு ஏற்படும். விஷயத்தில் ஆழமாக சென்று தீர்ப்பு எதனை யும் நான் அளித்தால் அது இரு தரப்பினர்களது உரிமைகளையும் பாதிக்கும். எனவே நான் அளிக்கவிருக்கும் தீர்ப்பு எதுவும் இந்த சீராய்வை தீர்வாக்கும் நோக்கத்துக்கு மட்டுமானது. அது, மேல்முறையின் இறுதி தீர்வாக்கல் சமயத்தில் தரப்பினர்களை அல்லது தீர்ப்பாயத்தை கட்டுறுத்தாது.

22 வக்பு வாரியத்தில் பணிந்தளித்தலுக்கு போதுமான சந்தர்ப்பம் சீராய்வு மனுதாரருக்கு வழங்கப்பட்டிருந்ததில்லை என்ற வாதம் பரிசீலிக்கப்பட வேண்டிய கேள்வியாக உள்ளது. இயற்றப்பட்ட ஆணைகளுக்கு முறபட்டதாக 23.8.2023, 31.10.2023 மற்றும் 2.7.2024 தேதிகளில் வக்பு வாரியம் விசாரணை செய்த தையும் இறுதியாக உத்தரவு 15.10.2024 அன்று இயற்றப்பட்டதையும் மேல் விவரிக்கப் படும் நிகழ்வுகள் வரிசை காட்டுகிறது.

23. கையாடல்கள் மற்றும் தவறான நிர்வாகம் பற்றி குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட போது, வக்பு வாரியம் மனுதாரருக்கு அதிக சுதந்திரத்தை கொடுத்திருந்தது என்பது ஆச்சர்யமாக உள்ளது. அதன் கடமையை வக்பு தீர்ப்பாயம் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். மத நிறுவனங்களது சொத்துகளையும் பணத்தை யும் காப்பாற்றுதல் நோக்கத்துக்காக அது உருவாக்கப்பட்டுள்ளது. வக்பு, வாரியத்தால் கானப்பட்டவாறு, குற்றச்சாட்டுகள் உண்மையாக உள்ள பட்சத்தில் 20.4/2023இலிருந்து 15.10.2024 வரை விஷயத்தை நிலுவையில் வைத்தல் நிச்சயமாக ஏற்றுகொள்ள தக்கதல்ல. குற்றம்சாட்டப்படும் முறையற்ற நடத்தைக்காக நடவடிக்கைகள் துவக்கப்படப் பெற்றவர் வசம் பெட்டகத்தின் சாவிகள் தொடர்ந்திருந்தன என்பதை வக்பு வாரியம் உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்பட வில்லை.

24.எனினும் மேலே சுட்டப்பட்டவாறு, துரிதமாக வாரியம் செயல்பட்டது கடமை தவறு பற்றியதாக மட்டுமே இந்த கருத்துரை உள்ளது. சொன்ன குற்றஞ்சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்படலுக்கு மனுதாரர் மெய்மையில் ஏற்ற வராவார் எனும் தீர்ப்பாக இது அமையவில்லை. ஏப்ரல் 23இல் வக்பு வாரியம் அறிவிப்பில் வைக்கப்பட்டபோதிலும், புகாரில் நிஜமாக செயல்படு முன் கிட்டத்தட்ட ஒன்றரையாண்டுக்கு அது மௌனம் காத்தது. இப்போதைய வழக்கில் உள்ளது போல புகார்கள் தரப்படும்போது நவீன கால குமபகர்ணனாக வக்பு வாரியம் உறங்காது என மட்டுமே இந்த நீதிமன்றம் நம்புகிறது.

25. வக்பு வாரியத்தால் நடவடிக்கைகள் துவக்கப்படாத போது, புகார்கள் தீர்வாதலை பணித்தல் கோரிக் கொண்டு மூன்று நீதிப் பேராணை மனுக்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கலாகியுள்ளன. இது ஒரு மத நிறுவனமாக உள்ளது என்பதை இந்த நீதிமன்றம் பரிசீலனை யில் கொண்டு, உத்தரவுகள் இயற்றுமாறு வக்பு வாரியத்தை உடனடியாக பணித்தது..

26. உத்தரவுகளை நிறைவேற்றுமாறு வக்பு வாரியத்தை பணித்து இத்தகைய பணித்தல்கள் இயற்றப்பட்டுள்ளபோது இந்த நீதிமன்றத்துக்கு சட்டமுறையில் கீழமையாக அதிகாரி உள்ள நிலையில் அவற்றால் அது கட்டுறுத்தாக வேண்டிய தாகி அவற்றை நிறைவேற்றிட வேண்டியுள்ளது. திரு.என்.ஏ. நிசார் ஹுசைனின் வேண்டுகொள அந்த தேதியில் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தால் அப்போது வக்பு வாரியம் இந்த நீதிமன்றத்தின் ஆணைகளை அவமதிப்பாகும். எனவே வேறு விருப்பத்தேர்வு ஏதுமின்றி உத்தரவை இயற்ற வக்பு வாரியம் தீர்மானித்தது. வக்பு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட செயல் வழி சரியானதா அல்லது சரியில்லாததா என்பதை இறுதியாக பகுப்பாய்ந்து தீர்ப்பாளித்தல் வக்பு தீர்ப்பாயத்தை சேர்ந்ததாகும்.

27. அவரது கட்சிக்காரருக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சார்த்துகள் முற்றிலும் அடிப்படையற்றதாகும் எனவும் அடுத்தடுத்து இரு வருடங்களாக பிறழ்வில்லாததால் பிரிவு 64இன் வகையங்களை அவை ஈர்க்கவில்லை எனவும் சுட்டிக்காட்ட திரு.என்.ஏ. நிசார் அகமது முயன்றிருந்தாலும் இதுவும் தீர்ப்பாயத்தால் ஆராயப்பட வேண்டிய விஷயமாக உள்ளது. வழக்கில் ஈர்க்கப்படுவது பிரிவு 64(1)((சி–ஜி) அல்ல என்பதும் பிரிவு 64(1)(கே) ஈர்க்கப் பட்டுள்ளது என்பதும் குமரி யாஸ்மின் அல்யினது மற்றும் திரு.ராஜா முகமதினது இன் வழக்காக உள்ளது. இறுதி தீர்வாக்கல் கட்டத்தில் இது குறித்து வழக்காடல் இரு தரப்பினர்களுக்கும் திறந்ததாக வக்பு தீர்ப்பாயம் குறையுறு ஆணை யில் விட்டுள்ளது. வக்பு தீர்ப்பாயத்தால் மேற் கொள்ளப்பட்ட அணுகுமுறை சரியானதாக தென்படவில்லை. மேல்முறையீடு வழியாக தீர்ப்பாயத்தை நாடுதலே சீராய்வு மனுதார ருக்குள்ள ஒரே தீர்வழியாகும் என தீர்ப்பிட்டுக் கொண்டு இந்த நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவயும் நீதிப்பேராணை மேல்முறையீட்டை யும் தள்ளுபடி செய்துள்ளது. அந்த சமயத்தில் எமேமுகளுடன் இந்த நீதிமன்றம் இணங்கி பிரிவு 64 கீழான தீர்வழியை பயன்படுத்துமாறு மனுதாரரை பணித்தது. மேல்முறையீடு நிலைக்க தக்கதாகும் என்பது பற்றி இரு நீதியர் அமர்வு தெளிவாக இருந்தது என இது குறிப்புரைக்கிறது. இந்த ஆணை இறுதியாகியுள்ளது. எனவே இரு நீதியர் அமர்வால் தீர்மானிக்கப்பட்ட விஷயத்தை மீண்டும் திறத்தலுக்கு மேமுகளுக்கும் தீர்ப்பாயத்துக்கும் திறந்ததாக அமையாது. எப்படியானாலும். திருப்பினர் ஒருவர் தீர்வழியற்று இருக்க வியலாது. அவருக்கு மாற்றுமுறை தீர்வழி உள்ளதால் நீதிப்பேராணை ஏதும் இயற்றப்பட முடியாது என அவருக்கு சொல்லப்பட முடியாது. அந்த தீர்வழியை அவர் பயன்படுத்தும்போது மேல்முறையீடு ஏதும் நிலைநிற்காது என தெரிவிக்கப்படுதல் உகந்ததாகாது. எனவே மேல்முறையீடின் செல்லுமை பற்றி அது மீண்டும் உற்று நோக்கும் எனவாகும் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு நீக்கறவாக்கப்படுகிறது.

28.1995இன் வக்பு வாரிய பிரிவு 68 செயல் அலுவலரால் பின்பற்றப்பட்டிருந்த தில்லை என்ற கூறுக்கு திரும்புகையில் பின் வருவதை நான் கூற வேண்டுயுள்ளது. 15.10.2024 தேதிய ஆணையால் 20 குழு உறுப்பினர்களை வக்பு வாரியம் அகற்றி யிருந்தது என்பதை மேலே விவரிக்கப்பட்ட நிகழ்வு வரிசை காட்டுகிறது. முத்தவல்லிகளின் நீக்கமானது முத்தவாலி அலுவகத்தின் பணி யிடங்கள் உருவாக்கலை விளைவாக்கியது. வக்பு கவனிப்பின்றி விடப்பட முடியாது. ஆகவே வக்பு வாரியம் அதன் அறிவுதிறனில் பிரிவு 38 ஐ பிரயோகிக்க தீர்மானித்து நிறுவனத்தை பொறுப்பில் கொள்வதற்காக செயல் அலுவலரை நியமித்தது.

29. பிரிவு 68இக்கு வெளியில், 1.11.2013 லிருந்து 2013இன் 27வது சட்டத்தால் செய்யப் பட்ட வக்பு சட்ட திருத்தலின் பின்தொடர்கையாக, பிரிவு 65(5)படி இந்தச் சட்டத்தின் வகை யங்களை வக்பு நிர்வகித்தல் மீறுகிறது என வக்பு வாரியும் முடிவு செய்யுமானால் அது நேரடியாக வக்பு நிர்வகிப்பை கைக் கொள்ளவியலும்.

30. பிரிவு 65(1)ஐ பிரயோகித்திட முத்தவல்லி அலுவகத்தில் காலி பணியிடம் இருத்தல் வேண்டும். அத்தகைய காலி பணியிடத்தை நிரப்புதல் வக்பின் நலனுக்கு குந்தகமாகும். பிரிவு 65(5) பொறுத்தளவில், சட்ட வகையங்கள் எதனுக்கும் எதிராக வக்பு நிர்வகித்தல் உள்ளதென அதனிடம் சாட்சியம் இருக்குமானால் வக்பின் நேரடி நிர்வகிப்பை பொறுப்பிலெடுக்க வக்பு வாரியத்துக்கு பாத்தியதை யுண்டு. முந்தையது பணியிடமாக அமைந்து அத்கைய பணியிடத்தை நிரப்பல் வக்புவுக்கு குந்தகமாகும்போது பொருந்துகிறது. அத்தகைய பணியிடம் இருக்க தேவையில்லை. ஆனால் வக்பு நிர்வாகத்தில் முத்தவல்லி தொடருதல் சட்ட வகையங்களுக்கு எதிராக உள்ளபோது பின்னரானது பொருந்துகிறது. இந்த வழக்கில் பிரிவு 64ஐ வக்பு வாரியம் பிரயோகித்திருந்து முத்தவல்லியை நீக்கியுள்ளது. ஆகையால் ஒரு காலி பணியிடம் ஏற்பட்டுள்ளது. அதனிடம் ஒரு தணிக்கை அறிக்கை உள்ளது. அறிக்கை சரியானதா அல்லது சரியற்றதா என்பதை தீர்மானித்தலின் பொறுப்பு வகபு வாரியத்தின தாகும்.

31. அது சந்தர்ப்பமாக இருக்குமானால் அடுத்து வக்பு விவகார விஷயங்களை பொறுப்பானவர் ஒருவர் கவனித்துக் கொள்கிறார் என்பதை வக்பு வாரியம் உறுதிப்பபடுத்த வேண்டியிருக்கிறது. வக்பு சொத்து நிருவாகம் தொடர்பாக கடமையாற்றல் மட்டுமே செயல் அலுவலருக்கு உள்ளதாகும். அத்தகைய அதிகாரங் களை செலுத்திக் கொண்டிருக்கையிலும் கடமை களை நிறைவேற்றுக் கொண்டிருக்கையிலும் கூட வக்பு வாரியத்தாலான பணித்தலால் கட்டுப்பாடு கண்காணிப்பு எதனாலும் அவர் கட்டுறுத்தப்படும் பொறுப்பு அவருக்குண்டு. முஸ்லிம் சட்ட நெறியால் ஏற்பளிப்பாகும் மத கடமைகள் அல்லது மரபுகள் அல்லது வக்பு பயன்பாடு எதனிலும் அவள் அல்லது அவர் தலையிட முடியாது என்பது அவர் மீதான கூடுதல் கட்டுப்பாடாக உள்ளது. முத்தவல்லி பதவிக்கு முழுமையான பிரதியீடாக செயல் அலுவலர் ஆகவில்லை. ஆனால் சட்டத்தால் சிந்திப்பாகி வக்பு நலனில் வக்பு வாரியத்தால் செய்யப்படும் தற்காலிக ஏற்பாடாக அது உள்ளது. என்பதை இந்த வகையம் காட்டுகிறது. பிரிவு 38 கீழ் எவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது முற்றிலும் வக்பு வாரியத்தின் விவே காள்வையில் உள்ளதாகும். வக்பு நலனில் அத்தகைய நபர் நியமிக்கப்பட வேண்டும் என்பது தேவையானதாக அது உணரும் போதெல்லாம் ஒரு மத நிறுவனத்துக்கு வாரியத்தால் செயல் அலுவலர் நியமிக்கப்பட முடியும்.

32. மேலதிகமாக தடையுறுத்தா சரத்துடன் வக்பு சட்டப் பிரிவு 38 துவங்குகிறது. இந்த சட்டத்தின் உள்ளாவது எதுவானாலும் வக்பு நலனில் இஸ்லாத்தை மனதார ஏற்றுக் கொள்ளும் எவரையும் வக்புவின் செயல் அலுவலராக வாரியம் நியமிக்கலாம் என அது கூறுகிறது. செயல் அலுவலரை நியமித்தலுக்கான வக்பு வாரியத்தின் அதிகாரத்துக்கு வரம்பிடப்பட வில்லை. அது பேரளவிலான ஒன்றாக உள்ளது என்பதை இது காட்டுகிறது.

33.திரு நசீர் அகமதால் வாதிடப்பட்டவாறாக, முத்தவல்லிக்கு சமமாக செயல் அலுவலரும் முத்தவல்யும் பாவிக்கப்பட்டால் அப்போது கூட்டு வக்பு வாரியத்தால் நியமிக்கப்பட்ட செயல் அலுவலர் பிரிவு 64ஐ பின்பற்றல் மூலமாக மட்டுமே அகற்றப்பட முடியும். சட்டப் பிரிவு 38(ஏ) கீழ் செயல் அலுவலர் அகற்றப்ப்டுவதை பற்றி வக்பு சட்டம் சிந்திக்கிறது. சூழ்நிலை அது அல்ல. முத்தவல்லியால் செலுத்தத்தக்க பரவலான அதிகாரங்களை செயல் அலுவலர் செலுத்தவில்லை என்பதை பிரிவு 38 (2)-(3) கீழ் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காட்டுகிறது.

34. இவ்விடத்தில் நான் வக்பு சட்டப் பிரிவு 3(i)ஐ கவனத்தில் கொள்கிறேன். பிரிவு 3(i) கீழ் வக்புவை அல்லது தகுதிறன் அதிகாரியை உருவமைக்கும் பத்திரம் அல்லது ஆவணம் கீழ் சொல்மொழியாக அல்லது சட்டப்படியாக முத்தவல்லியாக நியமிக்கப்படும் எவரும் வக்பு அலுவலகத்தை கொள்ளியலும். குழு அல்லது கழகம் உட்பட்டு முத்தவல்லியின் கடமைகளை செயல்படுத்தும் இதர நபர்களையும் அது உட்படுத்துகிறது. முன்னராக சுட்டிக்காட்டப்பட்ட வாறு, முத்தவல்லியின் அதிகாரம் இன்னும் பேரளவிலானதாக இருக்கையில் செயல் அலுவலரது அதிகாரம் கட்டுப்படுத்த தக்கதாகும். பதவிகள் பரிமாற்றம் செய்ய தக்கவை அல்ல.

35. வக்பு நாமாவால் ஒருவர் நியமிக்கப் படும் சூழல் பற்றி பிரிவு 3(2) பேசுகிறது. தகுதிறனுறு அதிகாரியால் நியமிக்கப்படுப்வரை பற்றி பிந்தைய பகுதி உள்ளதாகும். பிரிவு 32(2)(ஜி) கீழ் முத்தவல்லி வககபு வாரியத்தால் நியமிக்கப்படுகிறார். ஒத்ததாக, பிரிவு 63 கீழ் காலி பணியிடம் உள்ளபோது முத்தவல்லியை வாரியம் நியமிக்கிறது. முத்தவல்லியை நியமித்த லுக்கும் அகற்றலுக்கும் ஆன அதிகாரத்தை வழங்கும் மற்றொரு பிரிவாக பிரிவு 66 அமைகிறது. இறுதியாக வக்பு சட்டப் பிரிவு 69 கீழ் ஒரு திட்டத்தை வனைகையில் பதவி யிலிருந்து முத்தவல்லியை பதவியிருந்து அகற்றலுக்கான அதிகாரத்தை வக்பு வாரரியமும் வைத்திருக்கிறது. முத்தவல்லியை நியமிக்க அல்லது அகற்றிடலுக்கு அதிகாரிக்கு அதிகாரம் வழங்கும் வகையங்களாக இவை இருக்கின்றன.

36. இந்த சட்ட வகையங்களுக்கு இசைவாக அல்லது வாரியத்தால் ஆக்கப்படும் திட்டம் எஹதலும் வாரியத்தால் முத்தவல்லி அகற்றப் படுதல் பற்றி அது பேசுகிறது என்பதை பிரிவு 68(1)ஐ கவனமாக வாசித்தல் காட்டுகிறது. இது செயல் அலுவலரை உட்படுத்தவில்லை. ஆகையால், பிரிவு 68இன் விதிமுறைகள்படி நியமிக்கப்பட்ட் செயல் அலுவலரும் பிரிவு 68(2)ஐ பின்பற்றிக் கொண்டு நீக்கப்பட வேண்டியதாகும் என வாதிட திரு.நசீர் அகமதின் முயற்சி தவறாக வைக்கப் படுவதாகிறது.

37. அந்த வாதத்தை நான் ஏற்கவிருந்தால் அப்போது முத்தவல்லி என்ற சொல்லை மட்டு மின்றி வாரியத்தால் நியமிக்கப்படும் செயல் அலுவலர் என்ற சொல்லையும் சேர்த்திடலுக்காக பிரிவு 68Iவை நான் மெய்யாகவே திருத்திக் கொண்டிருப்பதாகும். தடையுறுத்தா சரத்துடன் பிரிவு 68ஐ ஆரம்பித்திருக்கும் நாடாளுமன்றம் குறிப்பட்ட கால அளவு வக்பு பொறுப்பில் உள்ள நபர்களது வகை பற்றி நன்கு அறிந்திருந்தது. அது, பிரிவு 68 கீழ் ‘செயல் அலுவலர்’ என்ற சொல்லை உட்படுத்திடவில்லை. ஆகையால் பொருள்விளக்கத்தால் பிரிவு 68 கீழ் சொன்ன வகைக்குள் செயல் அலுவலரை கொணர நான் விரும்பிடவில்லை.

38. பொறுப்பாட்சியர் என்பதை விட கூடுதலாக வக்பு மேலாளர் போல முத்தவல்லி உள்ளார். வக்பு சொத்து சம்பந்தப்பட்டமட்டில் குத்தகையின் பலனை பயனாளிகள் சமமாக அடைகிறார்கள் என்பதை அவர் உறுதியாக்க வேண்டியுள்ளது. அத்தகைய பங்காற்றல் செயல் அலுவலருக்கு கிடையாது. அவரது பங்காற்றல் பிரிவு 38 கீழ் தெளிவாக விளக்க மாக கூறப்பட்டுள்ளது. ஆகையால் தருவாய் ரீதியாகவும் சட்டரீதியாகவும் முத்தவல்லியுடன் செயல் அலுவலர் ஒப்பிடப்பட முடியாது. எனவே, ஒரு நிறுவனத்தின் பொறுப்பை செயல் அலுவலர் எடுக்கையில் பிரிவு 68 பொருந்துகையாக வில்லை.

39.கூடுதலாக, வக்பு சட்டப் பிரிவு 64 முத்தவல்லியை அகற்றலுக்காக மட்டுமே வகைசெய்கிறது. செயல் அலுவலராய் அகற்ற லுக்காக அல்ல. இதை காணுதல் கடினமாகாது. ஏனெனில் செயல் அலுவலர் அகற்றம் பிரிவு 36(6) கீழ் வைப்பாகிறது. ஒரு முத்தவல்லி நீக்கப்பட்டு காலி பணியிடம் ஏற்படும்போது வக்பு வாரியத்துக்கு இரு விருப்பத்தேர்வுகள் உள்ளன. அதாவது, பிரிவு 63 கீழ் மேல் தொடருதல் அல்லது பிரிவு 65 கீழ் நேரடியாக நிர்வாகத்தை பொறுப்பிலெடுத்து பிரிவு 38கீ செயல் அலுவலரை நியமிப்பது. இப்போதைய வழக்கில் வக்பு வாரியம் செய்திருப்பது பின்ன ரான விருப்பத் தேர்வாகும். பிரிவு 65 அல்லது பிரிவு 38 கீழ் பேசப்படும் சந்தர்ப்பத்தை பிரிவு

68 உட்கொள்ளவில்லை என்பதால் முத்தவல்லி அகற்றப்பட்டு செயல் அலுவலர் நியமிக்கப்படும் போதான அனைத்து நேர்வுகளிலும் பிரிவு 68(2)ஐ அவர் பின்பற்ற வேண்டும் என்ற திரு.என்.ஏ.நசீர் அகமதின் வாதம் நிராகரிக்கப் படுகிறது.

40. வக்பு பொறுப்பை செயல் அலுவலர் 25.12.2024 அன்று எடுத்துள்ளார் என காட்டிடலுக்கு பதிவெண்களை குமரி யாஸ்மின் அலி தாக்கலிட்டுள்ளார். இது விஷயத்தில் காவல் துறையானராலும் வருவாய் அதிகாரிகளாலும் அவர் உதவப்பட்டிருந்தார். இந்த கட்டத்தில் இந்த ஆவணங்கள் உற்றுநோக்கப்பட முடியாது என திரு.நசீர் அகமத் தீவிரமாக வாதிட்டாலும் இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 114 ஐ நான் குறிப்பாடில் கொள்ள வேண்டியுள்ளது. இந்த பதிவாவணங்கள் அடிப்படையில் எனது முடிவை நான் எட்டிக் கொண்டிருக்கவில்லை. அவர்களது பணியின் அலுவல் இயல்பிலான போக்கில் அலுவலர் களால் பராமரிக்கப்படும் அலுவலக பதிவெண் களாக இவையுள்ளன. உறுதியான மற்றும் குறித்ததான மோசடி பற்றிய குறித்த எதிர்வாதம் இருந்தாலன்றி இது முதல் நோக்கில் மெய்யென ஏற்கப்பட வேண்டியதாகும். காண்க சி.ராமசாமி –எதிர்– குருவ போயன் மற்றும் பிறர். 1991(1) LW 244.

41. வக்பு வாரியத்தால் முன்னிடப்பட்ட பதிவாவணங்கள் உள்ளபோதிலும் அவர் பதவி வகித்தார் என்பதை வக்பு தீர்ப்பாயத்தில் காட்டிடல் திரு.நிசர் ஹசைனின் கட்சிகாரருக்கு எப்போதும் திறந்ததாகும். செயல் அலுவலர் பொறுப்பு எடுத்துக்காளர் என மேலீடான முடிவை எட்டல் நோக்கத்துக்காக மட்டுமே இந்த பதிவா வணங்களில் நான் குறிப்பாடு வைத்துக் கொண்டி ருக்கிறேன். செயல் அலுவலர் பொறுப்பேற்றி ருந்தார் என நான் கருதுகிறேன். ஆகையால் சாட்சிய சட்டப் பிரிவு 114 உடன் இந்த பதிவெண் களை சேர்ந்து வாசித்து கொண்டு, திரு. நசீர் அகமதினது வாதத்துடன் இணங்கிட என்னால் இயலவில்லை.

42. நான் நிறைவு செய்தலுக்கு முன் 2025 ர்ம்சானுக்கு பிறகு அதாவது 3.3.2025 அன்றிலிருந்தும் பின்பாகவும் வக்புகளுக்கு தேர்தல் நடத்திட வக்பு வாரியம் ஆயத்தம் செய்து அதை 31.5.2025 வாக்கில் முடிக்கும் என குமரி யாஸ்மின் அலி கூறுவதை நான் சேர்க்க வேண்டியதுள்ளது. மனுதாரரது நலனு ரிமைகள் பாதிப்புறும் என்பதால் பிரிவு 64(8)இன் விதிமுறைகள்படி மேல்முறையீடே தீர்வாக்கப்பட வேண்டியதாகும் என்பதை நீதியின் நலன் அவசியப்படுத்துகிறது.

43. மேல்முறையீடில் நான்காவது எமேமுவை தரப்பினராக உசீம எண் 48/2025இல் 23.1.2025 தேதிய ஆணையால் நான் சேர்த்தேன். திருத்தப்பட்ட மேல்முறையீடு காரணங்கள் 31.1.2025 அன்று அல்லது முன் தீர்ப்பாயத்தில் தாக்கலிடப்பட வேண்டும். திருத்தப்பட்ட மேல்முறையீடு காரணங்கள் தாக்கலானவுடன் உடனடியாக முன்னிலையாவ தாக திரு.ராஜா பொறுப்பேற்கிறார். 7/4.2025 வாக்கல் எதிருரை அவர் தாக்கல் செய்வார் என அவர் கூறுகிறார் 7.2.2025 வாக்கில் வாது ரைத்தல்கள் நிறைவடைந்திருந்திருக்கும் என்ப தால் ஏ.ஏ.எண் 4/2024ஐ வக்பு தீர்ப்பாயம் பரிசீலித்து அதை 30.4.2025 அன்று அல்லது முன் அதை தீர்வாக்குமாறு வக்பு தீர்ப்பாயம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேர்தல்கள் நடத்தப் படும் பின்பாக மேல்முறையீடு தீர்வாக்கப் படுமானால் அது அகற்றப்பட்ட முத்தவல்லியின் உரிமைகளை குந்தகமாக்கும் என்பதால் இந்த பணித்தல்கள் இயற்றப்படுகின்றன.

44 மேலுள்ள கலந்தாய்வு மற்றும் கருத்துரை பின்புலத்தில் உரிமையியல் சீராய்வு மனு தள்ளுபடியாக்கப்படுகிறது. செலவுத் தொகை யில்லை. விளைவாக தொடர்புறு பல்வகை மனு முடித்து வைக்கப்படுகிறது.

> "முத்தவல்லி" என்பது, வாய்மொழி யாகவோ அல்லது ஒரு வக்ஃப் உருவாக்கப் பட்ட ஏதேனும் பத்திரம் அல்லது ஆவணத்தின் கீழோ அல்லது ஒரு தகுதி வாய்ந்த அதிகார அமைப்பாலோ, ஒரு வக்ஃபின் முத்தவல்லி யாக நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரையும் குறிக்கும்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# குறைவான முத்திரை வரி செலுத்தப்பட்ட ஆவணத்தைப் பறிமுதல் செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. நிலுவை செலுத்தாமல் ஆவணத்தைத் திரும்பப் பெற முடியாது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம்**
**மாண்புமிகு திரு.நீதிபதி முகமது ஷஃபீக்**
**மே.மு.எண் 1609/2024**
**நாள் 07/10/2025**
**2025 (6) CTC 47**

**கீதா பவர் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பி லிட்,**
**பதிவு அலுவலக முகவரி: ஓபிஜி நகர்,**
**பெரிய ஓபுளாபுரம் கிராமம்,**
**கும்மிடிப்பூண்டி, 601 201 சார்பாற்றம் அதன் அங்கீகார பிரதிநிதி**
**திரு.கௌஷிக் கங்குலி. ...மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

1. **பதிவுத்துறைத் தலைவர் மற்றும் தலைமை வருவாய் கட்டுப்பாட்டு ஆணையர், 100, சாந்தோம் நெடுஞ்சாலை, பட்டினப்பாக்கம், சென்னை – 600 028.**
2. **மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), தென் சென்னை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015.**
3. **சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,**
4. **94, பெருமாள் கோயில் தெரு, டீச்சர்ஸ் காலனி,**
5. **கோட்டூர்புரம், சென்னை – 600 085. ...எதிர்மனுதாரர்கள்**

கோரிக்கை: 27.11.2023 அன்று நீதிப் பேராணை மனு (W.P.) எண் 33963/2022–ல் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு.

மேல்முறையீட்டாளர் தரப்பில்: திரு.டெரிக் சாம்ஜி

எதிர்மனுதாரர்கள் தரப்பில்: திரு.யு. பரணிதரன், சிறப்பு அரசு வழக்கறிஞர்

## தீர்ப்பு

(நீதிமன்றத் தீர்ப்பு நீதியரசர் **எஸ்.எம்.**சுப்பிர மணியம் அவர்களால் வழங்கப்பட்டது)

1. 27.11.2023 அன்று நீதிப்பேராணை மனு எண். 33963/2022–ல் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிப்பேராணை மனுதாரரே இந்த நீதிமன்றத்தின் முன் மேல்முறையீட்டாளராக உள்ளார்.

2. இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கின் சுருக்கமான உண்மைகள் யாதெனில், மேல்முறையீட்டாளர் 29.07.2021 அன்று சார்பதிவாளர்/பதிவு அதிகாரியிடம் பதிவுக்காக ஒரு ஆவணத்தைச் சமர்ப்பித்தார். இது ஒரு ஒதுக்கீடு ஒப்பந்தம் ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திற்குப் போதிய முத்திரைத் தீர்வை செலுத்தப்படவில்லை என்ற அடிப்படையில், பதிவு அதிகாரி இந்த விவகாரத்தை மாவட்டப் பதிவாளருக்கு (நிர்வாகம்) பரிந்துரைத்தார். முத்திரை வரி மிக அதிகமாக இருப்பதை உணர்ந்த மேல்முறையீட்டாளர், பதிவுக்காகச்

சமர்ப்பித்த ஆவணத்தைத் திரும்பப் பெற முடிவு செய்தார். அந்த ஒதுக்கீடு ஒப்பந்தம் தரப்பினருக்கு இடையே கையெழுத்தானது என்பதில் எந்தத் தகராறும் இல்லை. ஆவணத்தைப் பதிவு செய்ய வேண்டாம் என்று மேல்முறையீட்டாளர் முடிவு செய்ததால், ஆவணத்தைத் திரும்பக் கோரி விண்ணப்பித்தார். ஆனால், அந்த விண்ணப்பம் பதிவு அதிகாரி யால் நிராகரிக்கப்பட்டது. பதிவு அதிகாரி கோரிய முத்திரை வரியைக் கேள்வி எழுப்பி மேல்முறை யீட்டாளர் ஒரு மறுஆய்வு மனுவைத் தாக்கல் செய்தார். அந்த மறுஆய்வு மனுவில் முத்திரை வரி சற்றே குறைக்கப்பட்டபோதிலும், மனு நிராகரிக்கப்பட்டது. முத்திரை வரியை வசூலிப்ப தற்காக அந்த ஆவணம் பறிமுதல் செய்யப் பட்டது. இத்தகைய சூழ்நிலையில், நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனைத் தனி நீதிபதி தள்ளுபடி செய்ததால், இந்த மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், அந்த ஆவணம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார். எனவே, மேல்முறையீட்டாளர் தனது விருப்பத்தின் அடிப்படை யில் ஆவணத்தைத் திரும்பப் பெற விண்ணப்பித்துள்ளார். அந்த ஒதுக்கீடு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயல்படும் எண்ணம் அவர் களுக்கு இல்லை. எனவே, முத்திரை வரி கோர அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்று அவர் வாதிட்டார்.

4. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் பதிவு விதிகளின் விதி 107–ஐச் சுட்டிக்காட்டி, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்படாத தால், அதைச் சமர்ப்பித்தவர் திரும்பப் பெற உரிமை உண்டு என்று வாதிட்டார். தனது வாதத்தை உறுதிப்படுத்த, 02.08.2024 தேதியிட்ட 'சைபர்சிட்டி பில்டர்ஸ் அண்ட் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் –எதிர்– பதிவுத்துறைத் தலைவர்' என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதி வழங்கிய தீர்ப்பை அவர் ஆதாரமாகக் காட்டினார். பதிவு செய்யப் படாத ஆவணத்தைச் சமர்ப்பித்தவரிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று அந்தத் தீர்ப்பில் தனி நீதிபதி குறிப்பிட்டிருந்தார். மேலும், 'ஆந்திரப் பிரதேச அரசு மற்றும் பிறர் –எதிர்– பி. லட்சுமி தேவி' (2008) 4 SCC 720) என்ற வழக்கிலும் இத்தகைய நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டும் என்று கோரினார்.

5. சிறப்பு அரசு வழக்கறிஞர் இதனைத் தீவிரமாக எதிர்த்தார். பதிவுச் சட்டம் மற்றும் இந்திய முத்திரைச் சட்டத்தின் விதிகள் மிகவும் தெளிவானவை என்று அவர் குறிப்பிட்டார். ஒரு ஆவணம் பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டவுடன், செலுத்தப்பட்ட முத்திரை வரி சரியானதா என்பதைச் சரிபார்க்கும் கடமை பதிவு அதிகாரிகு உண்டு. அதில் குறைபாடு இருக்கும் பட்சத்தில், ஆவணத்தைப் பறிமுதல் செய்து, முத்திரை வரியைத் தீர்மானிக்க மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரைக்க அவருக்கு அதிகாரம் உள்ளது. இந்த வழக்கில் அத்தகைய நடைமுறை முறை யாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இதில் எந்தத் தவறும் இல்லை என்று வாதிட்டார்.

6. தனி நீதிபதியும் பதிவுச் சட்டம் மற்றும் இந்திய முத்திரைச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளைப் பரிசீலித்து, முத்திரை வரி முறை யாகச் செலுத்தப்படவில்லை என்று கண்டறியப் பட்டால், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தைத் திரும்ப ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை என்று தீர்ப்பளித்துள்ளார். எனவே, இந்த மேல்முறை யீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

7. இந்த வழக்கில் தொடர்புடைய தரப்பினரின் வாதங்களை இந்த நீதிமன்றம் கேட்டறிந்தது. பதிவுச் சட்டம் மற்றும் இந்திய முத்திரைச் சட்டத்தின் விதிகளைப் பரிசீலிப்பது இங்கே அவசியமாகிறது. இந்திய முத்திரைச் சட்டம், 1899–ன் அத்தியாயம் IV, முறையாக முத்திரை வரி செலுத்தப்படாத ஆவணங்களைக் கையாள்வது பற்றிக் குறிப்பிடுகிறது.

7.1. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 33 (1)(a) பின்வருமாறு கூறுகிறது: 'ஆதாரங்களைப் பெறுவதற்குச் சட்டப்படி அல்லது தரப்பினரின் சம்மதத்தின்படி அதிகாரம் பெற்ற ஒவ்வொரு நபரும், மற்றும் ஒரு பொது அலுவலகத்தின் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு நபரும் (காவல்

துறை அதிகாரி தவிர), தன்னிடம் பணி நிமித்த மாகத் தாக்கல் செய்யப்படும் அல்லது வரப் பெறும் எந்தவொரு ஆவணத்திற்கும் முத்திரை வரி செலுத்தப்பட வேண்டும் என்று கருதினால், அந்த ஆவணம் முறையாக முத்திரை வரி செலுத்தப்படவில்லை என்று அவருக்குத் தோன்றினால், அதனை அவர் பறிமுதல் செய்ய வேண்டும்.'

7.2. மேற்கண்ட விதியின்படி, ஒரு பொது அதிகாரி முத்திரை வரி குறைவாகச் செலுத்தப் பட்டிருப்பதை உணர்ந்தால், அந்த ஆவணத்தை அந்தப் பிரிவின் கீழ் பறிமுதல் செய்ய வேண்டும்.

7.3. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 38 (2)-ன் படி, 'மற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆவணத்தைப் பறிமுதல் செய்யும் நபர் அதன் அசலை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.' எனவே, தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தைப் பெற்றவுடன், எந்தவொரு பொது அதிகாரியும் முதற்கட்டமாகச் செலுத்தப்பட்ட முத்திரை வரியின் சரியான தன்மையைச் சரிபார்க்க வேண்டும். முத்திரை வரி குறைவாக இருப்பது கண்டறியப்பட்டால், அந்த ஆவணத்தைப் பறிமுதல் செய்து, முத்திரை வரியைத் தீர்மானிப்பதற்காக அதன் அசலை ஆட்சியருக்கு அனுப்ப வேண்டியது அந்த அதிகாரியின் கடமை யாகும்.

7.4. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 40, பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களுக்கு முத்திரை வரி விதிக்கும் ஆட்சியரின் அதிகாரத்தைப் பற்றிக் கூறுகிறது. பிரிவு 40-ன் துணைப் பிரிவு 1(b) பின்வருமாறு கூறுகிறது:

'(b) அந்த ஆவணத்திற்கு வரி செலுத்தப்பட வேண்டும் என்றும், அது முறையாகச் செலுத்தப் படவில்லை என்றும் அவர் கருதினால், சரியான வரி அல்லது எஞ்சியுள்ள வரித் தொகையுடன், ஐந்து ரூபாய் அபராதம் அல்லது அவர் பொருத்தமெனக் கருதினால் சரியான வரி அல்லது நிலுவைத் தொகையைப் போல பத்து மடங்குக்கு மிகாத தொகையை (அந்தத் தொகை ஐந்து ரூபாய்க்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும்) செலுத்துமாறு அவர் கோர வேண்டும்.'

7.5. பிரிவு 42, பிரிவு 35, 40 அல்லது 41-ன் கீழ் வரி செலுத்தப்பட்ட ஆவணங்களில் இதற்கான சான்றொப்பம் இடுவதைப் பற்றிக் கூறுகிறது. பிரிவு 42-ன் துணைப் பிரிவு (1) பின்வருமாறு கூறுகிறது:

'(1) பிரிவு 35, பிரிவு 40 அல்லது பிரிவு 41-ன் கீழ் ஒரு ஆவணத்திற்கான வரி மற்றும் அபராதம் (ஏதேனும் இருப்பின்) செலுத்தப் பட்டால், அந்த ஆவணத்தை ஆதாரமாக ஏற்றுக் கொண்ட நபர் அல்லது ஆட்சியர், அந்த ஆவணத்தின் மீது முறையான வரி அல்லது அபராதம் (ஒவ்வொரு தொகையையும் குறிப்பிட்டு) வசூலிக்கப்பட்டது என்பதையும், அதைச் செலுத்தியவரின் பெயர் மற்றும் முகவரியையும் சான்றொப்பம் மூலம் உறுதிப் படுத்த வேண்டும்.'

7.6. பிரிவு 48, வரிகள் மற்றும் அபராதங் களை வசூலிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது:

'வரிகள் மற்றும் அபராதங்களை வசூலித்தல் - இந்த அத்தியாயத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகள், அபராதங்கள் மற்றும் இதர தொகைகளை, அந்தத் தொகையைச் செலுத்த வேண்டிய நபரின் அசையும் சொத்துக்களைப் பறிமுதல் செய்தும் ஏலம் விட்டும் அல்லது நில வருவாய் நிலுவையை வசூலிக்க நடைமுறையிலுள்ள ஏதேனும் ஒரு முறையைப் பின்பற்றியும் ஆட்சியர் வசூலிக்கலாம்.

7.7. இந்திய முத்திரைச் சட்டத்தின் மேற் கண்ட விதிகளின் பின்னணியில், பதிவு விதிகளின் விதி 107-ஐப் பரிசீலிப்பது பொருத்த மானதாக இருக்கும்:

'107. பறிமுதல் செய்யப்பட்ட ஆவணம், முத்திரை வரி நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு ஆட்சியரிடமிருந்து திரும்பப் பெறப்படும்போது, பதிவு அதிகாரி உடனடியாக அந்த ஆவணத்தைச் சமர்ப்பித்தவருக்கோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபருக்கோ, ஆவணத்தைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளும்படியோ அல்லது ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியோ எழுத்துப் பூர்வமாக அறிவிப்பு வழங்க வேண்டும்.'

7.8. பதிவு விதிகளின் விதி 107–ஐ உன்னிப்பாகப் படித்தால், பதிவு அதிகாரியால் ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட ஆவணம், வரி நிர்ணயம் செய்யப் பட்ட பிறகு திரும்ப வரும்போது என்ன செய்ய வேண்டும் என்பது தெரிகிறது. ஆட்சியரிட மிருந்து உத்தரவு வந்தவுடன், பதிவு அதிகாரி ஆவணத்தைச் சமர்ப்பித்தவருக்கு எழுத்துப் பூர்வமாக அறிவிப்பு அனுப்ப வேண்டும். இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் ஆவணத்தைப் பறிமுதல் செய்வதும், வரி நிர்ணயம் மற்றும் வசூலுக்காக அதன் அசலை ஆட்சியருக்கு அனுப்புவதும் பதிவு அதிகாரியின் கட்டாயக் கடமையாகும். ஆட்சியரால் முத்திரை வரி நிர்ணயிக்கப்பட்டு, அந்த உத்தரவு பதிவு அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகு, பதிவு அதிகாரி ஆவணத்தைச் சமர்ப்பித்தவருக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அந்த நோட்டீஸைப் பெற்ற பிறகு, ஆவணத்தைச் சமர்ப்பித்தவர் தனது விருப்பப்படி பதிவைத் தொடரலாம் அல்லது ஆவணத்தைத் திரும்பக் கோரி விண்ணப்பிக்கலாம். எனவே, ஆட்சிய ரால் முத்திரை வரி நிர்ணயிக்கப்பட்டு, இந்திய முத்திரைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறை களின்படி வரி வசூலிக்கப்பட்ட பின்னரே, ஆவணத்தைச் சமர்ப்பித்தவரின் 'விருப்பம்' நடைமுறைக்கு வரும் என்பது தெளிவாகிறது.

8. பதிவு அதிகாரியால் கோரப்பட்ட அல்லது இந்திய முத்திரைச் சட்டத்தின் விதிகளின் கீழ் ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட நிலுவை முத்திரை வரியைச் செலுத்தாமலும், ஆவணத்தைப் பதிவு செய்வதற்கு முன்னரே அதைத் திரும்பப் பெற ஆவணத்தைச் சமர்ப்பித்தவருக்கு உரிமை உள்ளதா என்ற கேள்வி எழுகிறது. இது தொடர்பாக, பதிவு விதிகளின் விதி 107 மிகத் தெளிவாகக் கூறுவது யாதெனில், முதற்கட்ட மாக ஆவணம் பறிமுதல் செய்யப்பட வேண்டும். அதன்பின்னர் முத்திரை வரியைத் தீர்மானிக்க அது ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். முத்திரை வரி நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட பின்னரே, அந்த ஆவணம் மீண்டும் பதிவு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்; அதன் பிறகே ஆவணத்தைச் சமர்ப்பித்தவர் அதனைப் பதிவு செய்வதா அல்லது திரும்பப் பெறுவதா என்று முடிவு செய்ய அனுமதிக்கப்படுவார். எனவே, ஒரு ஆவணம் எழுதப்பட்டு பதிவுக்காகச் சமர்ப்பிக்கப் பட்டால், அது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் மற்றும் அதில் செலுத்தப்பட்ட முத்திரை வரியின் சரியான தன்மை சரிபார்க்கப் பட வேண்டும் என்று சட்டம் கருதுகிறது. ஆகவே, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பது அதனைத் திரும்பக் கோருவதற்கு ஒரு காரணமாகாது. இந்திய முத்திரைச் சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்தி நிலுவை முத்திரை வரியை வசூலிப்பதற்கு, அந்த ஆவணம் எழுதப்பட்டிருந்தாலே போதுமான தாகும்.

9. மேற்கண்ட சட்ட நிலைப்பாடு, மேலே குறிப்பிடப்பட்ட பி.லட்சுமி தேவி வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. அதன் தொடர்புடைய பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

'15. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 33(1) கூறுவதாவது:' ஆதாரங்களைப் பெறுவதற்குச் சட்டப்படி அல்லது தரப்பினரின் சம்மதத்தின்படி அதிகாரம் பெற்ற ஒவ்வொரு நபரும், மற்றும் ஒரு பொது அலுவலகத்தின் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு நபரும் (காவல் துறை அதிகாரி தவிர), தன்னிடம் பணி நிமித்த மாகத் தாக்கல் செய்யப்படும் அல்லது வரப் பெறும் எந்தவொரு ஆவணத்திற்கும் முத்திரை வரி செலுத்தப்பட வேண்டும் என்று கருதினால், அந்த ஆவணம் முறையாக முத்திரை வரி செலுத்தப்படவில்லை என்று அவருக்குத் தோன்றினால், அதனை அவர் பறிமுதல் செய்ய வேண்டும்.'

16. இந்த விதியைப் பரிசீலித்தால், ஆதாரங் களைப் பெற அதிகாரம் பெற்ற நபர் அல்லது பொது அலுவலகப் பொறுப்பில் உள்ள ஒரு நபர் (காவல்துறை அதிகாரி தவிர) முன்னிலையில் ஒரு ஆவணம் தாக்கல் செய்யப்படும்போது, அதற்குச் சரியான முத்திரை வரி செலுத்தப்பட வில்லை என்றால், அந்த ஆவணத்தைப் பறிமுதல் செய்ய வேண்டியது அந்த நபரின் கடமை யாகும். பிரிவு 33(1)–ல் 'செய்ய வேண்டும்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது, அந்த

ஆவணத்தைப் பறிமுதல் செய்வதில் அதிகாரிகளுக்கு எந்தவொரு விருப்ப அதிகாரமும் இல்லை என்பதைக் காட்டுகிறது. எங்கள் கருத்துப்படி, பிரிவு 33(1)–ல் உள்ள 'Shall' என்ற சொல்லுக்கு 'செய்யலாம்' என்று பொருளல்ல, அது 'கட்டாயமாகச் செய்ய வேண்டும்' என்றே பொருள்படும். எனவே, ஒரு தரப்பினர் முத்திரை வரி செலுத்த விரும்பவில்லை என்றால் அந்த ஆவணத்தைத் திரும்ப ஒப்படைக்கலாம் என்ற உயர் நீதிமன்றத்தின் கருத்து சரியல்ல.

17. எங்கள் கருத்துப்படி, பதிவுச் சட்டத்தின் கீழ் உள்ள ஒரு பதிவு அதிகாரி (இந்த வழக்கில் சார்பதிவாளர்) நிச்சயமாக ஒரு பொது அலுவலகத்தின் பொறுப்பில் உள்ள நபர் ஆவார். ஒரு ஆவணம் சரியாக முத்திரை வரி செலுத்தப் படவில்லை என்று அவர் கண்ட றிந்தால், அதனை அவர் தரப்பினரிடம் திரும்ப ஒப்படைக்க முடியாது; அவர் அதனைப் பறிமுதல் செய்ய வேண்டும்.

18. ஏ.பி. திருத்தச் சட்டம் 8/1998–ன் மூலம் திருத்தப்பட்ட பிரிவு 47அ–வை இயற்றியது, அரசியலமைப்பின் 14, 19 ஆகிய பிரிவுகளையோ அல்லது வேறு எந்த விதியையோ மீறுவதாக அமையாது. இந்தத் திருத்தம் சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைப்பதற்கும் முத்திரை வரியை விரைவாக வசூலிப்பதற்கும் மட்டுமே கொண்டுவரப்பட்டது.

19. முத்திரை வரி என்பது ஒரு வரி என்பதும், வரி விதிப்புச் சட்டங்களைக் குறுகிய அர்த்தத்தில் விளக்கும்போது அதனால் ஏற்படும் சிரமங்கள் கருத்தில் கொள்ளத்தக்கவை அல்ல என்பதும் நன்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். 'வருமான வரி ஆணையர் –எதிர்– ஃபர்ம் மூர்' [AIR 1965 SC 1216] வழக்கில் குறிப்பிட்டவாறு, வரி விதிப்பில் சமத்துவத்திற்கு இடமில்லை. ஒரு வரி விதிப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் தெளிவாக இருக்கும்போது, அந்தச் சட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளைக் கண்டறிய முயலக்கூடாது. எனவே, இந்திய முத்திரைச் சட்டத்தின் நோக்கம் மற்றும் உத்தேசம் என்று கருதப்படுவதன் அடிப்படையிலும், 1998–ஆம் ஆண்டின் திருத்தத்தினால் ஒரு தரப்பிற்கு ஏற்படும் சிரமங்களைக் கண்டறிய முயன்றதன் மூலமும் உயர்நீதிமன்றம் தவறிழைத்துள்ளது.

20. 'பார்டிங்டன் –எதிர்– அட்டர்னி ஜெனரல்' (1969) LR 4 HL 100) வழக்கில், பிரபு கெய்ர்ன்ஸ் (Lord Cairns) பின்வருமாறு அவதானித்தார்:

'வரி விதிக்கப்பட வேண்டிய ஒரு நபர், சட்டத்தின் நேரடி வாசகங்களுக்குள் (letter of the law) வரும் பட்சத்தில், நீதித்துறைக்கு அது எவ்வளவு பெரிய சிரமமாகத் தோன்றினாலும் அவருக்கு வரி விதிக்கப்பட வேண்டும். மறுபுறம், வரியை வசூலிக்க முயலும் நீதிமன்றத்தால் அந்த நபரைச் சட்டத்தின் நேரடி வாசகங்களுக்குள் கொண்டு வர முடியவில்லை எனில், அந்த வழக்கு சட்டத்தின் நோக்கத்திற்குள் (spirit of the law) வருவது போலத் தோன்றினாலும், அந்த நபர் வரிப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.'

மேற்கண்ட கருத்து இந்த நீதிமன்றத்தால் பலமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதை நாங்களும் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். 'பெங்கால் இம்யூனிட்டி கோ லிமிடெட் எதிர் பீகார் மாநிலம்' (AIR 1955 SC 661 (685) வழக்கில், ஒரு சட்டத்தினால் சிரமம் ஏற்படும் பட்சத்தில், சட்டத்தை திருத்துவது சட்டமன்றத்தின் பணியே தவிர, அந்தச் சிரமத்தைக் குறைப்பதற்காக விளக்கவுரையின் அடிப்படை விதியை கைவிடுமாறு நீதிமன்றத்தை கோர முடியாது என்று இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

21. 'வருமான வரி அலுவலர் –எதிர்– டி.எஸ். தேவநாத நாடார்' (AIR 1968 SC 623) (பத்திகள் 23 முதல் 28 வரை) வழக்கில், இந்த நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு, ஒரு வரி விதிப்புச் சட்டத்தின் மொழி தெளிவாக இருக்கும்போது, நீதிமன்றம் சட்டமன்றத்தின் நோக்கத்தைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று தீர்ப்பளித்து உள்ளது. எனவே, இந்திய முத்திரைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தை இயற்றுவதில் சட்டமன்றத்தின் நோக்கத்தைக் கண்டறிய முயன்ற உயர்நீதிமன்றத்தின் அணுகுமுறை தவறானது என்பது எங்கள் கருத்தாகும்.

10. இதே சட்ட நிலைப்பாடு, திருப்பதி டெவலப்பர்ஸ் –எதிர்– உத்தராகண்ட் மாநிலம் மற்றும் பிறர் [2013 (9) SCC 332] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் உறுதிப்படுத்தப் பட்டது. அதன் தொடர்புடைய 13–வது பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

‘13. இந்த விற்பனை ஒப்பந்தங்கள் எழுதப் பட்ட இரண்டு மாதங்களுக்குள்ளேயே ரத்து செய்யப்பட்டுவிட்டதால், வரி நிர்ணயம் செய்ய முடியாது என்று திருமதி மகிஜா வாதிட்டார். தரப்பினர் பின்னர் ஒப்பந்தத்தை ரத்து செய்த செயல், சட்டத்தின் 33/38 பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்காது என்பது எங்களது கருத்து. ஆவணங்கள் துணைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டு, அதில் வரி குறைவாக இருப்பது கண்டறியப்பட்ட போதே அந்த நடவடிக்கை அவசியமாகிறது. அதன் பிறகு செய்யப்பட்ட ரத்து செல்லுபடியாகாது.’

11. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவுகள் 33, 38, 40, 42 மற்றும் 48 ஆகியவற்றுடன் பதிவு விதிகளின் விதி 107–ஐச் சேர்த்துப் பார்க்கும்போது, சட்ட நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது. பதிவுக்காகச் சமர்ப்பிக்கப் படும் எந்தவொரு ஆவணமும் முதலில் முத்திரை வரியின் சரியான தன்மை குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும். பதிவு அதிகாரி முத்திரை வரி குறைவாக இருப்பதை உணர்ந்தால், அவர் ஆவணத்தைப் பறிமுதல் செய்து ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். நிலுவை வரி நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட பிறகு, அந்த ஆவணம் மீண்டும் பதிவு அதிகாரி யிடம் வரும். அதன் பின்னரே ஆவணத்தைச் சமர்ப்பித்தவர் அதனைப் பதிவு செய்வதா அல்லது திரும்பப் பெறுவதா என்று முடிவு செய்ய முடியும்.

12. மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதி தீர்ப்பு அவருக்கு உதவாது. ஏனெனில், அந்தத் தீர்ப்பு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம் ஆகியவற்றின் சரியான நிலைப் பாட்டையோ, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சட்டக் கொள்கைகளையோ கருத்தில் கொள்ளவில்லை. எனவே, சைபர்சிட்டி பில்டர்ஸ் அண்ட் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் வழக்கின் தீர்ப்பு ஒரு முன்னுதாரண மாக இருக்கும் தகுதியை இழக்கிறது.

13. மேற்கூறிய உண்மைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில், 27.11.2023 தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண். 33963 / 2022–ன் உத்தரவு உறுதி செய்யப்படுகிறது. அதன் விளைவாக, இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. கட்டணம் ஏதுமில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

---

## தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கு, தலைமை நீதிபதி விலகல்

தலைமை தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இடம் பெற்றிருந்தனர். இந்நிலையில், கடந்த 2023 டிசம்பரில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பதிலாக, பிரதமர் பரிந்துரைக்கும் மத்திய அமைச்சர் குழுவில் இடம் பெறுவார் என்ற அம்சம் சேர்க்கப்பட்டது.

புதிய சட்டத்தின்படி தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரி, ஜெயா தாக்குர் உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். அந்த மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. இந்த வழக்கை விசாரித்தால் ஆதாய முரண் குற்றச் சாட்டு எழுமென்று குறிப்பிட்டு, விசாரணையில் இருந்து தலைமை நீதிபதி விலகினார். மேலும் எதிர்காலத்தில் தலைமை நீதிபதி அல்லாத பிற நீதிபதிகள் அடங்கிய அமர்வில் இந்த மனுவை பட்டியலிடவும் உத்தரவிட்டார்.

**நன்றி: தினத்தந்தி 21.3.2026**

# கடன் பற்றுரிமை மாற்றீடும் காப்பீடும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி எம்.ஜோதிராமன்**
**மே.வ.எண் 703/2019**
**நாள்: 17.6.2025**
**2025 (5) CTC 242**

**செவன் பீஸ் கேரியர் (தனியார்) வரம்பிடப்பட்டது,**
**39, தாராசந்த் டத் தெரு,**
**கல்கத்தா-700 073 ...மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**எம்.ஆர்.எப். வரம்பி. சார்பாற்றம் அதன் அதிகார முகவர்,**
**யுனைடெட் இந்திய காப்பீட்டு நிறுவகம், வரையறுக்கப்பட்டது,**
**எண் 58, புரசைவாக்கம் சாலை, சென்னை-600 007.**
**2. யுனைடெட் இந்திய காப்பீட்டு நிறுவகம்,**
**எண் 58, புரசைவாக்கம் சாலை, சென்னை-600 007.**
**...எதிர்வழக்கீட்டாளர்கள்**

எம்.விஜயன்
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

நாகேஸ்வரன் நரிசானியா
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

மே.வ. மனு தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.

கோரிக்கை : மு.வ.எண் 3102/2015 XVIஆம் கூடுதல் நீதிபதி (Fr.A.C.) XVII கூடுதல் நீதிபதி உரிமையியல் நீதிமன்றம், சென்னை. இதன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 21.11.2017 தேதியிடப்பட்டதை தள்ளுபடி செய்யக் கோரி 1908 உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 96ஆம் பிரிவின்படி முதல் மேல்முறையீடு முன்னிடப்பட்டுள்ளது.

## தீர்ப்பு

1. வெற்றி பெறாத எதிர்வாதி இந்த முதல் மேல்முறையீட்டை செய்துள்ளார். இந்த வழக்கு, முன்னிடப்பட்டது. ரூ.15,00,000/- தொகையினை வட்டியுடன். அதாவது 12 சதவீதத்தில் பெறுவதற்காக முன்னிடப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றம் வழக்கில் தீர்ப்பாணை வழங்கியுள்ளது. வாதிகள் ரூ.15,00,000/- தொகையினை பெற உரிமையுடையவராவர். அதாவது எதிர்வாதிகளிடமிருந்து அதாவது 4.11.2013 முதல் தீர்ப்பாணைத் தேதி வரையில் மற்றும் அதன் பின்னர் 6 சதவீதம் வட்டியுடன் அது பெறப்படும் வரையிலான வட்டியுடன், தரப்பினர்கள். இதில் அவர்களது சட்டப்படியான நிலையில் சுட்டப்படுவர். அதாவது விசாரணை நீதிமன்ற நிலையில்.

2. சுருக்கமாக வாதிகளின் வழக்கான பின் வருமாறு. முதல் வாதி வியாபாரத்தில் டயர்கள் மற்றும் டியூபுகளை கல்கத்தாவில் இருந்து அவர்களின் வாங்குபவரான மெசர்ஸ் டயர் சென்டர், மெசர்ஸ் மக்காலு டையர் சென்டர் தனியார் வரம்பிடப்பட்டது, மெசர்ஸ் பன்னாட்டு டயர் மையம், காட்மாண்டு நேபால் பற்றுச் சீட்டுகளின்படி வெவ்வேறு தேதிகளில் மற்றும் இவற்றின் மொத்த மதிப்பு சரக்குகள் ரூ.34,43,096/- சொல்லப்பட்ட சரக்கானது பாதுகாப்பாக சிப்பமிடப்பட்டு எதிர்வழக்கீட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் கல்கத்தாவில் இருந்து கொண்டு செல்பவர். பாதுகாப்பாக அளிக்கப்பட்டு நேபால் காட்மாண்டுவில் உள்ளவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் ஒப்புகை அந்த சரக்கு ஆணை மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக. எதிர்வாதி அவர்களது வெவ்வேறு சரக்கு குறிப்புகள் மற்றும் இவர்களது ஏற்புரை பாதுகாப்பாக அதனை ஒப்ப டப்பு செய்தது அதே சரக்குகளை நல்ல நிலையில்

அதாவது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கொண்டு சேர்ப்பது. முதல்வாதி 4.11.2008 அன்று எதிர்வாதியுடன் ஓர் ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அதாவது இதன் போக்குவரத்து தொடர்பாக இதில் வழக்கு அனுப்புச் சரகம் முதல் வாதியால் இரண்டாம் வாதியுடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடல் சரக்கு காப்பீட்டு ஆவணம் எண் 010300/21/10/02/00000007. எதிர்வாதி கொண்டு செய்பவர் இந்தச் அனுப்புச் சரக்கினை ஒப்படைக்கத் தவறியுள்ளார். எதிர்வாதி, முதல் வாதிக்கு தெரிவித்ததாவது இதில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் எதிர்வாதிகளின் கிட்டங்கியில் அவர்களது சரக்கு முழுவதும் அழிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. முதல் வாதி இதனால் இழப்பை 10.11.2010 அன்று அறிந்தார். இது ஒப்படைக்கப்படாதது பற்றியும் 2ஆம் வாதி மெசர்ஸ் கோத்தாரி சர்வேயர்கள் புலனாய்வாளர்கள் தனியார் வரம்பி. அமர்த்தி புலனாய்வை அந்த இடங்களில் நடத்தியுள்ளார்.

2(1) முதல் வாதி இந்த அனுப்புச் சரக்கில் சொந்தக்காரர் அனைத்து தொடர்புற்ற நேரங்களிலும் சட்டப்படியான அறிவிப்புகளை எதிர்வாதிக்க இழப்பு தொடர்பாக. 30.11.2010 அன்ற அனுப்பியுள்ளார். இதுகையில் ஒப்படைக்கப்பட்டு எதிர்வாதிக்கு இழப்பு பற்றி தகவல் கூறப்பட்டது மற்றும் இதில் அவர்களிட மிருந்து இழப்பீட்டு தொகை பெற்ற அதனை ஒப்புகை செய்துள்ளார். அவரது இழப்பீடு சான்றிதழ் 11.11.2010 தேதியிடப்பட்டது. இதில் சரக்கு ஒப்படைக்கப்படவில்லை என்பதை ஏற்று கொண்டுள்ளார். எதிர்வாதி, முதல் வாதி பண இழப்பீட்டினால் பெற்றுள்ளார். ரூ.34,43,096/– இழப்பு இழப்பீடு ஏற்பட்டது. எதிர்வாதி தரப்பில் இவர் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது. அதாவது சரக்குகளை கொண்டு செல்வதில் அசட்டை, அனுப்புச் சரக்கை ஒப்படைக்க தவறியுள்ளார். 4.11.2008 தேதியிட்ட ஒப்பந்தம், எதிர்வாதி இழப்பீட்டிற்கான கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். அதாவது அவர்களால் எடுத்துச் சென்று அவர்களால் சேமித்து வைக்கப்பட்ட சரக்கு. இந்த காப்பீட்டு ஆவணத்தின் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் படி முதல் வாதியின் கோரிக்கை 2ஆம் வாதியால் சரி செய்யப்பட்டது. அவர் 15,00,00,000/– அளிக்கப்பட்டுள்ளது. இது காப்பீட்டு செய்யப்பட்ட மதிப்பின் ஒரு பகுதி இந்த அனுப்பு சரக்கு மொத்தமாக இழக்கப்பட்டது. இதனை சரி செய்து ஈடு செய்வதன் ஒப்புகை முதல் வாதி கடன் பற்றுரிமை மாற்றீடு மற்றும் வழக்குரைஞர்களின் இழப்பு அதிகாரம் கப்பற் சரக்கு காப்பீடு சட்டத்தின் 79ஆம் பிரிவின்படி செய்யப்பட்டது. இரண்டாம் வாதி அவர்களது பெயரில் வழக்கினை முன்னிட்டு இழப்பீட்டுத் தொகையினை திரும்பப் பெற உரிமையுடையவர் ஆவார். இதில் வழக்கு தொகை ரூ.15,00,00,000/–க்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது காப்பீடு செய்யப்பட்ட மதிப்பின் விகிதாச்சார தொகை இதில் அனுப்புச் சரக்கு மொத்தமாக இழக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கு.

3. சுருக்கமாக எதிர்வாதியின் வழக்கு பின் வருமாறு.

இரண்டாம் வாதி, வழக்கை தொடர்ந்து நடத்த இயலவில்லை. அதுவும் ஒன்றாம் வாதி சார்பாக. எனவே வழக்கானது, தள்ளுபடி செய்யத்தக்க தாகிறது மற்றும் வழக்கு கால வரம்பினால் வரம்பிடப்படுகிறது. பத்திரத்தில் செய்யப்பட்ட உறுதிக் கூற்றுகளும் சொல்லப்பட்டவைகள். அதாவது வாதுரையில் இவை பொய்யானவை என மறுக்கப்பட்டன. வாதத்திற்காகவும் இவை ஏற்கப்படவில்லை. இதில் உறுதியுரைகள் தெளிவாக மெய்ப்பிப்பது விசாரணை நிதிமன்ற அதிகார வரம்பிற்கும் இவை எதுவும் நடைபெற வில்லை என்பது எனவே, வழக்கானது, இந்த விசாரணை நீதிமன்றத்தின் முன்பு முன்னிடப்பட முடியாது என்பது.

3(1) எதிர்வாதி 24.5.2011 தேதியிடப்பட்ட அறிக்கை பற்றி அறிந்திருக்கவில்லை மற்றும் வாதிகள் இது பற்றிய கட்டாய மெய்ப்பிப்பினை அளிப்பது அவசியம். முதல் வாதி சட்டப்படி இழப்பு பற்றிய அறிவிப்பினை 31.10.2010 அன்று எதிர்வாதிக்கு கையில் அளித்ததாக கூறியுள்ளார். முதல் வாதிக்கு பண இழப்பீடாக ரூ.34,43,096/– ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

இது பொய்யானதென மறுக்கப்படுகிறது. கூறப்பட்டவைகளும் எதிர்வாதி அனுப்புச் சரக்கினை கையாண்டது பற்றி வெளியிட வேண்டும். இது மறுக்கப்படுகிறது. வாதி எதிர்வாதி மீது மெய்ப்பிக்கும் சுமையினை மாற்ற இயலாது. எனவே 9.8.2013 தேதியிட்ட கோரிக்கை அளிக்க ஆதாரமற்றதாகிறது. எதிர்வாதி எந்தத் தொகையையும் வாதிக்குச் செலுத்தக் கடப்பாடு டையவர் அல்ல. இந்த நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் எந்தச் செயலும் நடைபெற வில்லை. இதில் கூறப்பட்ட அனைத்தையும் சரக்குகள் ஒப்படைக்கப்பட்டது. தீ ஏற்பட்டது. சரக்குகள் இழப்பு இவை அனைத்தும் உண்மை என ஏற்கப்பட்டாலும் இவை மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்றவை. எனவே, விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கினை ஏற்கும் அதிகார வரம்பினை கொண்டிராது. கடன் பற்றுரிமை மாற்றீடு கடிதம் மற்றும் வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் வாதியால் நிறைவேற்றப்பட்டவை. அதுவும், சென்னையில் இவை விசாரணை நீதிமன்ற அதிகார வரம்பிற்கும் வராது மற்றும் இவை முழுவதும் நடைமுறைகள் தவறாக சட்ட நடைமுறைகள் எஸ்.சத்தியவதியினால் முன்னிடப் பட்ட வழக்கு, வட்ட மேலாளர் இரண்டாம் எதிர் வாதியின் இவரால் முன்னிடப்பட்டதில் இவருக்கு அதிகாரமில்லை. அதாவது 2ஆம் வாதியால் தொடுக்கப்பட்ட வழக்கு அதிகாரமற்றது. எனவே இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல.

4. மேற்சொல்லப்பட்ட வாதுரைகளின் அடிப் படையில், விசாரணை நீதிமன்றம், பின் வரும் பிரச்சினைகளை வனைந்துள்ளது.

(1) வாதி ரூ.15,00,000 உடனான 12 சதவீதம் ஆண்டுக்கு என்ற வட்டியுடன் கோரப் பட்டவாறு எதிர்வாதியிடமிருந்து பெறும் உரிமை யுடையவரா?

(2) இந்த வழக்கு செல்லத்தக்கதா?

(3) இந்த வழக்கு கால வரம்பினால் தடை செய்யப்படுகிறதா?

(4) இந்த நீதிமன்றம் வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு கொண்டுள்ளதா?

(5) வேறு எந்த பரிகாரத்திற்கு வாதி உரிமையுடையராவா?

5. வாதியின் தரப்பில் N.P. இந்துமதி PW1 ஆக விசாரிக்கப்பட்டார் மற்றும் EXA1 முதல் EXA12 வரை சாட்சிகளாக குறியீடு செய்யப் பட்டன. எதிர்வாதியின் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை மற்றும் எந்த ஆவணங் களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதல்கள்:** விவரப் பட்டியல்கள் அனைத்தும் நிபந்தனை எண் 17இல் குறிப்பிடப்பட்டுள்ளன விற்பனை யின் வரையுரைகள் அல்லது விவரப் பட்டியல் தொடர்பான நடவடிக்கையில் எழும் பூசல் மற்றும் பொருட்பாடுகள் எவை தொடர்பாகவும் மற்றும் இந்த வழக்கு எதனையும் விசாரிக்க சென்னை நகரத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்றும் கூறப்பட்டு உள்ளது. இரண்டாம் வாதி ஒரு கண்காணிப்பாளரை அமர்த்தியுள்ளார் மற்றும் அறிக்கையினை முன்னிட்டுள்ளார் மற்றும் ஆவணங்கள் மூலம் தெளிவாக்கப்படுவதாவது, விசாரணை நீதிமன்றத்திற்கு வழக்கினை விசாரிக்க அதிகார வரம்பு உள்ளது என்பது. வழக்கானது 4.11.2013 அன்று முன்னிடப்பட்டது. சரக்குகள் தீயினால் சேதம டைந்துள்ளது காப்பீட்டாளராக இரண்டாம் எதிர் வாதி தொகையினை முதல் வாதிக்குச் செலுத்தி யுள்ளார். பற்றுரிமை மாற்றீடாக, வாதிகள் தொகையை வசூலிப்பதற்காக வழக்கினை முன்னிட்டுள்ளார். இந்த வழக்கு செல்லத்தக்க தாகும். உடன்படிக்கை யின் வரையுரைகளின்படி வாதிகள் எதிர்வாதியிடமிருந்து பணத்தை வசூலிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார். பற்றுரிமை மாற்றீடு கடிதத்தின் படியும் மற்றும் பதரான் செயலுரிமைப் பத்திரம் சிறப்பு அதிகாரப் படியும் கப்பற் சரக்கு காப்பீடு சட்டத்தின் 79ஆம் பிரிவின்படி இரண்டாம் வாதி தொகையினை மீளப் பெற அதிகாரம் கொண்டிருப்பார்.

7. இந்த மேல்முறையீட்டில் தீர்மானிப்ப தற்காக குறிப்பு எழுவதாவது.

(i) இந்த வழக்கை விசாரிக்க விசாரணை நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதா மற்றும்

(ii) வாதிகள் வாதுரையில் கோரப்பட்டவாறு எதிர்வாதியிடமிருந்து தொகையை வசூலிக்க உரிமையுடையவர்களா?

8. மேல்முறையீட்டாளர்/எதிர்வாதிக்கான வழக்குரைஞர் பணிந்தளிப்பதாவது 1ஆம் வாதி /எம்.ஆர்.எஃப். (வரம்பிட) சரக்குகள் சொந்த மானவை அனுப்புச் சரக்கு கொல்கத்தாவி லிருந்து நேபாளத்திற்கு அனுப்பப்பட இருந்தது. சரக்குகள் பீஹாரில் பாராடியா காலனியில் ராக்ஸ்வர் என்றும் பண்டக சாலையில் வைக்கப் பட்டிருந்தவை. (10.11.2010 அன்று தீயினால் அழிக்கப்பட்டன. இது தொடர்பாக, மேல்முறை யீட்டாளர்/எதிர்வாதியிடமிருந்து பெறப்பட்ட கடிதப் போக்குவரத்து கொல்கத்தாவில் உள்ள அலுவலகத்திலிருந்து எம்.ஆர்.எஃப். (வரம்பிட) கல்கத்தாவிற்கு ExA8 ஆக அனுப்பப்பட்டது. ஏற்கப்பட்டவாறு, இது கல்கத்தாவில் நடை பெற்றது. அதாவது ஒப்படைப்பு மற்றும் சரக்குகள் பீஹாரில் ராக்ஸ்இல் அழிவுக்கு உள்ளாகின. இதில் சென்னை நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் எந்த செயற்படு காரணமும் நிகழவில்லை.

9. வழக்கறிஞர் மேலும் பணிந்தளித்ததாவது, செயற்படுகாரணம் பொருண்மைகளின் தொகுப்பு, இதற்கு தீர்ப்பு சார்பாகப் பெறுவதற்கு இதனை மெய்ப்பித்தல் வேண்டும். உ.வி.தொ.ச.இன் பிரிவு 20, செயற்படுவதற் காரணம் பற்றி வகை செய்கிறது. வழக்கை முன்னிடுவது மட்டுமல்ல. பிரிவு 19 உ.வி.தொ.சட்டம் இது வழக்கின் பொருண்மைகளுக்கும் பொருந்தும். உ.வி. தொ.ச.இன் பிரிவு 19 கட்டாயப்படுத்துவதாவது வழக்கானது இழப்பீட்டிற்கானதாக இருக்கிற விடத்து செய்யப்பட்ட தவறுக்காக அதாவது சொத்துக்கு அல்லது ஆளுக்கு, வழக்கான முன்னிடப்படுகிறது. இது தவறு நடைபெற்ற இடத்தில் அல்லது எதிர்வாதி தங்கியுள்ள இடத்தில் தொடுக்கப்படும் மற்றும் அலுவல் அல்லது சொந்தமாகப் பணிபுரிகிற இடத்தில் போடப்படும். உ.வி.தொ.ச.இன் பிரிவு 19இன் கருத்துப்படி வழக்கின் சென்னை நீதிமன்றத்தில் தொகுக்கப் பட்டதில் அதற்கு அதிகார வரம்பில்லை என்பது. இவரது வாதத்தை உறுதிப்படுத்த இந்த நீதிமன்ற வழக்கை ஆதாரமாக்கியுள்ளாக ஶ்ரீபதி–ஆய்சரி மில்ஸ் 9 (தனி) வரம்பி. கல்கத்தா மற்றும் பிறர் –எதிர்– சித்ரா நிட்டிங் கம்பெனி, திருப்பூர் 1976 ச.ப.350 உ.வி.தொ.ச.இன் 19ஆம் பிரிவின்படி அசையும் சொத்துக்கு சேதம் ஏற்படுத்தியுள்ள போது, வழக்கானது, மேலே சுட்டப்பட்ட இரண்டு நீதிமன்றங்களில் அதிகார வரம்பிற்குள் வழக்கானது முன்னிடப்படும். அவர் மேல்நிலை நீதிமன்ற வழக்கை ஆதாரமாகக் காட்டியுள்ளார். ஷர்சத் சீமன் லால் மோடி –எதிர்– டீஎல்எஃப்இல் சுட்டப்பட்டது. உ.வி.தொ.ச.இன் பிரிவு 20 எந்த ஐயப்பாட்டின் இடமளிக்கவில்லை. அதாவது அது எஞ்சிய வகைமுறை என்பது இது உ.வி. தொ.ச.இன் பிரிவு 15 முதல் 19 வரையிலான பிரிவுகளின் வரம்புக்குள் வராத வழக்குகளை உள்ளடக்கும். இந்தப் பிரிவின் வரம்புக்குள் வராத வழக்குகளை உள்ளடக்கும். இந்தப் பிரிவின் தொடக்க சொற்கள் மேற்சொல்லப்பட்ட வரம்புரைகளுக்கு உட்பட்டு என்று தொடங்கு கிறது. எனவே இதில் தெள்ளத்தெளிவாக்கப் படுவதாவது, பிரிவு 20 உ.வி.மு.தொ.ச.இன் பிரிவுகள் 15 முதல் 19இல் உள்ளடக்கப்படாத பிரச்சினைகளுக்குப் பொருந்தும் என்பது.

10. வழக்கறிஞர் மேலும் பணிந்தளிப்பது ExA4 உடன்படிக்கையின் நிழற்படி. இது 1ஆம் எதிர்வாதி/MRF வரம்பிட. மற்றும் மேல்முறை யீட்டாளர்/எதிர்வாதிக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இதன் மூலம் முன்னிடப்பட வில்லை. இதற்கு எதிர்ப்பு எழுந்தது. அதாவது இவை குறியிடப்படுவது தொடர்பாக மற்றும் நீதிமன்றம் படியில் உள்ள கையொப்பத்தினை ஒப்பிட்டு பார்க்காது. சொல்லப்பட்ட உடன்படிக்கை யில் அதிகார வரம்புக் கூறின்படி இவர்கள் பணியை வலியுறுத்த முடியாது. அதாவது நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்குவதாக அதாவது அது கொண்டிராத அதிகார வரம்பினை இரண்டு நீதிமன்றங்களோ அல்லது அதிக நீதிமன்றங்களோ அதிகார வரம்பு அந்த நுதல்பொருள் மீது கொண்டிருக்கும்போது, உடன்படிக்கையின் தரப்பினர் எதனை ஒரு நீதிமன்றத்தைச் சுட்டி அதனை குறித்துரைப்பர். எனினும் தரப்பினர்கள் ஒரு நீதிமன்றத்திற்கு அவர்களது இசையின் மூலம் அதிகார வரம்பளிக்க முடியாது. அதாவது அதிகார வரம்பிக்கும்போது நீதிமன்றத்திற்கு, வழக்கறிஞர் மேல்நிலை நீதிமன்ற தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு அந்த தீர்ப்பின் வழக்கை சுட்டியுள்ளார். சக்மிதா செயின் பாதர் –எதிர்– இயக்குநர், சுகாதாரப்

பணிகள் 2013 (10) உச்.நீ.வ. 136. ஒரு நீதிமன்ற அதிகார வரம்பினை மற்றொரு நீதிமன்றம் பறிப்பதை சட்டம் அனுமதிக்காது. எந்த பொருட்பாட்டின்படியும் எந்தக் காரணங் களுக்காகவும் அதற்கான மறுப்பு அதன் ஆணிவேர் வளர பொருட்பாடு தொடர்பானது. அதிகார வரம்புக் கூறு ExA4 இல் சுட்டப்பட்டது. பணியை இவர்கள் அழுத்தம் கொடுத்துப் பெற முடியாது. மாறாக ExA6 தெளிவாக கூறப்பட்டி ருப்பதாவது கொல்கத்தாவில் உள்ள நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகார வரம்பு பெற்றிருக்கும் என்பது. அவர் பணிந்தளிப்பது கடன் பற்றுரிமை மாற்றீடு இடையேயானது, மற்றும் இதில் சென்னை நீதிமன்றத்திற்கு இவர்கள் அதிகார வரம்பினை அளிக்க முடியாது. கண்காணிப்பாளர் அறிக்கை ExA9 மெய்ப்பிக்கப்பட்டதாகக் கூற முடியாது. இதனை எழுதியவரை விசாரித்தறியாமல்.

11. மாறாக, எதிர்வழக்கீட்டாளர்கள்/வாதி களின் வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது எதிர்வாதி களின் சரக்கு கொண்டு செல்பவர் அனுப்புச் சரக்குகளை ஒப்படைக்கத் தவறியுள்ளார். இதன் மூலம் மீறுகை அல்லது உடன்படிக்கை முறிவை ஏற்படுத்தியுள்ளார். அதாவது சட்டப்படியான ஒப்பந்த கடமைப் பொறுப்பு மீறப்பட்டுள்ளது. முதல் வாதி அனுப்புச் சரக்குகளின் சொந்தக் காரர் இவர் தொடர்புற்ற காலத்தில் சட்டப்படியான அறிவிப்பு இழப்பீடு பற்றி எதிர்வாதிக்கு 30.11.2010 அன்று தெரிவித்துள்ளார் மற்றும் எதிர்வாதிக்கு ஏற்பட்ட இழப்பீடு பற்றிக் கூறி இழப்பீட்டுத் தொகையை அவர்களிடமிருந்து கோரியுள்ளார். சரக்குகளை ஒப்படைக்காதது, இதன் விளைவாக வாதிக்கு ஏற்பட்ட பண இழப்பீடு இது அவர்களது அசட்டை காரணமாக ஏற்பட்டுள்ளது. உரிய கவனம் மற்றும் பாதுகாப்பு இல்லாததே இழப்பிற்குக் காரணமாகியுள்ளது. எதிர்வாதியின் தரப்பிலான தவறுகை 4.11.2008 தேதியிடப்பட்ட ஒப்பந்தத்திலும் கூட அதாவது எதிர்வாதியால் முதல் வாதியுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். எதிர்வாதி பொறுப்புறுதியை இழப்பீடு அல்லது இழப்பு தொடர்பாக ஏற்றுள்ளார். அதாவது அவர்களால் வைக்கப்பட்டுள்ள சரக்குகள் தொடர்பாக. இந்த வாதத்தை உறுதிப் படுத்தும் வகையில், இந்த நீதிமன்ற நீதியர் ஆய தீர்ப்பினை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

(i) பாண்ட் புட் புரோடக்ட்ஸ் தனியார். வரம். – பதிவு அலுவலகம், பெங்களூரில் மற்றும் பிறர் –எதிர்– பிளாண்டர் ஏர்வேஸ் வரம்., 2004 (4) CTC 103 (DB.): 2004 (2) LW 663; மற்றும் (ii) பட்டேல் ரோட்வேஸ் லிட்., –எதிர்– இண்டோ மதுஷிதா அப்ளையன்ஸஸ் கம். வரம்பி. மற்றும் பிறர் 2000 (2) LW 751.

12. இந்த நீதிமன்றம், இரு தரப்பினர்களின் பணிந்தனுப்புதல்களைக் கருதுகை செய்துள்ளது மற்றும் பதிவேடுகளைக் கூர்ந்தாய்ந்துள்ளது.

13. இதில் எதிர்வாதி/மேல்முறையீட்டாளரின் குறிப்பிட்ட வழக்காவது வழக்கானது செயற்படு காரணம் எதுவும் இன்றி முன்னிடப்பட்டுள்ளது மற்றும் முதல் வாதியான நிறுவனம், அதன் அதிகார முகவரால் சார்பாற்றம் செய்யப் பட்டுள்ளார் மற்றும் இரண்டாம் வாதி ஒரு இயற்கையான ஆண் அல்ல. எனவே இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல. இதுவும் எதிர்வாதி யின் வழக்கு அதாவது சாக்குகள் கல்கத்தாவி லிருந்து ஒப்படைக்கப்பட்டது. காட்மாண்டு நேபாலுக்கு எனவே, விசாரணை நீதிமன்றத்திற்கு அந்த வழக்கை ஏற்கவும் விசாரிக்கவும் அதிகார வரம்பு கொண்டிருக்கவில்லை.

14. இதில் குறிக்கப்பட வேண்டியது. 1908 உரிமை வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 19, 20 வழக்கு நடைபெற வேண்டிய இடம் பற்றி வகை செய்கிறது. அதுவும் குறிப்பாக இழப்பீடு உள்ளடங்கிய வழக்குகளில் முறையே தவறான மற்றும் பிற வழக்குகள் தொடர்பாக. உ.வி.தொ.ச.இன் பிரிவு 19 தவறு ஏற்பட்டதால் இழப்பு ஏற்பட்டதற்கான இழப்பீட்டிற்கான வழக்கிட அனுமதிக்கிறது. ஆளுக்கு அல்லது அசையும் சொத்துக்கு ஏற்படுத்தப்படும் தவறுக்காக எங்கு தவறு ஏற்படுத்தப்பட்டதோ அல்லது எதிர்வாதிகள் தங்கியுள்ள இடத்தில் வழக்கு முன்னிடப்படும். பிரிவு 20 வேறு எங்கு வழக்குகள் தொடுக்கப் படலாம் என்பது பற்றி வகை செய்கிறது. அதாவது எதிர்வாதி தங்கியுள்ள இடத்தில் அல்லது செயற்படு காரணம் எழுகின்ற இடத்தில்.

15. ExA4இனை கூர்ந்தாய்வு செய்வதில் 4.11.2008 தேதியிடப்பட்ட உடன்படிக்கை முதல்வாதிக்கும் எதிர்வாதிக்குமிடையே ஏற்படுத்தப் பட்டது. இதில் நிறுமம் உடன்பட்டதாவது சரக்கு களை கொண்டு செல்ல, அந்த சேமிப்பு கிடங்கின் வாடிக்கையாளர்கள் அல்லது ஒப்பந்தக் காரர்களில் அல்லது அவர்களது முகவர்கள் சேமித்து பாதுகாக்க உள்ள வசதிகள் நகரம்/ மாநகரம் இடங்கள் பட்டியலில் சுட்டப்பட்டவை. இந்த உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டது. நிபந்தனை எண் 13, 14, 23. இந்த உடன்படிக்கை யின் வரையறைகள் பின்வருமாறு.

13. ஒப்பந்தக்காரர்கள் உடன்பட்டுள்ள தாவது, குழுக் கடமைப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வது, அதாவது அவர்களிடம் ஒப்படைக்கப் பட்ட பொருட்கள் தொடர்பாக, அதாவது அவை முறையேயான வாடிக்கையாளர்களிடம் ஒப்ப டைக்கப்படும் வரையில், அதன் லாரி (கனரக வாகன) பற்றுச் சீட்டுகளின்படி, ஒப்பந்தக்காரர் களும், இந்தக் கடமைப் பொறுப்பினை ஏற்க உடன்பட்டனர். அவர்கள் தங்களை இழப்பு இழப்பீடு, ஒப்படைக்கத் தவறுதல் குறைத்து பொருட்களை ஒப்படைத்தல். அதாவது கடவுள் செயல்களான இயற்கை சீற்றம் காரணமாக) தீப்பற்றுதல், வெள்ளம், பூகம்பம், மழை நீர் சேகரிக்கும் போராட்டம், அடைப்பு, கலகம், சண்டைகள், இழப்பீடு, தீய எண்ணத்துடனானது, புயல் டிரக்குகள் பறிமுதல், சாலை விபத்து, திருட்டு, உடைபடுதல், சிறு திருட்டு மற்றும் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக. இவை போக்குவரத்தின்போது ஏற்பட்டாலும் அல்லது அவை பண்டக சாலையில் வைத்தி ருக்கும்போது ஏற்பட்டாலும் அல்லது கம்பெனி யின் சேமிப்பு வசதிகளில் ஏற்பட்டாலும் அனைத்து இழப்புகளின் கோரிக்கைகள், மேற் சொல்லப் த்ட்ட வாறான அனைத்தும் ஒப்பந்தக் காரணமாக கட்டுப்படுத்துவதாக அறுதி செய்து ஏற்கப்பட்ட ஒப்பந்தப்படி. இந்த நிறுமம் அதற்கான பொறுப்பை ஏற்றது. வேறு எந்த உரிமை அல்லது தீருதலுக்கு குந்தகமின்றி அல்லது இவர்களது பற்றுரிமைச் சீட்டுகள் எதனையும் அல்லது அனைத்தையும் தள்ளுபடி செய்தல் அல்லது எந்தக் கணக்கின் படியும், நிறுவத்தினால் தீர்மானிக்கப்படும் தொகை அதற்கு ஒப்பந்தக்காரர்களால் இழப்பீடு ஒப்படைப்பு செய்யாதது அல்லது இவை போன்ற மேற்சொல்லப்பட்டவற்றி எதிராக ஈடு செய்யப்படும் என்பது.

14. ஒப்பந்தக்காரர்கள் போதிய மற்றும் இடையீடு செய்யப்பட முடியாத ஒட்டு மொத்த காப்பீட்டினை பொருட்கள் தொடர்பாக பெறுவர். அதாவது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக. அனைத்து இடர்பாடு களையும் ஏற்கும் வகையில் அதுவும் குறிப்பாக, மேலே சுட்டப்பட்ட கூறு 13இன்படியானவை அதாவது பொருட்கள் கொண்டு செய்யப்படும் போதும் மற்றும் (ஆ) ஒப்பந்தக்காரர்களின் பாதுகாப்பின் அவர்களது முகவர்களின் பாதுகாப்பில் இருக்கும்போதும் முறையே அவரவர்களது பண்டகசாலையில்/சரக்கு கையாகும் வசதி களில் அவை ஒப்படைக்கப்படும் வரை. அதாவது வாடிக்கையாளர்களிடம் அல்லது கூறு 15இன் கூறப்பட்டவாறு. நிறுமத்திடம் திருப்பியளிக்கப் படும் வரையில், ஒப்பந்தக்காரர் இவை பற்றி நிறுமத்திடம் தெரிவித்தல் வேண்டும். அதாவது காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுமத்தின் பெயர் எந்த நிறுமத்திடம் இவர்களது பொருட்கள் காப்பீடு செய்யப்பட்டன என்பது பற்றி மற்றும் இது குறித்த விவரங்கள் மற்றும் இவர்களால் அவ்வப்போது செலுத்தப்பட்ட கட்டணங்கள் இந்தக் கால்மூட்டு ஆவணங்கள் படிகள் பிரிமீயம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டுகள். அவை ஆண்டுக்கு புதுப்பிக்கப்படுதல் இவை நிறுமத்திற்கு ஒப்பந்தக்காரரால் அளிக்கப்படும்.

23. இதில் இதன் மூலம் வெளிப்படையாக உடன்படுவதும் விளம்பப்படுவதுயானவை எந்தப் பூசல் அல்லது வேறுபாடு இந்த உடன்படிக்கை அல்லது கோரிக்கை எதுவும் இரு தரப்பினர்களுக்கிடையே எழுபவை சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் தகுதி வாய்ந்த அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்டும் அதாவது பிற நீதிமன்றங்கள் நீங்கலாக.

16. இங்கு இதைக் குறிப்பிடுவது பொருத்த மானதாக அமையும். அதாவது, உ.வி.தொ.ச.இன் பிரிவு 20 இடைநிலையாக நீதிமன்றங்களின்

கட்சி மண்டல அதிகார வரம்பினை ஏற்கிறது அதாவது எங்கு செயற்படுபொருளானது முழுமையாக அல்லது பகுதியாக எழும்போதும்.

17. இரண்டாம் வாதி/யுனைடெட் இந்தியா காப்பீடு சென்னை இது தொடர்பாக கண்காணிப்பாளர் ஒருவரை அமர்த்தியுள்ளது. அவரது அறிக்கை ExA9 24.5.2011 தேதியிடப் பட்டது. ExA5 இனைக் கூர்ந்தாய்வு செய்ததில் இதில் உள்ள விவரப்பட்டியலில் நிபந்தனை எண் 17 பின்வருமாறு படிக்கப்படுகிறது. சென்னை யில் உள்ள நீதிமன்றங்களுக்கு மட்டுமே. இந்த வழக்குகளை விசாரிக்கவும் அல்லது தீர்மானிக்க வும் அதிகார வரம்பு இருக்கும் என்பது எந்த பொருட்டாக தொடர்பான பூசல் எதுவும், எழுகிற நடவடிக்கை தொடர்பாக இந்த விவரப்பட்டி தொடர்பானவை.

18. இதில் தொடர்புற்றதாவது, 1872 இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 28இனைச் சுட்டுவது இது பின்வருமாறு.

“**28 சட்ட நடவடிக்கைகளை தடை செய்யும் உடன்படிக்கை விழலானதாகும்**: உடன்படிக்கை ஒவ்வொன்றும் (அ) ஒப்பந்தம் எதன்படியும் அல்லது அதற்கிணங்க அவளது உரிமைகளை செயற்படுத்துவதிலிருந்து முழுவதுமாகத் தடை செய்கிற எதுவும் அல்லது ஒப்பந்தம் எதன்படி யும் சாதாரண சட்ட நடவடிக்கைகளை சாதாரண தீர்ப்பாயத்தில் அல்லது அவரது உரிமைகளை எந்தக் காலத்திற்குள் செயற்படுத்தப்பட முடியும் என்பது பற்றியதும் அல்லது (ஆ) தரப்பினர் எவரின் உரிமைகளை இல்லாது செய்கிற எதுவும் அல்லது இதனை கடமைப் பொறுப்பினை விடுவிக்கிற எதுவும், எந்த ஒப்பந்தப்படி அல்லது அது தொடர்பாக. ஒரு குறித்துரைக்கப்பட்ட காலத்தின் முடிவிற்குப் பின் அதாவது தரப்பினரின் உரிமைகளைச் செயற்படுத்துவதற்கு தடை செய்வதாக அமைகிற எதுவும் அது தடை செய்கிற அளவிற்கு விழலானதாகும்]”

19. இங்கு உச்சநீதிமன்ற வழக்கை சுட்டுவது தொடர்புற்றதாக அமையும். ஹகம் சிங்–எதிர்– காம்மன் (இந்தியா) லிட். 1971 (1) உச்.நீ.வ. 286 அதில் கூறப்பட்டதாவது.

“தரப்பினர்கள் உடன்படிக்கை மூலமாக, அவர்களது உடன்படிக்கையில் நீதிமன்றத்திற் அதிகார வரம்பினை அளிக்க முடியாது. அதாவது அதனிடம் தொகுப்புச் சட்டத்தின்படி இல்லாத ஒன்றை, ஆனால், தரப்பினர்களி டையே ஆன ஒரு வழக்கை, விசாரிக்க அல்லது ஓர் உடன்படிக்கையின் நடவடிக்கைகளை விசாரிக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்களில் அதிகார வரம்பு உள்ளபோது, இத்தகைய ஒரு நீதிமன்றத்தின் முன்பு தரப்பினர் களுக்கிடையேயான, பூசலை விசாரிக்க முடியும். இது பொதுக் கொள்கைக்கு முரணானது அல்ல. இத்தகைய உடன்படிக்கை ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 28 இனை மீறுவதாக அமையாது”

20. நிபந்தனை எண் 17இன்படி, ExA5இல் கூறப்பட்டிருந்தவாறு, விவரப் பட்டியல் மற்றும் நிபந்தனை எண் 13இன்படி ExA4 உடன்படிக்கை வெளிக்காட்டுவதாவது பூசல் எதுவும், எந்த பொருட்பாடு, தொடர்பானது. இந்த விவரப் பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளில் எழும் பொருட்பாடு, எதனையும் மற்றும் நிபந்தனை 13இன்படி முதல் வாதி மற்றும் எதிர்வாதிக் கிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கை ExA4இல் தெரிவிக்கப்படுவது சென்னை நகரில் இதன் மண்டல அதிகார வரம்பு உள்ளதாக அதாவது வழக்கை விசாரிப்பதற்கு அல்லது பூசல் எதனையும் தீர்மானிப்பதற்கானது தொடர்பான பொருட்பாடு எதுவும் உடன்படிக்கையின் விவரப் பட்டியல் மூலம் எழும் எதனையும் தீர்மானிப்பது.

21. மேலும் ExA4இன்படி கூறு 23, தெளிவாக விளக்குவதாவது, இவர்களிடையே பூசல் எதுவும் எழுமானால், சென்னை உரிமையியல் நீதிமன்றத்திற்கு அந்த பிரச்சினையை விசாரிக்க அதிகார வரம்பு பெற்றிருக்கும். விசாரணை நீதிமன்றம், ExA4 மற்றும் ExA5 ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கை விசாரிக்க ஆட்சி மண்டல அதிகார வரம்பை நீதிமன்றம் கொண்டுள்ளதாக சரியான முடிவுக்கு வந்துள்ளது. அடுத்து காரணத்துக்குள்ள குறிப்பாவது வழக்கு காலவரம்பினால் தடை செய்யப்படுகிறதா என்பது. வழக்கானது 4.11.2013 அன்று முன்னிடப்பட்டது. இதில் தீயினால் அழிக்கப்பட்ட சரக்குகளுக்காக பணம் கோரப்பட்டது. அதாவது

இந்த சரக்குகள் பண்டக சாலையில் சேமிக்கப்பட்டிருந்தன. பண்டக சாலையில் வைக்கப்பட்டிருந்த சரக்குகள் தீயினால் அழிக்கப்பட்டது மற்றும் இது முதல் வாதியால் 10.11.2010 அன்று எதிர்வாதிக்கு தெரிவிக்கப்பட்டது. ExA7இல் உள்ள 4.11.2010 தேதியிடப்பட்ட கடைசி விவரப் பட்டியல்.

22. ExA7 (15 எண் கொண்ட) வரிசைகள் உள்ள ஒப்புகைக் கடிதம் இழப்பீடு பற்றிய அறிவிப்புகள் 11.11.2010 தேதியிடப்பட்டது. இதில் எதிர்வாதி தெரிவித்துள்ளது முதல் வாதி பண்டக சாலையில் சரக்குகள் தீயினால் அழிக்கப்பட்டது. எனவே வழக்கு முன்னிடப்பட்டுள்ளது. முதல் வாதியால் அனுபவிக்கப்பட்ட இழப்பு அது 2ஆம் வாதியினால் இழப்பீடு அளிக்கப்பட்டுள்ளது. இது கடன் பற்றுரிமை மாற்றீடு முறையில் செய்யப்பட்டுள்ளது மற்றும் வாதி வழக்கை முன்னிட்டுள்ளார். இழப்பீடுகளுக்கான பணம் பெறுவதற்கான வழக்கு, இந்த வழக்கானது, மூன்று ஆண்டு காலத்திற்குள் முன்னிடப்பட்டுள்ளது. இது கால வரம்பினால் தடை செய்யப்படவில்லை.

23. மேல்முறையீட்டாளர்/எதிர்வாதிகளின் மற்றொரு வாதமாவது இந்த வழக்கை ஏற்பதற்கு எந்தச் செயற்படு காரணமும் இல்லை என்று வாதிடப்பட்டது. வாதி மற்றும் எதிர்வாதி சரக்குகளை ஒப்படைக்க உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளனர். எதிர்வாதியின் போக்குவரத்து மூலமாக சரக்குகளை கொண்டு செல்ல. இது எதிர்வாதிகளால் மறுக்கப்படவில்லை. எதிர்வாதி ஊர்தியாளர்களால் இவை கொண்டு செல்லப்பட்டன.

24. வழக்கு எப்போதும் ஒரு செயற்படு காரணத்தைக் கொண்டிருக்கும். எந்த வழக்கிலும் செயற்படு காரணம் இவ்வாறிருக்க முடியாது. இத்தகைய செயற்பட காரணம் வாதிகளுக்கு எழுந்துள்ளது. இதில் நீதிமன்ற அதிகார வரம்பு என்பது. ஒப்பந்தத்தின் பொருட்பாடு, இது ஒப்பந்தம் ஏற்பட்ட இடம் தொடர்பானது. இதன் காரணிகள் தொடர்புடைய செயற்படு காரணம் எழும் இடம்.

25. இந்த நிலையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை சுட்டுவது தொடர்புற்றதாக அமையும். ஆல்கெமிஸ்ட் வரம்பி. மற்றும் பிறர் –எதிர்– சிக்கிம் மாநில வங்கி மற்றும் பிறர். AIR 2007 உச்.நீ. 1812. இதில் கூறப்பட்டதாவது மேலே சொல்லப்பட்ட கலந்துரையாடல்களிலிருந்து மற்றும் தொகுப்பான வழக்குகளின் முடிவுகளின் கூறப்பட்ட விகிதாச்சாரப்படியான கணக்குகளில் தெளிவாக்கப்படுவது மனுதாரர் மேல்முறையீட்டாளரால் கூறப்பட்ட பொருண்மைகளின்படியாக, இவை செயற்படு பொருளாக அமையுமா அமையாதா என்பது பற்றி அறிய அந்தப் பொருண்மை ஒரு பொருட்பாடாக அமையுமா என்பதையும் அது முக்கியமான அந்தக் காரண நோக்கமாக அமையுமா என்பதையும் கருதுகை செய்ய வேண்டும். ஐயமின்றி உண்மையாவது நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் ஒரு சிறிய செயற்படு காரணம் இருந்தாலும் அந்த நீதிமன்றத்திக்கு ஆட்சி மண்டல அதிகார வரம்பு உண்டு, அதாவது அந்த வழக்காக மனுவை ஏற்று விசாரிக்க அது செயற்படு பொருளின் ஒரு பகுதியாக அமைந்தபோதிலும்.

26. ExA6 எதிர்வாதியின் அனுப்புச் சரக்கு பற்றிய குறிப்பு அதாவது சரக்குகள் எதிர் வாதியாகக் கொண்டு செல்லப்பட்டன என்பது. ExA8, 11.11.2010 தேதியிடப்பட்டது. எதிர்வாதி வாதிக்கு தெரிவித்ததாவது, அவர்களது பண்டக சாலையில் தீ ஏற்பட்டது மற்றும் சரக்குகள் அழிக்கப்பட்டன என்பது மற்றும் இதில் தெரிவிக்கப்பட்டதாவது, இந்த பொருட்பாட்டினை காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அதாவது இரண்டாம் வாதிக்கு கோரிக்கையை செய்து செலுத்தப் பெற அந்தத் தொகை இரண்டாம் வாதியால் முதல் வாதிக்கு கடன் பற்றுரிமை மாற்றீட்டின் அடிப்படையில், வாதி பணத்தை வசூலிப்பதற்காக வழக்கினை முன்னிட்டுள்ளார்.

27. வாதியின் மீது மெய்ப்பிக்கும் சுமை உள்ளது. அதாவது அவரது கண்காணிப்பு அறிக்கை ExA9, 24.5.2011இன்படி அடிப்படையில் இது விடுவிக்கப்பட்டது மற்றும் முதல் வாதிக்கு ஏற்பட்ட இழப்பு சரியீடு செய்யப்பட்டது. அதாவது காப்பீட்டு கொள்கையின் வரையுரை மற்றும் வரைக்கட்டுகளின்படி முதல்வாதிக்கு ஏற்பட்ட இழப்பு இரண்டாம் வாதியால் சரக்குகளின் காப்பீட்டாளராக ரூ.15,00,00,0000/– முதல் வாதிக்கு.

28. இது தொடர்பாக முதல் வாதி கடன் பற்றுரிமை மாற்றீடு கடிதத்தை நிறைவேற்றி யுள்ளார் மற்றும் 2ஆம் வாதி சார்பாக ExA11, சரக்குகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை உறுதி செய்வதற்காக, கடன் பற்றுரிமை மாற்றீடு உடன்படிக்கை மற்றும் சிறப்பு பகர அதிகாரம் பத்திரம், முதல் மற்றும் 2ஆம் வாதிகளுக் கிடையே ஏற்படுத்தப்பட்டது. இது 6.8.2012 தேதியிடப்பட்ட ExA11 இதில் கண்காணிப்பாளர் அமர்த்தப்பட்டார். அவர் அந்த இடத்தினை ஆய்வு செய்து நிழற்படங்கள் எடுத்துள்ளார் மற்றும் ExA9, 24.5.2011இன் தேதியிட்ட அவரது அறிக்கையை முன்னிட்டுள்ளது. முதல் வாதி சரியீடு செய்தது. இரண்டாம் வாதியால் மற்றும் பணத்தை வசூலிப்பதற்கான சட்ட அறிவிப்பு ExA12, 9.8.2013 எதிர்வாதியால் ஒப்புகை செய்யப்பட்டது. உடன்படிக்கையின் வரையுரைகளின்படி வாதிகள் எதிர்வாதிகளிட மிருந்து பணத்தை வசூலிக்க உரிமையுடையவர் ஆவார்.

29. இங்கு குறிப்பிடுவது சரியானதாக அமையும். அதாவது சரக்குகளை கொண்டு செல்பவர். அவரது கடமைப் பொறுப்பை தனதல்ல என்று கூறுவதற்கு இது கடவுள் செயலால் ஏற்பட்ட இழப்பாக இருத்தல் வேண்டும். ஆனால் கையில் உள்ள வழக்கில், இத்தகைய எதிர்ப்பு எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர் வாதிகள் உரிய கவனமும் கவனிப்பு எடுக்கப் பட்டதாக மெய்ப்பிக்கத் தவறியுள்ளனர். சரக்குகள் தீயில் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது. கடன் பற்றுரிமை மாற்றீடு என்னும் நெறிமுறை, காப்பீட்டாளருக்கு நலப்பயனைப் பெற உரிமையளிக்கிறது.

30. 1963 கப்பற் சரக்கு காப்பீடு சட்டத்தின் பிரிவு 79இனைக் குறிப்பிடுவது தொடர்புற்ற தாகும்.

"79 கடன் பற்றுரிமை மாற்றீடு உரிமைகள் (1) மொத்த இழப்பீட்டிற்கான தொகையைக் காப்பீட்டாளரை செலுத்துகிறவிடத்து முழுமை யுமாக அல்லது சரக்குகளின் பகுதி பிரிக்கக் கூடிய வகையில் உள்ள நேர்வில் காப்பீடு பற்றுரிமை மாற்றீடு என்பதன் மூலம் அவ்வப் போது நுதல்பொருள் தொடர்பாக இழப்பீடு ஏற்படுவன பெறுவார்.

(2) முன்சொல்லப்பட்ட வகைமுறைக்கு உட்பட்டு, பகுதி இழப்பீட்டிற்கான தொகையைக் காப்பீட்டாளர் செலுத்தம் செய்கிறவிடத்து, காப்பீடு செய்யப்பட்ட நுதல்பொருளின் உரிமை மூல பாத்தியதை எதனையும் பெற மாட்டார் அல்லது எஞ்சியுள்ள பகுதி செலுத்தத்தையும் பெற மாட்டார் அல்லது எஞ்சியுள்ள பகுதி செலுத்தத்தையும் பெற மாட்டார். ஆனால் இதன் பேரில் அவனுக்கு கடன் பற்றுரிமை மாற்றீட்டின்பேரில் காப்பீடு செய்தவரின் அனைத்து உரிமைக்கும் தீருதலிகளும் மற்றும் நுதல் பொருள் தொடர்பாக அந்தக் காலத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. பொறுத்து ஏற்படும் இழப்பு எந்த அளவுக்கு காப்பீடு செய்தவனுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளதோ அந்த அளவுக்கு இந்த சட்டத்திற்கிணங்க இத்தகைய இழப்புக்கான செலுத்தம் செய்யப்படும்."

31. வாதிகள் தங்களது வழக்கை மெய்ப்பிப்பதில் எதிர்வாதியின் அசட்டை காரணமாக சரக்குகள் அழிக்கப்பட்டதாகவும் மற்றும் எதிர்வாதி, கடன் பற்றுரிமை மாற்றீடு கடிதத்தின் காரணமாக செலுத்த கடப்பாடுடையவர் என்றும் கப்பற் சரக்கு காப்பீடுச் சட்டத்தின் பிரிவு 79இன்படி சிறப்பு பகர அதிகாரப் பத்திரம், மூலம் செலுத்தக் கடப்பாடு உடையவர். இரண்டாம் வாதி தொகை யினை மீளப் பெற உரிமையுடையவர் ஆவார்.

32. மேற்சொல்லப்பட்ட கருத்தின்படி, இந்த நீதிமன்றம், கொண்டுள்ள கருத்தாவது, விசாரணை நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அவ்வாறே இந்தக் குறிப்பு களுக்கு பதிலளிக்கப்படுகிறது.

33. முடிவாக, முதல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது மற்றும் மு.வ.எண் 3102/2015இன் 21.11.2017 தேதியிட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை. இது XVI கூடுதல் நீதிபதி (FAC) XVII கூடுதல் நீதிபதி உரிமையியல் நீதிமன்றம் சென்னையில் கோப்பில் உள்ளது. இது உறுதி செய்யப்படுகிறது. செலவுத் தொகை யின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# மூத்த குடிமக்கள் பராமரிப்புச் சட்டம் 2017-க்கு பின்னோக்கிய விளைவு கிடையாது: 2004-ல் நிறைவேற்றப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய முடியாது

**சென்னை உயர்நீதிமன்றம்**

**முன்னிலை: மாண்புமிகு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி,**
**மாண்புமிகு நீதிபதி .ஜி.அருள் முருகன்**

மேல்முறையீட்டு வழக்கு (WA) எண் 2101/2024
(2026 (2) CTC 513)

**எம்.எம். ரமேஷ், த/பெ. எம்.எஸ். மாணிக்கவாசகம்,**
**எண் 7331, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,**
**குறிஞ்சி குடியிருப்பு, அய்யப்பாக்கம்,**
**சென்னை 600 077.**

**...மேல்முறையீட்டாளர்(கள்)**

**–எதிர்–**

1. **எம்.எஸ். மாணிக்கவாசகம் த/பெ. காலஞ்சென்ற எம்.சாமிசா, எண் 9/407, சிட்கோ நகர், 50–வது தெரு, வில்லிவாக்கம், சென்னை – 600 049.**
2. **மாவட்ட ஆட்சியர் எண் 62, ராஜாஜி சாலை, எம்.சிங்காரவேலர் மாளிகை, 4–வது தளம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை 600 001.**

**...எதிர்மனுதாரர்(கள்)**

**கோரிக்கை:** 14.06.2024 அன்று தனி நீதிபதி பிறப்பித்த பேராணை மனு (WP) எண் 19363/2022–ன் உத்தரவை ரத்து செய்து, நீதி வழங்கக் கோரி உரிமைப் பட்டயப் பிரிவு 15–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு.

மேல்முறையீட்டாளர் தரப்பில்:

**திரு.ஜி. ஆனந்தகுமார் (திருமதி தமிழரசி சட்ட நிறுவனத்திற்காக)**

எதிர்மனுதாரர் 1 தரப்பில்: **திரு.பி.தயானந்த்**

எதிர்மனுதாரர் 2 தரப்பில்:

**திரு.ஏ.எட்வின் பிரபாகர்**
**(அரசு கூடுதல் வழக்கறிஞர்)**

## ஆணை

(நீதிமன்றத்தின் உத்தரவு மாண்புமிகு தலைமை நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டது)

மேல்முறையீட்டாளர்/மகனுக்கு ஆதரவாக முதலாவது எதிர்மனுதாரர்/தந்தை 28.1.2015 அன்று நிறைவேற்றிய அறுதி ஆவணம் ரத்து செய்யப்பட்டதை உறுதி செய்து, தனி நீதிபதி 14.6.2024 அன்று பிறப்பித்த உத்தரவின் சட்டபூர்வமான தன்மை மற்றும் செல்லுபடியாகும் தன்மையை எதிர்த்து இந்த மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.1. மேல்முறையீட்டாளர், முதலாவது எதிர் மனுதாரரின் மகன் ஆவார். முதலாவது எதிர் மனுதாரர் 23.6.2004 அன்று தனது சொந்த விருப்பத்தின் பேரில் மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக ஒரு அறுதி ஆவண பத்திரத்தை நிறைவேற்றினார். முதலாவது எதிர்மனுதாரரின் அறிவுறுத்தலின்படி, தனது சகோதரர்களின் உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்காக மேல் முறையீட்டாளர் அவர்களுக்கு ரூ.1,50,000/– செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

2.2. எதிர்பாராதவிதமாக, 23.6.2004 தேதியிட்ட அறுதி ஆவணப் பத்திரத்தை செல்லாது

என அறிவிக்கவும், 28.1.2015 அன்று முதலாவது எதிர்மனுதாரர் செய்த அறுதி ஆவண ரத்து பத்திரத்தை செல்லுபடியாகும் என அறிவிக்கவும் கோரி முதலாவது எதிர் மனுதாரர் தாக்கல் செய்த உரிமையியல் வழக்கு [O.S. No.3033 of 2016] தொடர்பாக மேல்முறை யீட்டாளருக்கு அழைப்பாணை வந்தது. அந்த வழக்கு 20.10.2017 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறை யீடும் (A.S.No.112 of 2018), சென்னை கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தால் 22.1.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு, முந்தைய தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

2.3. அதன்பிறகு, முதலாவது எதிர்மனுதாரர் 21.10.2019 அன்று வருவாய் கோட்டாட்சி யரிடம் புகார் அளித்தார். அந்தப் புகார் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதலாவது எதிர்மனுதாரர் செய்த மேல்முறையீடும், இரண்டாவது எதிர்மனுதாரரான மாவட்ட ஆட்சிய ரால் 27.4.2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

2.4. இரண்டாவது எதிர்மனுதாரரின் 27.4.2022 தேதியிட்ட அந்த உத்தரவை எதிர்த்து, முதலாவது எதிர்மனுதாரர் பேராணை மனு (W.P.No.19363 of 2022) தாக்கல் செய்தார். அந்த மனு 14.6.2024 அன்று அனுமதிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் உத்தரவு ரத்து செய்யப்பட்டு, 28.1.2015 தேதியிட்ட அறுதி ஆவண ரத்து பத்திரம் உறுதி செய்யப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட சொத்தின் இடத்தை காலி செய்து உடனடியாக முதலாவது எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்குமாறு மேல்முறை யீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டது. அதன் காரண மாகவே இந்த மேல்முறையீடு செய்யப்பட்டு உள்ளது.

3.1. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் வாதிடுகையில், ‘பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007’ ஆனது 29.09.2008 அன்றுதான் நடைமுறைக்கு வந்தது. ஆனால், அறுதி ஆவணப் பத்திரம் 2004-லேயே நிறைவேற்றப் பட்டு விட்டது. எனவே, சட்டப்பூர்வ அதிகாரி முன் முதலாவது எதிர்மனுதாரர் அளித்த புகாரே சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், இந்த முக்கியமான உண்மையை தனி நீதிபதி கருத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

3.2. மேலும், தனது சகோதரர்களின் உரிமை களை விட்டுக்கொடுப்பதற்காக தந்தையின் அறிவுறுத்தலின்படி மேல்முறையீட்டாளர் ரூ.1,50,000/- வழங்கியுள்ளார் என்றும், இந்த அறுதி ஆவணப் பத்திரம் எந்தவிதமான கட்டாயமோ அல்லது தூண்டுதலோ இன்றி தன்னிச்சையாக நிறைவேற்றப்பட்டது என்றும் வாதிடப்பட்டது. 11 ஆண்டுகளுக்குப் பிறகு முதலாவது எதிர்மனுதாரர் இந்த அறுதி ஆவணத்தை ரத்து செய்ய முயன்றார் என்பதும், அந்த முயற்சி உரிமையியல் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, முதலாவது எதிர்மனுதாரரின் கோரிக்கையை தனி நீதிபதி அனுமதித்திருக்கக் கூடாது என்று வாதிடப்பட்டது.

3.3. முதலாவது எதிர்மனுதாரர் மாத ஓய்வூதியமாக சுமார் ரூ. 40,000/- பெற்று வருகிறார் என்றும், அவர் ஒருபோதும் பராமரிப்பு அல்லது தங்குமிடம் கோரி மேல்முறை யீட்டாளரை அணுகவில்லை என்றும், ஆனால் அறுதி ஆவணப் பத்திரத்தின் கீழ் உள்ள சொத்தை தன் வசப்படுத்திக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன் திடீரென அந்தப் பத்திரத்தை ரத்து செய்ய முயன்றுள்ளார் என்றும் சமர்ப்பிக்கப் பட்டது. இத்தகைய முயற்சியைத் தனி நீதிபதி தடுத்திருக்க வேண்டும் என வாதிடப்பட்டது.

4. இதற்கு மாறாக, முதலாவது எதிர்மனு தாரரின் வழக்கறிஞர், தனி நீதிபதி முன்னிலை யில் முன்வைக்கப்பட்ட வாதங்களையே மீண்டும் வலியுறுத்தி, இந்த மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யக் கோரினார்.

5. இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களை யும் நாங்கள் கேட்டறிந்தோம் மற்றும் தனி

நீதிபதி பிறப்பித்த உத்தரவை ஆய்வு செய்தோம்.

6. முதலாவதாக, ‘பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007’–ன் விதிகள், 23.6.2004 தேதியிட்ட அறுதி ஆவணப் பத்திரத்திற்குப் பொருந்துமா என்பதைப் பரிசீலிப்போம்.

7. மேற்கூறிய விவகாரத்தை ஆய்வு செய்ய, இச்சட்டத்தின் பிரிவு 23–ஐக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அது பின்வருமாறு:

‘‘23. சில சூழ்நிலைகளில் சொத்து மாற்றங்கள் செல்லாததாகக் கருதப்படும். (1) சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, ஒரு மூத்த குடிமகன் தனது சொத்தை தானமாகவோ அல்லது வேறு வகையிலோ மாற்றிக் கொடுக்கும் போது, சொத்தைப் பெறுபவர் அவருக்கு அடிப்படை வசதிகளையும் அடிப்படைத் தேவை களையும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மாற்றியிருந்து, சொத்தைப் பெறுபவர் அத்தகைய வசதிகளையும் தேவைகளையும் வழங்க மறுத்தால் அல்லது தவறினால், அந்தச் சொத்து மாற்றம் மோசடி அல்லது வற்புறுத்தல் அல்லது முறையற்ற செல்வாக்கின் மூலம் செய்யப்பட்டதாகக் கருதப்படும். அத்தகைய மாற்றத்தை மூத்த குடிமகனின் விருப்பப்படி தீர்ப்பாயம் செல்லாதது என்று அறிவிக்கலாம்.

(2) ஒரு மூத்த குடிமகன் ஒரு சொத்தின் மூலம் பராமரிப்பு பெற உரிமை பெற்றுள்ள நிலையில், அந்தச் சொத்தோ அல்லது அதன் ஒரு பகுதியோ மாற்றப்படும்போது, அத்தகைய உரிமை குறித்து சொத்தைப் பெறுபவருக்குத் தெரிந்திருந்தால் அல்லது அந்தச் சொத்து மாற்றம் எவ்விதப் பலனுமின்றிக் கொடுக்கப் பட்டிருந்தால், அந்தப் பராமரிப்பு உரிமையை சொத்தைப் பெறுபவருக்கு எதிராகச் செயல் படுத்தலாம். ஆனால், பிரதிபலன் பெற்றுக் கொண்டு, அத்தகைய உரிமை பற்றித் தெரியாமல் சொத்தை வாங்கியவருக்கு எதிராக இதைச் செயல்படுத்த முடியாது.

(3) ஒரு மூத்த குடிமகன் உட்பிரிவுகள் (1) மற்றும் (2)–ன் கீழ் உள்ள உரிமைகளைச் செயல்படுத்த இயலாத நிலையில் இருந்தால், பிரிவு 5–ன் விளக்கம் (1)–ல் குறிப்பிடப் பட்டுள்ள ஏதேனும் ஒரு அமைப்பு அவர் சார்பாக நடவடிக்கை எடுக்கலாம்.’’

8. கேரள உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு, சுபாஷினி –எதிர்– மாவட்ட ஆட்சியர் (2020 (5) ஓஃகூ (ஊஆ) என்ற வழக்கில், இதே போன்ற ஒரு விவகாரத்தைக் கையாளும் போது, சட்டத்தின் பிரிவு 23–க்கு பின்னோக்கிய விளைவை வழங்க மறுத்து விட்டது. பிரிவு 23 என்பது வருங்கால விளைவை மட்டுமே நோக்கமாகக் கொண்டது என்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பின் தொடர்புடைய பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

‘‘51. பிரிவு 23(1) என்பது வருங்கால விளைவை மட்டுமே கொண்டது மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்பது மிக முக்கியமான தாகும். சட்டம் தொடங்கிய பிறகு செய்யப்படும் மாற்றங்களுக்கு மட்டுமே பிரிவு 23 பொருந்தும். பத்திரத்தின் உட்பிரிவுகளில் இத்தகைய நிபந்தனை எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் அளிக்கும் விளக்கத்தை இது மேலும் உறுதிப்படுத்துகிறது. ஒருவேளை அவ்வாறு இல்லாமல், ஒரு பத்திரத்தை நிறைவேற்றக் காரணமான சூழ்நிலைகள் அல்லது அதில் உள்ள ஒதுக்கீட்டு உட்பிரிவுகளை வைத்து இத்தகைய நிபந்தனை மறைமுகமாக இருப்ப தாகக் கருதினால், அது அனைத்துக் காலங் களிலும் மூத்த குடிமக்களால் நிறைவேற்றப் பட்ட அனைத்துப் பத்திரங்களுக்கும் பொருந்தும் நிலை ஏற்படும். அத்தியாயம் 5, பிரிவு 21–ல் கூறப்பட்டுள்ள விளம்பர நடவடிக்கைகள் கூட, பராமரிப்பு மற்றும் தானமாக வழங்கப்பட்ட சொத்தை ரத்து செய்வதற்கான விரைவான தீர்வு குறித்து ஒவ்வொரு மூத்த குடிமகனுக்கும் தெரிவிப்பதற்கும், பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டிய நிபந்தனைகள் குறித்து அவர்களை

எச்சரிப்பதற்கும் மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன.

52. ஒரு மூத்த குடிமகனுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகளை வழங்க வேண்டும் என்ற பிரிவு 23(1)-ன் கீழான நிபந்தனை, சொத்து மாற்றப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று கூறி இந்த மேற்கோளுக்கு நாங்கள் பதிலளிக்கிறோம். அத்தகைய சொத்து மாற்றம் ஒரு தானமாகவோ அல்லது தானத்தின் தன்மையைக் கொண்ட தாகவோ மட்டுமே இருக்க முடியும். இது ஒரு அதிகார வரம்பு சார்ந்த உண்மையாகும். பிரிவு 23(1)-ஐப் பயன்படுத்திச் சுருக்கமான விசாரணைக்கு உட்படுத்துவதற்கு முன்னதாக தீர்ப்பாயம் இதைப் பரிசீலிக்க வேண்டும்...''

9. டெல்லி உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்ச், சரஞ்சித் சிங் அலுவாலியா -எதிர்- இந்திய ஒன்றியம் (AIR 2023 Del 214) என்ற வழக்கில், கேரள உயர்நீதிமன்ற முழு அமர்வின் மேற்கூறிய முடிவை ஏற்றுக் கொண்டு பின் வருமாறு குறிப்பிட்டது:

''13. கேரள உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்தை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. இச்சட்டம், சொத்தைப் பெற்றவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு அவரிடம் நிலைபெற்றுள்ள உரிமை களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. மூத்த குடிமக்களின் நலனுக்கான நடவடிக்கை களை வழங்குவதே இச்சட்டத்தின் நோக்கம் என்ற போதிலும், ஏற்கனவே நிலைபெற்றுள்ள உரிமைகளுக்குப் பின்னோக்கிய விளைவை வழங்கக்கூடாது என்பதில் சட்டமன்றம் கவன மாக உள்ளது. இது சட்டத்தில் விடுபட்ட ஒரு பகுதி அல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 226-வது பிரிவின் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, சட்டமன்றம் எதை விரும்ப வில்லையோ அதைச் சட்டமாக்க இந்த நீதிமன்றத்தால் முடியாது.''

10. டெல்லி உயர்நீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீடு, உச்ச நீதிமன்றத்தால் 26.7.2024 அன்று எஸ்.எல்.பி (SLP (C) No.16395 of 2024) வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்டது.

11. மேலே குறிப்பிடப்பட்ட தீர்ப்புகளில் விளக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி, இச்சட்டமானது அது நடைமுறைக்கு வந்த பிறகு மேற்கொள்ளப் பட்ட சொத்து மாற்றங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதும், இதற்குப் பின்னோக்கிய விளைவு அளிக்க முடியாது என்பதும் தெளிவாகிறது.

12. இந்த வழக்கைப் பொறுத்தவரை, முதலாவது எதிர்மனுதாரர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருவதாலும், அவர் தாக்கல் செய்த உரிமையியல் வழக்குகள் தள்ளுபடி செய்யப் பட்டதாலும், அவரது புகாரை வருவாய் கோட்டாட்சியர் 19.7.2021 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்தார். மேலும், மேல்முறை யீட்டாளர் ஒருவேளை அவரைப் பராமரிக்கத் தவறினாலும், முதலாவது எதிர்மனுதாரர் தனது மற்ற நான்கு பிள்ளைகளிடமிருந்து பராமரிப்பைப் பெற உரிமையுள்ளவர் என்றும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த உத்தரவை இரண்டாவது எதிர்மனுதாரரான மாவட்ட ஆட்சியர் உறுதி செய்தார்.

13. சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தனி நீதிபதியின் உத்தரவில் உள்ள கருத்துகளி லிருந்து, இந்த செட்டில்மெண்ட் பத்திரம் முதலாவது எதிர்மனுதாரரால் அன்பு மற்றும் பாசத்தின் காரணமாகவும், மேல்முறையீட்டாளரின் எதிர்காலப் பாதுகாப்பிற்காகவும் நிறைவேற்றப் பட்டது என்பது தெளிவாகிறது.

14. இருப்பினும், பெற்றோரைப் பராமரிக்க வேண்டிய கடமை பிள்ளைகளுக்கு உண்டு என்ற உண்மையை இந்த நீதிமன்றம் கண்மூடி கடந்துவிட முடியாது. பெற்றோரைத் கவனித்துக் கொள்ள வேண்டிய பிள்ளைகளின் இக்கடமை யானது சட்டப்பூர்வமானது; அது அவர்கள் சொத்தை வைத்திருப்பதன் அடிப்படையில் மட்டுமே அமைந்தது அல்ல.

15. இந்த நிலையில், இந்த மேல்முறை யீட்டில் 26.2.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட

முந்தைய உத்தரவைக் குறிப்பிடுவது பொருத்த மானதாகும்:

''2. இந்த வழக்கில், இடைக்கால உத்தரவு நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது. எனவே, இந்த மேல்முறையீட்டு விசாரணை துரிதப்படுத்தப்படுகிறது.

3. இந்த நீதிமன்றத்தால் 16.07.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது: மேல் முறையீட்டாளர் வசிக்கும் அதே வீட்டில் தங்கு வதற்கு இடம் கோரி முதலாவது எதிர்மனுதாரர்/ தந்தை இந்த நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக விண்ணப்பம் அளித்தால், மேல்முறையீட்டாளர் தான் வசிக்கும் வீட்டில் ஒரு அறையை அவருக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.''

16. மேற்கூறிய கருத்தின் அடிப்படையில், முதலாவது எதிர்மனுதாரர் தான் வசிக்கும் அதே வீட்டில் தங்குவதற்கு இடம் கோரி மேல்முறை யீட்டாளரை அணுகினால், மேல்முறையீட்டாளர் அவருக்கு ஒரு அறையை வழங்க வேண்டும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். ஒவ்வொரு பிள்ளையும் தனது பெற்றோருக்குச் செய்ய வேண்டிய புனிதமான கடமையைக் கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப் படுகிறது. மேலும், இந்த உத்தரவு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளில் உள்ள முடிவு களை எந்த வகையிலும் பாதிக்காது.

17. முடிவாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது மற்றும் இச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரிகளால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு மாற்றியமைக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து எவ்வித உத்தரவும் இல்லை. இதனைத் தொடர்ந்து, இடைக்கால மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## ஓய்வு பெற்ற நீதிபதிகளின் அனுபவங்களைப் பயன்படுத்த புதிய அமைப்பு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி யோசனை

ஓய்வு பெற்ற நீதிபதிகளின் அனுபவங்களை பயன்படுத்திக் கொள்ள தேசிய அளவில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் யோசனை தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம், ஜெய்பூரில் 27.4.2026 அன்று நடைபெற்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு, இது குறித்து அவர் பேசியதாவது:

முன்னாள் நீதிபதிகளின் சட்ட அனுபவங்கள் நமது தேசத்தின் வளமாகும். அந்த வளம், பாலைவனத்தில் கிடைக்கும் நீர் போன்றது. அந்த அனுபவங்களை பயன்படுத்தாமல் இருப்பது நாட்டுக்கு பெரும் இழப்பாகும். ஆதலால் அவர் களின் அனுபவங்களை பயன்படுத்தி கொள்ள தேசிய அளவில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். முதலாவதாக, நீதிபதிகள் ஓய்வுக்கு பின் மத்தியஸ்தர்களாக, நடுவர்களாக செயல்பட முடியும். குறிப்பாக, வர்த்தக விவகாரங்கள், குடும்ப விவகாரங்களின் தீர்வு காண அவர்களது அனுபவங்கள் உதவும். இரண்டாவதாக, ஓய்வு பெற்ற நீதிபதிகள் பள்ளிகள், கல்லூரிகளில், கிராம பஞ்சாயத்துகளில் சட்டம் பயிற்றுவிப் போராக செயல்பட முடியும். அங்கு அவர்கள், சாதாரண குடிமக்களுக்கு புரியும் மொழியில் சட்டம் குறித்து விளக்கமாக எடுத்துரைக்க முடியும். அதேபோல், அடுத்த தலைமுறைக்கு சட்ட அமைப்புகளை உருவாக்குவோராக, அடுத்த தலைமுறை மத்தியஸ்தர்களை உருவாக்குவோராக ஓய்வு பெற்ற நீதிபதிகளால் செயல்பட முடியும்.

நமது நாட்டில் மாற்று வழியில் வழக்குகளுக்கு உடனடித் தீர்வு காணும் அமைப்புகளை வலுப்படுத்தும் பணிகள் நடக்கின்றன. இதற்கு உதாரணமாக நாடு தழுவிய அளவிலான லோக் அதாலத், மத்தியஸ்த பேச்சு வார்த்தைகள் மற்றும் நடுவர் மையங்களை குறிப்பிடலாம். நீதித் துறையும் அதை சார்ந்த அமைப்புகளும், பொதுமக்களின் மிகுந்த நம்பிக்கையை பெற்றுள்ளன. அந்த நம்பிக்கையை காக்க வேண்டியதும், மேலும் வலுப்படுத்த வேண்டியதும் நீதித் துறையின் பொறுப்பாகும் என்றார்.

மாநாட்டில் ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா பேசுகையில், 'நீதிபதிகளிடம் இருந்து வெளிவரும் வார்த்தைகள் சமூகத்துக்கு வழி காட்டியாக உள்ளது. அதேபோல் நீதிபதிகளின் தீர்ப்புகள், நாட்டில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. உச்ச நீதிமன்றம் மற்றும் மாநில உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள முக்கிய தீர்ப்புகள் பல்லாண்டுகளாக பல லட்சம் பேரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளன. பொது மக்கள் நீதிமன்றங்களுக்கு சென்று வழக்குத் தொடுக்கும் முன்பு, பிரச்சினைக்கு நடுவர் மையங்கள் அல்லது லோக் அதாலத் மூலம் தீர்வு காண்பது குறித்து யோசிக்க வேண்டும் என்றார்.

ராஜஸ்தான் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) சஞ்சீவ் பிரகாஷ் ஷர்மா பேசுகையில், 'ராஜஸ்தானில் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் வழக்குகளுக்கு லோக் அதாலத்தில் மத்தியஸ்தம் லோக் அதாலத்தில் மத்தியஸ்தம் மூலம் தீர்வு காண ஓய்வு பெற்ற நீதிபதிகள் உதவி வருகின்றனர்' என்றார்.

**நன்றி: தினமணி 26.4.2026**

# 2006ஆம் சட்டம் நுண்தொழில் மற்றும் சிறுதொழில்களை ஊக்கப்படுத்துவதாக உள்ளது

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை ஆயம்)
முன்னிலை: மாண்புமிகு திபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்
மாண்புமிகு நீதிபதி கே.ராஜசேகர்
நீ.பே.மே.(MD) எண்: 1145/2023, உ.ப.ம.(MD) எண் 8786/2023
நாள்: 30.06.2025
2025 (5) CTC 762

கல்பதரு பவர் டிரான்ஸ்மிஷன் லிட். வரையறுக்கப்பட்டது. சார்பாற்றம் அதன் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவர், ஹரபிந்தர் குலாத்தி, மதுரை செட்டிகுளம், என்ஹெச் 785, செட்டிகுளம், மதுரை – 625 020.
...மேல்முறையீட்டாளர்

–எதிர்–

என். அதிமுதன் (உரிமையாளர்)
ஆதிஸ் ஹார்ட்டு ப்ளோரிங், 26/2, எல்டிசி சாலை,
சின்னசொக்கிகுளம், மதுரை – 625 002.
2. மைக்ரோ ஸ்மால் எண்டர்பிரைசஸ் பெலிசிடேஷன் கவுன்சில், மதுரை மண்டலம், மாவட்ட தொழில் மையம், அழகர் கோயில் ரோடு,
மதுரை 625 002.
..எதிர்வழக்கீட்டாளர்கள்

எம். வள்ளிநாயகம், ஏ. சிவாஜிக்கான வழக்கறிஞர்

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

டி. லஜபதி ராய்,
திருநாவுக்கரசுக்கான வழக்கறிஞர்,
எதிர்வழக்கீட்டாளர் எண் 1க்கான வழக்கறிஞர்

நீ.பே.மே. அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகையின்றி. ப.ம.முடிக்கப்பட்டது.

கோரிக்கை: நீதிப்பேராணை மேல்முறையீட்டு உரிமைப்பட்டயத்தின் கூறு XVஇன்படி முன்னிடப் பட்டது. அதாவது நீதிப்பேராணை மேல்முறை யீட்டினை அனுமதிக்கவும். நீ.பே.(MD) எண் 26527/2022, 2.3.2023 தேதியிட்ட ஆணையினை தள்ளுபடி செய்ய கோரப்பட்டது. இது நீதிமன்ற கோப்பில் உள்ளது.

## தீர்ப்பு

**நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**

1. இருதரப்பு வழக்கறிஞர்களும் கேட்டறியப் பட்டனர்.

2. முதல் எதிர்வழக்கீட்டாளர் மதுரையில் உள்ள நுண்ணிய சிறிய மற்றும் நடுத்தர– தொழில்முனைவோர், மேம்பாட்டுச் சட்ட அவையினை அணுகினார். அதாவது அவர்களது பணிக்கோரிக்கைகளை மேல்முறையீட்டாளருக்கு எதிராக எழுப்பினார். 2006 நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் மேம்பாட்டு சட்டத்தின் 18ஆம் பிரிவினைச் செயற்படுத்தியுள்ளார். து.சி.ம.ந.தொ.மு.நு.சி.ம.ந.தொ.மு.மே.ச. அவை மேல்முறையீட்டாளருக்கு அழைப்பாணை பிறப்பித்தது மற்றும் சமரச நடவடிக்கைக் கூட்டம் 31.1.2002, 28.2.2022, 15.3.2022, 29.4.2022, 13.6.2022, 27.6.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சமரச உடன்படிக்கை முயற்சி பலிக்கவில்லை/தவறியது. சமரச உடன்படிக்கையும் தவறிவது அதன் பின்னர், 6.7.2022 தேதியிட்ட அழைப்பாணை பிறப்பிக்கப் பட்டது. அதாவது மேல்முறையீட்டாளர் 26.7.2022 அன்று முன்னிலையாகக் கோரப்பட்டது. இந்தத் தீர்வின் பத்தி எண் 8இல் இதில் நடைபெற்றது., அவை இந்தப் பத்தி பின்வருமாறு படிக்கப் படுகிறது.

“8. 6ஆவது கேட்பின்போது, 21.7.2022 அன்று மனுதாரர் வலைதளம் மூலமாக முன்னிலையாகியுள்ளார். அவரை சார்பாற்றம்

செய்தவர். அவையின் திரு.பி.ஜெ.ஸ்ரீகணேஷ், அவையினர் மனுதாரரால் அளிக்கப்பட்ட அந்த பொருட்பட்டியலையும் தொடர்புற்ற பிற ஆவணங்களையும் கண்டறிந்துள்ளார். எதிர் வழக்கீட்டாளரின் கூற்றை மனுதாரர் மறுத்து உள்ளார். அதாவது பணி நடுநிலையில் கைவிடப்பட்டதாக கூறப்பட்டது. மூன்றாம் தரப்பினர் ஸ்டெம் உள்கட்டமைப்பு 2021 ஜனவரியில் அமர்த்தப்பட்டது. மனுதாரர் கூறிய தாவது எதிர்வழக்கீட்டாளரால் செலுத்தங்கள் உரிய காலத்தில் செலுத்தப்படவில்லை என்பது. எனவே, 2021களில் இந்தத் திட்டத்தை அவர் விட்டுச் சென்றுள்ளார். இவர்களிடையே புரிந்துணர்வு இருந்ததாகவும் இது பற்றி எதிர்வழக்கீட்டாளருடன் கலந்தாய்வு செய்ததன் அடிப்படையில் எதிர்வழக்கீட்டாளரால் எதுவும் கொடுபட வேண்டியதில்லை'' என்றும் சான்று 16.8.2021 அன்று அளிக்கப்பட்டது. அதாவது இந்தத் திட்டத்தை விட்டுச் செல்ல மற்றும் இது மனுதாரரால் முன்னிடப்பட்டது. 2.8.2021 அன்று இறுதிப் பட்டியல் எழுப்பப்பட்டதாக மனுதாரரும் கூறியதாவது எதிர்வழக்கீட்டாளர் நு.சி.ம.ந.தொ.மு.மே.ச. விடமிருந்து செலுத்தம் கோரப்பட்டதாகவும் மேலும் மனுதாரரால் மொ.ப.வ. செலுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. எதிர்வழக்கீட்டாளர் கடன் பெற்றதாகக் கூறப் பட்டது. பொ.சே.வ. தொடர்பான அனைத்து ஆவணங்களும் எதிர்வழக்கீட்டாளருக்க வழங்கப் பட்டது. எதிர்வழக்கீட்டாளர் நடப்பில் உள்ள செலுத்தம் தொடர்பாக சேவை ஏற்படுத்தினார் மற்றும் அவரது முடிவாவது அறுதியான பற்றுச் சீட்டு என்பது அனைத்து பற்றுச் சீட்டுகளின் ஒட்டு மொத்தம் மற்றும் இதில் நடப்பில் உள்ள செலுத்தத் தொகை ரூ.5,09,330 மனுதாரர் தெளிவாக்கியதாவது எதிர்வழக்கீட்டாளர் இதற்கு முந்திய செலுத்தங்களை செலுத்தாது நடப்பில் வைத்திருந்த காரணத்தால், எதிர்வழக்கீட்டாளர் இதனைப் பூசலா பற்றுச் சீட்டுகளின் தொகுப்பு ரூ.45 லட்சங்கள் மற்றும் அறுதிப் பற்றுச் சீட்டு மொத்த நடப்பில் உள்ள சீட்டுகளின் சேர்க்கை ரூ.5,09,330 மட்டுமே. மனுதாரர் தெளிவாக்கிய தாவது முந்திய பற்றுச் சீட்டுகள் எதிர்வழக்கீட்டாள ரால் செலுத்தப்படாமல் நடப்பில் வைக்கப்பட்ட தாகவும் ரூ.5,09,330 மட்டுமே என்பதும். எனவே, இது வ.நி.மசோதா ஒன்றாகப்பட்டது. மேலும் அவர் கூறியதாவது எதிர்வழக்கீட்டாளர் 95 லட்சத்திற்கான கடப்பாட்டினை ஏற்றுள்ளார். அதாவது 15.1.2022 தேதியிடப்பட்டது. இதில் மொத்த பற்றுறுதிச் சீட்டுகளின் மதிப்பு குறிப்பிடப் பட்டுள்ளது. மொத்த சேவை வரிக் குறைப்பு என்பதும் தெளிவாக்கப்பட்டது மற்றும் எதிர்வழக் கீட்டாளரால் இவை முதல் எதிர்வாதத்தில் உடன்பட்டவை. அவை முதல் எதிர்வாதத்தினை படித்தறிந்தனர். அதில் அறியப்படுவது 95 லட்சத்திற்கான கடப்பாடு என்பது எதிர்வழக்கீட்டாள ரால் ஏற்கப்பட்ட ஒன்று. இதில் இது பற்றிய விவரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண் எண் | சீட்டு எண் மற்றும் தேதி | பற்றுச் சீட்டின் தொகை |
|---|---|---|
| 1. | 8 – தேதியிட்ட 23.10.2020 | 85,26,902 |
| 2. | 9 – தேதியிட்ட 23.10.2020 | 87,351 |
| 3. | 22 – தேதியிட்ட 10.12.2020 | 92,58,605 |
| 4. | 23 – தேதியிட்ட 10.12.2020 | 11,74,708 |
| 5. | 25 – தேதியிட்ட 16.12.2020 | 1,16,950 |
| 6. | 36 – தேதியிட்ட 1.2.2021 | 20,03,375 |
| 7. | 37 – தேதியிட்ட 1.2.2021 | 3,58,188 |
| 8. | 38 – தேதியிட்ட 1.2.2021 | 84,715 |
| 9. | 41 – தேதியிட்ட 24.2.2021 | 8,230 |
| 10. | 42 – தேதியிட்ட 2.3.2021 | 1,35,81,746 |
| 11. | 43 – தேதியிட்ட 2.3.2021 | 35,091 |
| 12. | 44 – தேதியிட்ட 2.3.2021 | 1,45,253 |
| 13. | 45 – தேதியிட்ட 2.3.2021 | 5,541,902 |
| 14 | 47 – தேதியிட்ட 17.3.2021 | 37,06,808 |
| 15. | 1 – தேதியிட்ட 1.4.2021 | 70,082 |
| 16. | 2 – தேதியிட்ட 1.4.2021 | 1,53,119 |
| 17. | 3 – தேதியிட்ட 1.4.2021 | 8,66,372 |
| 18. | 4 – தேதியிட்ட 1.4.2021 | 17,83,135 |
| 19. | 6 – தேதியிட்ட 1.4.2021 | 80,78,340 |
| 20. | 7 – தேதியிட்ட 17.4.2021 | 21,93,193 |
| 21. | 8 – தேதியிட்ட 3.5.2021 | 6,53,862 |
| 22. | 9 – தேதியிட்ட 3.5.2021 | 59,068 |
| 23. | 10 – தேதியிட்ட 3.5.2021 | 9,982 |
| 24. | 11 – தேதியிட்ட 3.5.2021 | 4,26,619 |
| 25. | 12 – தேதியிட்ட 3.5.2021 | 5,72,324 |
| 26. | 16 – தேதியிட்ட 2.7.2021 | 6,50,955 |
| 27. | 17 – தேதியிட்ட 2.7.2021 | 25,549 |
| 28. | 18 – தேதியிட்ட 2.7.2021 | 3,65,902 |
| 29. | 21 – தேதியிட்ட 2.8.2021 | 12,93,278 |
| 30. | 22 – தேதியிட்ட 2.8.2021 | 68,831 |
| 31. | 23 – தேதியிட்ட 2.8.2021 | 41,099 |
| 32. | 24 – தேதியிட்ட 2.8.2021 | 4,24,645 |
| 33. | 25 – தேதியிட்ட 2.8.2021 | 43,71,310 |
| | மொத்தம் | 6,23,40,489 |
| | செலுத்தப்பட்ட தொகை | 5,23,65,665 |
| | பாக்கி தொகை | 99,74,824 |

மனுதாரரின் கோரிக்கையாவது 17.8.2020 தேதியிடப்பட்ட பணி பற்றிய ஆணை தொடர்பானது மட்டுமே. இதில் எதிர்வழக்கீட்டாளரின் வழக்காவது 30.12.2019 தேதியிட்ட பணி பற்றிய ஆணைப்படி மனுதாரர் மதுரை சித்திரகுளம் மேம்பாலமான NHAI திட்டப்படி 16.18 கி.மீ.க்கு அங்கு மேலும் கற்களை அனுப்புமாறு கோரப் பட்டிருந்தார் மற்றும் 17.8.2000 பணி பற்றிய ஆணையின்படி மனுதாரர் சாலை விரிவாக்கப் பணியினை செய்யுமாறு கோரப்பட்டிருந்தார். அப்பணி 11.26 கி.மீ. அகலம் பற்றியது. எதிர்வழக்கீட்டாளர் அவர்கள் எதிர்வாதத்தில் வாதிட்டதாவது. மனுதாரர் 2.5 கி.மீ. அளவுக்கு மட்டுமே. கல் அடுக்குகளை அமைக்க முடியும். அதாவது 16.18 கி.மீ. என்று கூறியது மற்றும் இந்தத் திட்டத்தை பாதியிலேயே இவர் கை விட்டுள்ளார். காரணமாக அவர்களது பணிபுரி வோரையும் இயந்திரக் கோளாறையும் கூறி யுள்ளார். மனுதாரர் வாதமாவது எதிர்வழக்கீட்டாளர் முன் வேலையாக மனுதாரருக்கு பணி வழங்காத காரணம் மனுதாரர் வாதமாவது, சீர்திருத்தப் பள்ளியினை அனுப்பிய பின்னரும் பற்றுச் சீட்டு 2.8.2021 தேதியிட்டதை பெற்ற பின்னரும் எதிர்வழக்கீட்டாளர் செலுத்துகை நிலைப்பாட்டை மனு அமைப்பு செய்துள்ளார். எது 15.1.2000 அன்று இது ஏற்கத்தக்கதல்ல. எதிர்வழக்கீட்டாள ரால் இது பற்றி சீட்டிற்கு எதிராகவும், மனுதாரரின் செலுத்தத்திற்கான கோரிக்கைக்க எதிராகவும், 15.01.2022 வரை மனுதாரருக்கு எந்த பதிலும் இல்லை. அது பற்றியும் அறிக்கை அல்ல அறிவிப்பு எதுவும் அவரால் எழுப்பப்பட்ட முறையீட்டுக்கு அல்லது தவறுகைக்கான அல்லது கழிக்கப்பட்ட தொகை பற்றி அதுவரை எந்தத் தகவலும் பெறப்படவில்லை.

அந்த மனுவில் கவனிக்கப்பட வேண்டிய தாவது, எதிர்வழக்கீட்டாளர், கூறியுள்ளதாவது அவர்களது 15.1.2022 தேதியிடப்பட்ட முதல் எதிர்வாதி உரையில் மனுதாரருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, பணிகளை குறித்தளித்தபோது, அவை ஏறுமாறான, வகையில் இருந்தது. எதிர் வழக்கீட்டாளர், ஒப்பந்த முடிவிற்கு கடப்பாடு டையவராக்கப்பட முடியாது. அதாவது ஒப்பந்த கடமைப் பொறுப்புகளை சரியான முறையில் பணி பற்றிய விளக்கங்களை அளிக்காத காரணத்தால் அவருக்கு ஒப்பந்த கடப்பாடுகள் ஏற்படுத்த முடியாத நிலை ஏற்கப்பட்டவாறு, மூன்றாம் தரப்பினரான ஒப்பந்தக்காரர் ''ஸ்டெம் உள் கட்டுமான அமைப்பு'' எதிர்வழக்கீட்டாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பணி ஆணை 21.1.2021 அன்று அளிக்கப்பட்டது. இதன் மதிப்பு 14,06,34,120. இதில் தெளிவாக்கப் படுவதாவது மூன்றாம் தரப்பினர் எதிர்வழக்கீட்டாள ரால் பணியமர்த்தப்பட்டவர். அதாவது பெரும் பாலும் வேறு பணிகளுக்காக இந்த திட்டத்தின் மனுதாரரும் பணியாற்றியுள்ளார். எதிர்வழக்கீட்டாளர், 30.5.2022 தேதியிடப்பட்ட கூடுதல் எதிர்வாது ரையில் அதாவது எதிர்வழக்கீட்டாளரால் மனுதார ருக்கு அனுப்பப்பட்டதாக கூறப்பட்டதில் எதிர் வழக்கீட்டாளர். இவை பற்றி வழக்கறிஞர்களிடம் தெரிவிக்கவில்லை. கடிதம் மூலமாக/வலைதளம் வழியாக தெரிவிக்கப்படவில்லை. இவர்களது கூடுதல் எதிர் வாதுரையல்லாது ஒரு பணிந்த ளிக்கப்பட்ட கடிதம் 15.1.2022 தேதியிடப் பட்டது. இதற்கு எதிர்வழக்கீட்டாளர் சில பிரச்சினை களை எழுப்பியுள்ளார். எதிர்வழக்கீட்டாளரால் அனுப்பப்பட்ட இவற்றிற்கான மெய்ப்பிப்பு எதுவும் இல்லை. அதாவது பற்றுச் சீட்டு அல்லது செலுத்தம் பற்றிய கோரிக்கை தொடர்பாக. 15.1.2022க்கு முற்பட்ட கழிவுகள் அல்லது முறையீடுகள் குறைகள் பற்றிய விவரங்கள். 16.8.2021 அன்று எதிர்வழக்கீட்டாளரால் ''கொடுபட நிலுவை எதுவும் இல்லை'' என்றும் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தத் திட்டத்தில் இருந்து விலகிறது தொடர்பாக. எனவே, மனுதாரர் இந்தத் திட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதன் அடிப்படையில் இருவரின் கலந்தாலோசனையும் உள்ளது. இவர்களி டையே நல்ல புரிந்துணர்வும் இருந்துள்ளது. இவர்கள் இத்திட்டத்தை பாதியில் கைவிட்டதாக அறியப்படவில்லை. அதாவது பின்னர் எதிர் வழக்கீட்டாளரால் கூறப்பட்டவாறு மனுதாரரால் செய்யப்பட்ட கோரிக்கை தொடர்பாக வழக்கறிஞர் கொண்டுள்ள முடிவாவது எதிர்வழக்கீட்டாளர் 99,74,825 ரூபாயை (தொண்ணூற்று ஒன்பது

லட்சத்து எழுபத்து நான்கு ஆயிரத்து எண்நூற்று இருபத்து ஐந்து ரூபாய் மட்டுமே) மனுதாரருக்கு செலுத்த வேண்டியுள்ளது. அத்துடனான கூட்டு வட்டியுடன் அதாவது மாதத் தவணைகளின்படி அதாவது இந்திய வருவாய் துறை வங்கியினால் அறிக்கை செய்யப்பட்ட வீதத்தின் மூன்று மடங்காக அதாவது MSMED 2806 சட்டத்தின் 15, 16ஆம் பிரிவுகளுக்கிணங்க."

3.மேல்முறையீட்டாளர் முதல் எதிர் வழக்கீட்டாளருக்கு ரூ.99,74,825 இனை வட்டியுடன் செலுத்தக் கேட்கப்பட்டுள்ளார். இந்த தீர்வை எதிர்த்து மேல்முறையீடு முன்னிடப் பட்டுள்ளது. நீ.பே.ம. (MD) எண் 26527/ 2022 தனி நீதிபதி 2.3.2023 தேதியிடப்பட்ட விரிவான ஆணையிட்டு நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்துள்ளார். இதனால் குறையுற்று இந்த நீதிப்பேராணை மேல் முறையீடு முன்னிடப்பட்டுள்ளது.

4. இதில் வழக்கறிஞர்கள் இரு தரப்பி லிருந்தும் பல வாதங்களை முன் வைத்துள்ளார். நாம் கருத்துக் கொண்டுள்ளதால், இந்த நீதிப் பேராணை மேல்முறையீடு இந்தக் குறுகிய காரணங்களின்பேரில் வகை செய்யப்படலாம் என்பது. அதாவது 2006 MSME சட்டத்தில் பிரிவுகள் 18 (1 முதல் 4) வரை அவை பின் வருமாறு படிக்கப்படுகிறது.

"18. நுண்ணிய மற்றும் சிறிய தொழில் நிறுவனம் பற்றிய சுட்டுகையும் அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவும் மன்றமும்.

(1) அவ்வப்போது செயற்பாட்டில் உள்ள சட்டம் எதிலும் எது எவ்வாறு இருந்தபோதிலும், பூசலின் தரப்பினர் எவரும், பிரிவு 17இன்படி கொடுபடவுள்ள தொகை எதுவாக இருப்பினும் அது பற்றிய சுட்டுகையை நுண்ணிய மற்றும் சிறிய தொழில் நிறுவனங்கள் மன்றத்திற்கு செய்யலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படியான ஒரு சுட்டுகையைப் பெற்றதன்பேரில், மன்றமானது, தானே முற்பட்ட பொதுவர் சமரச தீர்வினை ஏற்படுத்த முற்படும். அதாவது அந்த பூசல் பற்றிய பொருட்பாடு தொடர்பாக அல்லது வேறு நிறுவனம் அல்லது வேறு மாற்று பூசல் தீர்வு மையம். இத்தகைய சேவை செய்யாத சுட்டுகை செய்யும் அதாவது சமரச உடன்படிக்கை தீர்வுக்கான பேச்சு வார்த்தை நடத்தப்படுவ தற்காக மற்றும் 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன்பாட்டுச் சட்டத்தின் (26/1996) பிரிவுகள் 65(8) வகைமுறைகள் இவற்றிற்கு பொருத்துதல் வேண்டும். அதாவது எந்த பூசல் தொடர்பாக. அது இந்தச் சட்டத்தின் IIIஆம் பகுதியில் தொடங்கப்பட்ட சமரச உடன்பாட்டைப் போன்று.

(3) (2)ஆம் உட்பிரிவின்படி தொடங்கப்பட்ட சமரச தீர்வுக்கான நடவடிக்கை வெற்றி பெற முடிவாதிருக்கிறவிடத்து மற்றும் அது தரப்பினர் களிடையே எந்த ஏற்பாட்டையும் ஏற்படுத்தாது முடிவுறுத்தப்படுகிறவிடத்து அல்லது மன்ற மானது, தானே முற்பட்டு அந்த பூசலை விசாரிக்கும் அல்லது, அதனை வேறு நிறுவனத்திற்கு அல்லது மையத்திற்கு சுட்டுகை செய்யும். அதாவது மாற்றுப் பணி புரியும் பூசல் தீர்வுக்கு சமரச உடன்பாட்டிற்குச் சுட்டும். அதாவது 1996 சட்டப்படி (26/1996). இந்தப் பூசலை சட்டத்தின் (71ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள சுட்டுகையையொட்டி இந்த பொது உடன்படிக்கைக்கு சுட்டும்.

(4) அவ்வப்போது செயற்பாட்டில் உள்ள வேறு சட்டம் எனினும் என்ன அடங்கியிருந்த போதிலும் சிறிய தொழில் நிறுவனம் பற்றிய சுட்டுகையும், அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவும் மன்றத்திற்கு அல்லது மாற்று பணி புரியும் மையத்திற்கு சுட்டுகை செய்யும். அதாவது பொதுவராக அல்லது மன்றத்தவராகச் செயற்படும் அதிகார வரம்பிற்குள் வரும்போது, அதனை எடுத்துக் கொள்ளும். அதாவது பொருளை வழங்குபவர் இருப்பிடம் அமைந்துள்ள இடம் அவர்களது அதிகார வரம்பிற்கு வருவதாக இருந்தால் மட்டுமே இதனை ஏற்பார் மற்றும் வாங்குபவர் இந்தியாவில் எங்கு வேண்டு மானாலும் இருந்தபோதிலும்.

5. பிரிவு 18(3) தெளிவாக உரைப்பதாவது சமாதான சமரசப் பேச்சுகள் வெற்றியடையா திருக்குமானால், இது ஏற்பாடு செய்யப்படா தரப்பினர்களிடையே முடிவுறுத்தப்படுகிறபோது, இந்த பொருட்பாடானது, நடுவர் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும். மேல்முறையீட்டாள ருக்கு வழங்கப்பட்ட அழைப்பாணை நாங்கள் நன்கு கேட்டறிந்தோம். இதில் எங்கும் கூறப் படாதது அந்த பொருட்பாடானது பொதுவர் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்படுவதாக எங்கும் கூறப்படவில்லை. அதுவும் அந்த வழக்கறிஞராலேயே பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன்படிக்கைகள் சட்டத்தின் Vஆம் அத்தியாயம் தெளிவுபடுத்துவதாவது எவ்வாறு பொதுவர் தீர்ப்பின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்பது. இந்த வழக்கில் சொல்லப் பட்ட நடைமுறை ஏற்று நடத்தப்படவில்லை என்பது. இந்த குறுகிய அடிப்படையின் பேரில் நாங்கள் இடையீடு செய்ய வேண்டியுள்ளது. தனி நீதிபதியின் ஆணையும் நீதிப்பேராணை யின் தீர்வும் தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்த பொருட்பாடானது இரண்டாம் எதிர் வழக்கீட்டாளரின் வழக்கறிஞரின் கோப்புடன் சேர்க்கப்படுகிறது. இரு தரப்பினர்களும் இரண்டாம் எதிர் வழக்கீட்டாளர் முன்பு 7.7.2025 3 மணிக்கு முன்னிலையாக வேண்டியது. வழக்கறிஞர்கள் பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன் படிக்கைகள் சட்டத்தின் Vஆம் அத்தியாயத்தில் அளிக்கப்பட்டுள்ள நடைமுறைகளின்படி செயற் படுதல் தீர்ப்பு நடவடிக்கைகள் என முடிக்கப்படும் என்பது தெளிவாகிறது. இது சட்டத்திற்கிணங்கவும் இதன் 30 நாட்கால அளவிற்கு முடிக்கப்பட வேண்டும். நாங்கள் தெளிவுபடுத்துவதாவது நாங்கள் இந்த வழக்கைப் பற்றி அறியவில்லை. இரு தரப்பினரின் வாதங்களும் நடைபெறும்.

6. நீதிப்பேராணை மேல்முறையீடு இந்த வரையுரைகளின்படி அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகையின்றி. இதன் விளைவாக தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## தனிநபர் பயன்பாட்டுக்கு 4.5 லிட்டர் மது வைத்திருக்க அரசு விதிகளில் அனுமதி உயர்நீதிமன்றம்

தனிநபர் தனது சொந்த பயன்பாட்டுக்கு 4.5 லிட்டர் மது வைத்திருக்க தமிழக அரசின் விதிகள் அனுமதிப்பதாகக் கூறி, புதுச்சேரியிலிருந்து கொண்டு வரப்பட்ட 1 லிட்டர் 680 லி. மதுபானம் வைத்திருந்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.

புதுச்சேரி தமிழ்நாடு எல்லையில் உள்ள ஆல்பேட்டை சோதனைச் சாவடியில் தமிழக போலீஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டபோது அந்த வழியாக வந்த கடலூர் மாவட்டம், காட்டுமயிலூரைச் சேர்ந்த வல்லரச என்பவரின் வாகனத்தை சோதனை செய்தனர். அந்த வாகனத்தில் புதுச்சேரியிலிருந்து கொண்டு வரப்பட்ட இரு 750 மில்லி லிட்டர் மற்றும் ஒரு 180 மில்லி லிட்டர் அளவு கொண்ட மதுபாட்டில்கள் இருந்தன.

அந்த மது பாட்டில்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். மேலும், வல்லரசு மீது தமிழ்நாடு மது தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு கடலூர் விரைவு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கு ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வல்லரச மனுத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.நிர்மல்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், தனி நபர் பயன்பாட்டுக்கு ஒருவர் 4.5 லிட்டர் மது வைத்துக் கொள்ளலாம் என கடந்த 2017ஆம் ஆண்டு தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. எனவே, மனுதாரர் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்களை 4.5 லிட்டர் தனிநபர் சொந்த பயன்பாட்டுக்கு வைத்துக் கொள்ளலாம் என அரசு விதி உள்ளது. ஆனால், மனுதாரரிடம் கைப்பற்றப் பட்ட மதுவின் அளவோ 1,680 லிட்டர்தான் எனக் கூறி, மனுதாரர் மீதான வழக்கை ரத்து செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

**நன்றி: தினமணி 26.4.2026**

# 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 20/2017)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

The Tamil Nadu Local Authorities Entertainments Tax Act 2017
(Tamil Nadu Act No.20 of 2017)
(as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2017ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி விதிப்பதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்திய குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டச் சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்** :

(1) இந்தச் சட்டம் 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறிப்பிடப்படும் நாளன்று நடைமுறைக்கு வரும் மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறிப்பிடப்படலாம்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.

(1) “அனுமதித்தல்” என்பது, பார்வையாளராக அல்லது அரங்கத்தாரில் ஒருவராக அனுமதித்தல் மற்றும் பொழுதுபோக்கும் நோக்கத்திற்காக கேளிக்கையை அனுமதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

(2) “கேளிக்கை ஒன்றிற்கு அனுமதித்தல்” என்பது, கேளிக்கை நடைபெறும் எந்த ஓர் இடத்திற்குள் அனுமதித்தலை உள்ளடக்கும்.

(3) “பொழுதுபோக்கு” என்பது பொழுதுபோக்கு அரங்கம் அல்லது பொழுதுபோக்குப் பூங்கா அல்லது கேளிக்கை பூங்கா அல்லது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அது போன்றவற்றில், நபர்கள் அனுமதிக்கப்படுவதற்கு கட்டணம் செலுத்தக் கோரப்படும்.

(4) “அலைவாங்கி” என்பது தேசிய அல்லது பன்னாட்டு செயற்கைக்கோளின் ஒளிபரப்புகளை பார்வையாளர்கள் பெறுவதற்கு இயல செய்யும் தொலைக்காட்சி சமிக்கையைப் பெறகிற ஒரு கருவி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக எழுப்பப்பட்ட அல்லது நிறுவப்பட்ட கருவி எனப் பொருள்படும்.

(5) “கேபிள் தொலைக்காட்சி” என்பது (cable televison) என்பது, காணொளி நாடா (video cassette) அல்லது வட்டுகள் (disc) அல்லது இரண்டையும் பயன்படுத்தி பதிவு சாதனம் அல்லது ஒளிபரப்பு சாதனம் அல்லது அது போன்ற பிற கருவிகள் மூலம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட காணொளி நாடா அல்லது வட்டுகள் அல்லது இரண்டிலும் ஒளிபரப்பு அல்லது மறு ஒளிபரப்பு செய்யப்படும் திரைப்படங்கள், இயங்கு படங்கள் அல்லது படத்தொகுப்புகள் ஆகியவற்றை தொலைக்காட்சி இணைப்பு பெற்ற குடியிருப்புகள் அல்லது குடியிருப்பு அல்லாத இடங்களில் கேட்கவும், பார்க்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பு எனப் பொருள்படும்.

(6) ‘‘அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் சீட்டு’’ என்பது, கட்டணம் எதுவும் இல்லாமல் அல்லது அத்தகைய அனுமதித்தலுக்காக குறைந்த வீத கட்டணத்தில் கேளிக்கைக்கு அனுமதித்தலுக்கான ஒரு நுழைவுச் சீட்டு அல்லது ஒரு அனுமதிச் சீட்டு எனப் பொருள்படும்.

விளக்கம் : பிரிவு 18இன் கீழ் செலுத்துகை இல்லாமல் கேளிக்கை எதற்கும் அனுமதித்தல் என்பது கேளிக்கை அல்லது கேளிக்கை தொடர்பான கடமை எதனையும் செய்ய கேளிக்கை உரிமையாளரால் அனுமதிக்கப்பட்ட அல்லது இந்தச் சட்டத்தின்படியோ வேறு சட்டத்தன்படியோ கடமை எதனையும் செய்ய கேளிக்கை இடம் எதனுக்குள்ளும் அனுமதிக்கப்பட்ட நபர் எவரையும் உள்ளடக்காது.

(7) ‘‘நேரடி வீட்டுச் சேவை’’ என்பது கேபிள் இயக்குபவர் (cable operator) போன்ற இடையீட்டாளர் இல்லாமல் சந்தாதாரர்களுக்கு செயற்கைகோள் சமிக்கைகள் மூலம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சி, திரைப்படம் அல்லது பிற நிகழ்ச்சி எதனையும் ஒளிபரப்புதல் எனப் பொருள்படும்.

(8) ‘‘கேளிக்கை’’ என்பது குதிரைப்பந்தயம் அல்லது திரைப்படக் காட்சி நிகழ்ச்சிக்கு பணம் செலுத்துதல், பங்களிப்பு, சந்தா அல்லது எந்த வகையிலும் வசூலிக்கப்படும் நிறுவுதல் அல்லது இணைப்புக் கட்டணம் அல்லது ஏதேனும் பிறக் கட்டணங்கள் செலுத்துமாறு கோரப்படும் நபர்களுக்கு பவுலிங் (bowling), பில்லியர்ட்ஸ் (billiards), ஸ்நூக்கர் (snooker) அல்லது அது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் கேளிக்கைக் கூடம் அல்லது மனமகிழ் மன்றம் அல்லது நேரடி வீட்டுச் சேவை அல்லது இந்திய கிரிக்கெட் வாரியத்தின் கட்டுப்பாட்டில் நடத்தப்படும் இந்திய பிரிமீயர் லீக் (Indian Premier League) அல்லது சாம்பியன் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் பந்து போட்டிகள் (Champions League Twenty 20 Cricket Tournament) அல்லது நபர்கள் அல்லது நபர்களின் அமைப்பு எதனாலும் நடத்தப்படும் அனுமதிக் கட்டணம் கோரப்படும் பிற விளையாட்டுத் தொடர்கள் எனப் பொருள்படும்.

**விளக்கம்**: இந்தக் கூறின் மற்றும் இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளின் நோக்கங்களுக்காக, திரைப்படக் காட்சி நிகழ்ச்சி என்பது, காணொளி நாடா பதிவுகள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி அமைப்பு மூலம் வெளியிடப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சியையும் உள்ளடக்கும்.

(9) ‘‘அரசு’’ என்பது மாநில அரசு எனப் பொருள்படும்.

(10) ‘‘நிறுவனம்’’ என்பது, நிறுமம், சங்கம், குழுமம், அல்லது எந்தப் பெயரிலும் அழைக்கப்படும் நபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.

(11) ‘‘உள்ளாட்சி அதிகார அமைப்பு’’ என்பது.

(a) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட மாநகராட்சி.

(b) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/ 1920 அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சி அல்லது பேரூராட்சி அல்லது

(c) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சி எதனுடைய அதிகார வரம்பில் கேளிக்கைக்கு வகை செய்யப்பட்டுள்ளதோ அவை,

எனப் பொருள்படும்.

(12) ‘‘புதிய திரைப்படம்’’ என்பது. பத்தாண்டுகளுக்கு மேற்படாத திரைப்படம் எனப் பொருள்படும்.

விளக்கம்: இந்தக் கூறின் மற்றும் கூறு (13)இன் நோக்கங்களுக்காக பத்தாண்டுகள் கால அளவு, 1952ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின்படி (மையச் சட்டம் XXXVII/1952 ) முதல் முறையாக திரைப்படத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(13) பழைய திரைப்படம் என்பது, பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட திரைப்படம் எனப் பொருள்படும்.

(14) அனுமதித்தலுக்கான செலுத்துகை என்பத

(i) கேளிக்கை இடத்தின் ஒரு பகுதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபராலும் அதன் பின்னர் மற்றொரு பகுதிக்கு அனுமதிக்கப்படுவதற்கான வரி அல்லது கூடுதல் வரி உள்ளிட்ட செலுத்துகை;

(ii) கேளிக்கை நடைபெறும் இடத்திலுள்ள இருக்கைகள் அல்லது பிற இடவசதிக்கான எந்த ஒரு செலுத்துகை;

(iii) கேளிக்கையுடன் தொடர்புடைய எந்த நோக்கத்திற்காகவும் கேளிக்கைக்கு செலுத்துகை இருப்பினும் அதனுடன் கூடுதலாக மீண்டும் வருதல் அல்லது தொடர்ந்து வருகை தருதல் போன்ற நிபந்தனைகள் விதிக்கப்படும் நபர் ஒருவரால் செய்யப்படும் கேளிக்கை அனுமதிக்கான செலுத்துகை.

(iv) வரி விதிக்கப்படத்தக்க அன்பளிப்பாக கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டைப் பொறுத்து பிரிவு 4இன்படி செய்யப்பட்டுள்ளதாக கருதப்படும் செலுத்துகை,

ஆகியவற்றை உள்ளடக்கும். ஆனால் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் IX/1955) அவ்வப்போது உள்ளாட்சி அமைப்பின் ஆணையின் மூலம் திரைப்படக்காட்சி நிகழ்ச்சிக்கான உரிமம் பெற்றவர் வசூலிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற மற்றும் மேற்சொன்ன உரிமம் பெற்றவரால் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்காது.

**வரம்புரை**: "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, உள்ளாட்சி அமைப்பினால் செய்யப்பட்ட துணை விதிகள் அல்லது அரசால் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(16) உரிமையாளர் என்பது கேளிக்கை எதன் தொடர்பாக. 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் IX/1955) திரைப்படக்காட்சி நிகழ்ச்சி உரிமையாளர் அல்லது 1984ஆம் ஆண்டு தமிர்நாடு காணொளி நாடா பதிவுகள் (வீடியோ கேசட்) மற்றும் கேபிள் தொலைக்காட்சி அமைப்பு மூலம் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 7/1984) காணொளி நாடாப் பதிவு (வீடியோ கேசட்) மூலம் அல்லது கேபிள் தொலைக்காட்சி அமைப்பு மூலம் திரைப்படத்தைக் காட்டும் உரிமம் பெற்றவர் அல்லது பொழுதுபோக்கு எதற்கும் வகை செய்கிற நபர் எவரும் அல்லது நேரடி வீட்டுச் சேவைக்கு வகை செய்கிற நபர் எவரும் அல்லது இந்திய பிரிமீயர் லீக் (Indian Premier League) ஏற்பாடு செய்யும் எந்த நபரும் அல்லது இந்திய கிரிக்கெட் வாரியத்தின் கிரிக்கெட் போட்டிக்கு வகை செய்கிற நபர் எவரும் அல்லது நபர்களின் அமைப்பும் எனப் பொருள்படும் மற்றும் அரசு, உள்ளாட்சி அமைப்பு எதுவும் அல்லது அதன் மேலாண்மைக்கு பொறுப்புடைய நபர் எவரையும் உள்ளடக்கும்.

(17) "மனமகிழ் கூடம்" என்பது பவுலிங் (bowling), ஸ்நூக்கர் (snooker), பில்லியர்ட்ஸ் (billiards) அல்லது எந்தவொரு பெயரால் அழைக்கப்பட்டாலும் அதுபோன்ற விளையாட்டுகள் எந்த இடத்தில் நடைபெறுகிறதோ, பங்கு கொள்வதற்கு நபர் ஒருவர் தொகை செலுத்தக் கோரப்படும் இடம் எதுவும் எனப் பொருள்படும்.

(18) "வரி விதிக்கப்படத்தக்க அன்பளிப்பாக கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டு" என்பது அன்பளிப்பாக கொடுக்கப்படும் பத்து அல்லது கேளிக்கை இடத்தின் இருக்கை எண்ணிக்கையில் இரண்டு விழுக்காடு, இதில் எது குறைவானதோ அது,

(a) கேளிக்கை ஒவ்வொன்றுக்குமான ஒற்றை நுழைவுச் சீட்டு அல்லது அனுமதிச் சீட்டு அல்லது

(b) பருவம் ஒவ்வொன்றுக்குமான காலமுறை நுழைவுச் சீட்டு அல்லது அனுமதிச் சீட்டு எனப் பொருள்படும்.

**வரம்புரை** : கிரிக்கெட் விளையாட்டுத் தொடர் அல்லது பிற விளையாட்டுத் தொடர்களைப் பொறுத்தவரை, விளையாட்டு அரங்கத்தின் இருக்கை எண்ணிக்கையில் இரண்டு விழுக்காட்டிற்கு அதிகமாக வழங்கப்பட்ட அன்பளிப்பு நுழைவுச் சீட்டு எதுவும் வரி விதிக்கப்படத்தக்கதாகும்.

**விளக்கம்**: இந்தக் கூறின்படி வரி விதிக்கப்படத்தக்க அன்பளிப்பாக கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டை முடிவு செய்யும் நோக்கத்திற்காக, நுழைவுச் சீட்டின் பின்னம் (துண்டு) எதுவும் ஒரு நுழைவுச் சீட்டாகக் கருதப்படுதல் வேண்டும்.

(19) ‘‘தொலைக்காட்சி நிகழ்ச்சி’’ என்பது, குடியிருப்பிடம் அல்லது குடியிருப்பிடமல்லாத இடத்தில், தொலைக்காட்சி பெட்டிகளின் சந்தாதாரர்கள் மைய அமைப்பு முறை ஒன்றுடன் உலோக இழை இணைப்பு அல்லது கண்ணாடி இழை இணைப்பு மூலம் இணைக்கப்பட்ட கேபிள் ஒளிபரப்பு சமிக்கைகள் வழியாக படம் அல்லது இயங்கு படங்களின் அல்லது கேபிள் இணைக்கப்பட்ட அலைவாங்கி உதவியுடன் கூடிய தொலைக்காட்சி அல்லது கேபிள் தொலைக்காட்சி நிகழ்ச்சி எனப் பொருள்படும்.

(20) ‘‘ஆண்டு’’ என்பது, நிதியாண்டு எனப் பொருள்படும்.

**3. கேளிக்கைகள் மீதான வரி**: (1) பின்வரும் கேளிக்கைகள் மீது (இதன் பின்பு இதில் கேளிக்கைகள் மீதான வரி என்று பொருள்படும்) வரியானது, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பினால் விதிக்கப்படுதல் மற்றும் அதற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அவையாவன.

(a) திரையரங்குகளில் காட்டப்படும் திரைப்படக்காட்சி

(b) குதிரைப் பந்தயம்

(c) காணொளி நாடா மூலமாக அல்து கேபிள் தொலைக்காட்சி அமைப்பு மூலமாக தொலைக்காட்சியில் காட்டப்படும் படங்கள்

(d) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

(e) பொழுதுபோக்குகள்

(f) மனமகிழ் கூடம்

(g) நேரடி வீட்டுச் சேவை மூலம் அளிக்கப்படும் கேளிக்கைகள்

(h) கிரிக்கெட் விளையாட்டுத் தொடர் அல்லது பிற விளையாட்டுத் தொடர் எதுவும்;

[1][(2) திரைப்படக்காட்சிக்கான திரைப்படக் கேளிக்கை வரி பின்வரும் வீதங்களில் அமைதல் வேண்டும்.

(i) ஒவ்வொரு செலுத்துகைக்கும் அரங்கம் அமைந்துள்ள மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள், எல்லைகளுக்குள் அமைந்திருக்கிற திரையரங்குகள் மற்றும் மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளின் புறப்பரப்பு எல்லைகளுக்கு வெளியிலிருந்து ஐந்து கிலோ மீட்டருக்குள் உள்ள, நிரந்தர அல்லது பகுதி நிரந்தர திரையரங்குகளில் காட்டப்படும் திரைப்படம் எதற்குமான,

(A) புதிய திரைப்படத்திற்கான வரித்தொகை நீங்கலான அனுமதிக்கான மொத்த செலுத்துகையின் முப்பது விழுக்காடு வீதத்தில் மற்றும்

(B) புதிய திரைப்படத்திற்கான வரித் தொகை நீங்கலான அனுமதிக்கான மொத்த செலுத்துகையின் இருபது விழுக்காடு வீதத்தில் (ii) உட்கூறு (i)இல் குறிப்பிடப்படாத பிற பகுதிகளில், புதிய அல்லது பழைய படத்திற்கான வரித் தொகை உள்ளிட்ட அனுமதித்தலுக்கான மொத்தச் செலுத்துகையின் இருபது விழுக்காடு வீதத்தில்,

கணக்கிடப்படுதல் வேண்டும்.

விளக்கம் (i): இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, மாநகராட்சிகள் என்பது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் அதன்படியும் அமைத்துருவாக்கப்படும் பிற மாநகராட்சி எதுவும் எனப் பொருள்படும்.

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டத்தின் (5/2018) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

விளக்கம் (ii): இந்தக் கூறின் நோக்கங்களுக்காக "சிறப்புநிலை நகராட்சி" என்பது, 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) சிறப்புநிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்ட நகராட்சி எனப் பொருள்படும்.

(3) குதிரைப்பந்தயம் எதற்குமான அனுமதித்தலுக்கான செலுத்துகை ஒவ்வொன்றின் மீதான கேளிக்கை வரி பின்வரும் வீதங்களில் வசூலிக்கப்படுதல் வேண்டும். அவையாவன.

| | அத்தகைய செலுத்துகை (வரித்தொகை) உள்ளடங்கலான | வரிவீதம் |
|---|---|---|
| (i) | முப்பது காசுகளுக்கு மேல் இருந்தால், | ஒவ்வொரு செலுத்துகையின் நான்கில் ஒரு பங்கு. |
| (ii) | முப்பது காசுகளுக்கு மேல், ஆனால் ஒரு ரூபாய் ஐம்பது காசுக்கு மேற்படாதபோது | அத்தகைய செலுத்துகையின் மூன்றில் ஒரு பங்கு. |
| (iii) | ஒரு ரூபாய் ஐம்பது காசுக்கு மேல் இருந்தால், | அத்தகைய செலுத்துகையின் ஐந்தில் இரண்டு பங்கு. |

(4) காணொளி நாடாப் பதிவு (Video Cassette) மூலம் அல்லது கேபிள் தொலைக்காட்சி அமைப்பு மூலம் தொலைக்காட்சி திரையில் காட்டப்படும் திரைப்படத்தின் மீதான கேளிக்கைகள் வரி, அனுமதித்தலுக்கான ஒவ்வொரு செலுத்துகையின் மீதும் பின்வரும் வீதங்களில் இருக்கும். அவையாவன:

(a) பழைய திரைப்படத்திற்கான வரித் தொகை உள்ளிட்ட அனுமதிக்கலுக்கான மொத்தச் செலுத்துகையின் ஐம்பது விழுக்காடு வீதத்தில் மற்றும்

(b) புதிய திரைப்படத்திற்கான வரித் தொகை உள்ளிட்ட அனுமதித்தலுக்கான மொத்தச் செலுத்துகையின் அறுபது விழுக்காடு வீதத்தில், கணக்கிடப்படுதல் வேண்டும்.

(5) தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மீதான கேளிக்கைகள் வரி, பின்வரும் வீதங்களில், கணக்கிடப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (a) | சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி,சேலம், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளின் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படும் பிற மாநகராட்சி எதனின் எல்லைகளுக்குள் | மாதம் ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் |
| (b) | 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, (தமிழ்நாடு சட்டம் V/1920) அமைத்துருவாக்கப்பட்ட நகரராட்சிகளின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு மூன்றாயிரம் ரூபாய் |
| (c) | 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, (தமிழ்நாடு சட்டம் V/1920) அமைத்துருவாக்கப்பட்ட பேரூராட்சிகளின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ஐநூறு ரூபாய் |

(d) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994 அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சிகளின் எல்லைகளுக்குள்

(6) பொழுதுபோக்கு மீதான கேளிக்கைகள் வரியானது, பொழுதுபோக்கு நிகழ்ச்சி ஒன்றின் அனுமதித்தலுக்கான ஒவ்வொரு செலுத்தத்தின் மீதும் பத்து விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(7) மனமகிழ்கூடம் மீதான கேளிக்கைகள் வரியானது மனமகிழ்கூடத்திற்கான ஒவ்வொரு செலுத்தத்தின் மீதும் இருபது விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(8) செயற்கைகோள் சமிக்கைகள் மூலமாக காண்பிக்கப்படும் நிகழ்ச்சி, திரைப்படம் அல்லது ஒளிபரப்படும் பிற நிகழ்ச்சி, திரைப்படம் அல்லது ஒளிபரப்பப்படும் பிற நிகழ்ச்சி எதையும் காட்டும் நேரடி வீட்டுச் சேவை மீதான கேளிக்கைகள் வரியானது, நேரடி வீட்டுச் சேவை ஒன்றை வழங்குவதற்கு, சேவை வழங்குபவரால் பெறப்படும் சேவை வரி நீங்கலான மொத்தக் கட்டணத்தில் முப்பது விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(9) இந்திய பிரீமியர் லீக்கால் (Indian Premier League) நடத்தப்படும் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர் அல்லது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் நடத்தப்படும் சாம்பியன் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி (Champions League Twenty 20 cricket tournament) அல்லது எந்த ஒரு நபராலோ அல்லது நபர்களின் அமைப்பாலோ நடத்தப்படும் பிற விளையாட்டுத் தொடர் எதன் மீதுமான கேளிக்கைகள் வரியானது, வரித்தொகை உள்ளிட்ட அனுமதிக்கான மொத்த செலுத்தத்தில் இருபத்து ஐந்து விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**4. அன்பளிப்பாக கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டு மீதான வரி**: அன்பளிப்பாக கொடுக்கப்படும் வரி விதிக்கத்தக்க நுழைவுச் சீட்டு ஒவ்வொன்றின் மீதும் அது எந்த கேளிக்கைக்கான அனுமதிக்காக வழங்கப்பட்டதோ அந்த கேளிக்கைக்கு அன்பளிப்பாக கொடுக்கப்படும் வரி விதிக்கத்தக்க நுழைவுச் சீட்டு வைத்து இருப்பவர் இடம் பெறுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கான இருக்கையின் வகையின்படி முழுத் தொகையும் செலுத்தப்பட்டு இருப்பது போன்று அந்த கேளிக்கைக்கான அனுமதிக்க பொருந்தத்தக்க வீதத்தில் வரி விதிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்தப்பட்டு இருத்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம் மற்றும் 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 52/1961) நோக்கங்களுக்காகவும் அன்பளிப்பாக கொடுக்கப்படும் வரி விதிக்கத்தக்க நுழைவுச் சீட்டை வைத்திருப்பவர் பணம் செலுத்தியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு இருப்பவராக கருதப்படுவார்.

**5. குதிரைப் பந்தய நுழைவு கட்டண வரி மீதான கூடுதல் மேல்வரி**: (1) 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 52/1961) பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படி விதிக்கப்படும் கேளிக்கைகள் வரித்தொகை மற்றும் கேளிக்கைகள் வரி மீதான மேல்வரி உள்ளிட்ட ஒவ்வொரு செலுத்தத்தின் மீதும், குதிரைப் பந்தயம் எதற்குமான அனுமதிக்க கூடுதல் மேல்வரி ஒன்று விதிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(a) செலுத்தம் ஐந்து ரூபாய்க்கு மேற்படாதபோது ஐம்பது பைசா மற்றும்

(b) செலுத்தம் ஐந்து ரூபாய்க்கு மேற்படும்போது,

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், கூடுமானவரை, இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க கேளிக்கைகள் வரி தொடர்பாக அவை பொருந்துவது போன்று, இந்த பிரிவின்படி செலுத்தத்தக்க கூடுதல் மேல்வரி தொடர்பாகவும் பொருந்துதல் வேண்டும்.

**6. கேளிக்கைகளுக்கு அனுமதித்தல்**: (1) இந்தச் சட்டத்தில் பிறவாராக வகை செய்யப்பட்டாலன்றி கேளிக்கை இடம் எதனுக்குள்ளும் ஏதேனும் பணி அல்லது இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதன் வழியாகவோ அல்லது பிற சட்டம் எதன்வழியாகவோ விதிக்கப்பட்ட கடமை எதனையும் புரிய வேண்டிய நபர் அல்லாத பிற நபர் எவரும்.

(a) வகுத்துரைக்கப்படும் முறையிலும், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும், வழங்கப்படும் ஒரு நுழைவுச் சீட்டு தவிர; அல்லது

(b) சிறப்பு நிகழ்வுகளில், உள்ளாட்சி அமைப்பின் ஒப்புதலுடன் இயந்திரம் மூலமாக தானியங்கி முறையில் பதிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையைத் தவிர,

(2) உட்பிரிவு (1)இன் கூறு (b)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வு தவிர, கேளிக்கை ஒன்றின் உரிமையாளர் எவரும், குதிரைப் பந்தய அனுமதிக்கான செலுத்தத்தின் மீது கேளிக்கை வரி மற்றும் அத்தகைய முறையிலும் அவர் பிணையம் கொடுத்திருந்தால் அன்றி கேளிக்கை நடத்துதல் கூடாது.

(3) உட்பிரிவு (1)இல் அல்லது உட்பிரிவு (2)இல் உள்ள எதுவும் குதிரைப் பந்தய நுழைவு கட்டணத்தின் மீது கேளிக்கை வரி மற்றும் வரி மீதான கூடுதல் வரி செலுத்தத்திற்காக கேளிக்கை ஒன்றின் உரிமையாளரிடம் இருந்து பிணையம பெறுவதிலிருந்து உள்ளாட்சி அமைப்பைத் தடை செய்வதாகக் கருதப்படுதல் கூடாது.

**7. வரி செலுத்தும் முறை**: (1) கேளிக்கைகள் வரியானது பணம் செலுத்துவதன்பேரில் அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டு இருப்பதாகக் கருதப்படும் ஒவ்வொரு நபருக்கும் விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அனுமதி எண்ணிக்கையின்பேரில் கணக்கிடப்பட்டு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) கேளிக்கைகள் வரியானது உரிமையாளரிடம் இருந்துபெறப்பட வேண்டியதும் வசூலிக்கப்பட தக்கதும் ஆகும்.

(3) கேளிக்கை அனுமதி ஒன்றுக்காக நிறுவனம் எதற்கும் செலுத்தும் ஒரு சந்தாவாகவோ, நிறுவனத்தின் பங்களிப்பாகவோ, பருவ கால நுழைவுச் சிட்டு கேளிக்கைத் தொடருக்கான அனுமதிக்காகவோ அல்லது குறிப்பிட்ட சில கால அளவிற்கான கேளிக்கை எதற்குமோ அல்லது பகுதி அளவிலோ செலுத்தப்படுகிற போது கேளிக்கைகள் வரியானது ஒட்டு மொத்த தொகையின்மீது தொகை ஒன்றின் செலுத்தவோ, நுழைவுச் சிட்டு செலுத்தமோ பிற தனி சலுகைகள், உரிமை அல்லது கேளிக்கை அனுமதி தவிர்த்த பிற நோக்கங்களுக்கான செலுத்தம் வரி விதிப்பு செயல்பாட்டில் இல்லாத கால அளவின் போதும் கேளிக்கை ஒன்றுக்கான அனுமதிக்கானது என்று உள்ளாட்சி அமைப்பு கருதும்போது, எந்த கேளிக்கைகள் பொருத்து கேளிக்கை வரி செலுத்தத்தக்கதாக உள்ளாட்சி அமைப்பிற்கு தோன்றும் ஒரு தொகையை வரியாக விதித்தல் வேண்டும்.

**8. விவர அறிக்கைகள்**: (1) கேளிக்கை ஒன்றின் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் அனுமதிக்கான செலுத்தல்கள் மற்றும் அன்பளிப்பாக கொடுக்கப்படும் நுழைவுச் சீட்டுகள் பொறுத்து அல்லது நிகழ்விற்கேற்ப தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான அல்லது பொழுதுபோக்கு அல்லது மனமகிழ்க் கூடம் அல்லது நேரடி வீட்டுச் சேவைக்கான தொகை வசூலிப்பு எதுவாக இருப்பினும், அத்தகைய விவர அறிக்கைகளை, துணை விதிகளில் வகுத்துரைக்கப்படும் முறையிலும், கால அளவுக்குள்ளும், அதிகார அமைப்புகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி சமர்ப்பிக்கப்படும் விவர அறிக்கை எதுவும் சரியானதாகவும் முழுமையானதாகவும் இருக்கிறது என்று வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு மனநிறைவடையு மானால், அது அதன் அடிப்படையில் வரி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இன்படி கேளிக்கை உரிமையாளர் விவர அறிக்கை எதுவும் குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்காமலோ அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விவர அறிக்கை தவறானதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்புக்கு தோன்றுமானால், அது குறித்து அந்த அமைப்பு தேவை எனக் கருதும் விசாரணையைச் செய்த பின்பு, அந்த அதிகார அமைப்புக்கு நியாயம் என தோன்றும் விதத்தில் பிரிவு 3இன்படி வரி மதிப்பீடு செய்யலாம்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவின்கீழ் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர், உரிமையாளருக்கு அவர் சமர்ப்பித்த விவர அறிக்கை சரியானதாகவும் முழுமையானதாகவும் உள்ளது அல்லது விவர அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் நிலுவையில் இல்லை என்று நிரூபிப்பதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

**9. தவறுக்காக விடுபட்ட மதிப்பீடு மீது அனுமதிக்கான செலுத்துகை**: (1) காரணம் எதற்காகவும் கேளிக்கை எதற்கும் அனுமதிக்கான செலுத்தம் எதுவும் அல்லது வசூலிக்கப்பட்ட தொகை எதுவும் பிரிவு 3இன்படி வரி மதிப்பீட்டில் இருந்து விடுபட்டிருக்கிறபோது, பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, உட்பிரிவு (3)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் எந்த சமயத்திலும், தாம் தேவை எனக் கருதும் விசாரணையைச் செய்த பின்பு, அத்தகைய வரிக் கணிப்பிற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு பின்பு, பிரிவு 3இன்படி அத்தகைய செலுத்தத்தின் மீது கொடுக்கப்பட வேண்டிய வரியினை முழு கவனத்துடன் மதிப்பீடு செய்யலாம்.

(2) காரணம் எதற்காகவும் கேளிக்கை அனுமதிக்கான செலுத்தம் எதுவும், பிரிவு 3இன்படி எந்த வீதத்தில் அளிக்கப்பட வேண்டுமோ அந்த வீதத்தைவிட குறைவான ஒரு வீதத்தில் மதிப்பிடப்பட்டு இருக்கிறபோது, பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, உட்பிரிவு (3)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் எச்சமயத்திலும், பிரிவு 3இன்படி செய்யப்பட்ட அத்தகைய செலுத்தத்தின் மீது கொடுக்கப்பட வேண்டிய வரியினை தான் தேவை எனக் கருதும் விசாரணையைச் செய்த பின்பும், அத்தகைய மறுமதிப்பிட்டிற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு போதுமான வாய்ப்புகள் அளித்த பின்பும், கொடுக்கப்பட வேண்டிய வரியை மறுமதிப்பீடு செய்யலாம்.

(3) (1)ஆம் உட்பிரிவின்படியோ அல்லது நிகழ்வுக்கேற்ப, உட்பிரிவு (2)இன்படி வரிமதிப்பீடோ அல்லது மறு வரி மதிப்பீடோ செய்யும்போது, பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, உரிமையாளரால் வேண்டுமென்றே பொருண்மைகளை திரித்து அல்லது மறைத்து கூறியதன் காரணமாக, வரி விதிக்கப்படாமலோ அல்லது வரி விதிக்கத்தக்க வீதத்திற்கு குறைவான வீதத்தில் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது என்றோ மனநிறைவடைந்தால் உட்பிரிவு (1)இன்படியோ மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்ட வரிக்கு கூடுதலாக தண்டம் என்ற முறையில்

(a) விவர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்டதைவிடப் பத்து விழுக்காட்டிற்கும் குறைவாக இருக்குமானால், மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்ட வரியின் ஐம்பது விழுக்காடு.

(b) விவர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறுமதிப்பீடு செய்யப்பட்டதைவிட பத்து விழுக்காட்டிற்கு மேல் ஆனால் ஐம்பது விழுக்காட்டிற்கு மேற்படாமல், குறைவாக இருக்குமானால் மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரியின் நூறு விழுக்காடு

(c) விவர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறுமதிப்பீட செய்யப்பட்டதை விட ஐம்பது விழுக்காட்டிற்கு மேல், குறைவாக இருக்குமானால், நூற்று ஐம்பது விழுக்காடு, செலுத்துமாறு உரிமையாளரைப் பணிக்கலாம்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவின்படி, பாதிக்கப்பட்ட உரிமையாளருக்கு தண்டம் விதிப்பதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி, இந்த உட்பிரிவின்படி தண்டம் எதுவும் விதிக்கப்படுதல் கூடாது.

(4) உட்பிரிவு (1)இல் அல்லது உட்பிரிவு (2)இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், உட்பிரிவு (1)இன்படியோ அல்லது, நிகழ்வுக்கேற்ப, உட்பிரிவு (2)இன்படியோ, வரி மதிப்பீடு அல்லது மறு வரி மதிப்பீடு ஒன்றைச் செய்கையில் பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது நிதியாண்டு ஒன்றை அல்லது அதன் பகுதி எதனையும் பொறுத்து ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

(5) வரி மதிப்பீட்டு அசல் ஆணை எதுவும் மேல்முறையீடு ஒன்றின் பொருளாக இருந்தாலும் கூட உட்பிரிவு (1)இன்படியான அல்லது உட்பிரிவு (2)இன்படியான அதிகாரங்கள், பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பினால் செலுத்தப்படலாம்.

(6) இந்தப் பிரிவின் வரி மதிப்பீடு அல்லது மறு வரி மதிப்பீடு செய்வதற்கான கால வரம்பைக் கணக்கிடுகையில், வரி மதிப்பீடு அல்லது மறு வரி மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் உரிமையியல் நீதிமன்றத்தின் அல்லது பிற தகுதியுள்ள அதிகார அமைப்பின் ஆணைகளின்படி நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தால் அந்தக்கால அளவானது நீக்கப்படுதல் வேண்டும்.

**10. சட்டப்படியான பிரதிநிதிகளின் மதிப்பீடுகள்**: உரிமையாளர் ஒருவர் இறந்து விடுகிறபோது, அவருடைய நிறைவேற்றுபவர், நிர்வாகி அல்லது பிற சட்டமுறையிலான பிரிதிநிதி இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக உரிமையாளராகக் கருதப்படுவர் மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மேற்சொன்ன இறந்துபோன உரிமையாளரால் நடத்தப்பட்டு கேளிக்கைகளைப் பொறுத்து அவருக்கு பொருந்துதல் வேண்டும்.

**வரம்புரை**: அத்தகைய உரிமையாளர் எவராலும் செலுத்தப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட வரி, தண்டம் அல்லது பிற தொகை எதன் பொருட்டும் அவர் இறந்து போகாமல் இருந்தால், இந்தச் சட்டத்தின்படி அவரால் செலுத்தப்பட வேண்டியதாக இருந்திருக்கக் கூடிய வழி அல்லது தண்டம் அல்லது பிற தொகை எதனையும் பொறுத்து, நிறைவேற்றுபவர், நிர்வாகி அல்லது பிற சட்டமுறையிலான பிரதிநிதி தன் பொறுப்பில் உள்ள இறந்து போனவரின் சொத்திருப்புகளின் அளவிற்கு மட்டுமே பொறுப்பு உடையவர் ஆவார்.

**11. வரி விதிவிலக்கு அளிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான அதிகாரம்**: (1) அரசு, மன்றத்தின் தீர்மானத்தின் பேரில், அவர்கள் பொருத்தம் எனக் கருதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் மூலம், இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய கேளிக்கைகளுக்கான வரி பொறுப்பிலிருந்து கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகை எதற்கும் விதி விலக்களிக்கலாம்.

(2) அரசு, வகுத்துரைக்கப்படும் சூழ்நிலையில், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மன்றத்தின் தீர்மானத்தின்பேரில், ஆணையின் மூலம்.

(i) வரி செலுத்தும் பொறுப்புடைய உரிமையாளர் எவராலும் அல்லது உரிமையாளரின் வகையினர் எவராலும் அல்லது நபர் எவராலும் அல்லது நபர்களின் வகையினர் எவராலும் கேளிக்கை எதனையும் அல்லது கேளிக்கைகளின் வகை எதனையும் பொறுத்து இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வருங்கால அல்லது கடந்த கால கேளிக்கை வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்னிட்ட தேதியிலோ அல்லது பின்னிட்ட தேதியிலோ செலுத்த உத்தரவிடலாம் மற்றும்

(ii) அத்தகைய ஆணையை ரத்து செய்யலாம் அல்லது மாற்றி அமைக்கலாம்.

**12. வரி வசூல் முறை மற்றும் பிறகேட்புகளை விட நிலுவை வரிக்கு முன்னுரிமை** : (1) பிரிவு 3இன்படி வரி என்ற முறையில் கொடுக்கப்பட வேண்டிய தொகை எதுவும், பிற வசூலிக்கும் முறை எதற்கும் பாதகமின்றி.

(a) அது ஒரு நில வருவாய் நிலுவையைப் போல அல்லது

(b) குற்றவியல் நடுவர் எவரிடமும் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின்பேரில், அத்தகைய குற்றவியல் நடுவரால் விதிக்கப்பட்ட பணத்தண்டம் ஒன்றைப் போல, வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் வகைமுறைகளுக்கு ஊறின்றியும், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், உரிமையாளர் மீது மதிப்பிடப்பட்ட வரி

எதுவும் அல்லது அவரிடம் இருந்து இந்தச் சட்டத்தின்படி பெறப்பட வேண்டிய பிற தொகை எதுவும், நில வருவாய் பொறுத்த அரசின் கோருரிமைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன உரிமையாளரின் சொத்திற்கு எதிரான பிற கோரிக்கைகள் அனைத்தையும் விட முன்னுரிமை உடையது ஆகும்.

**13. வருவாய் வசூலிப்பு:** சட்டத்தின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பிற்கு உள்ள சிறப்பு அதிகாரம் (1) பிரிவு 8இன் உட்பிரிவு (1)இன்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய தொகை எதனையும் வசூல் செய்யும் நோக்கத்திற்காக 1864ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிப்புச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் II/1864) மாவட்ட ஆட்சியர் ஒருவருக்குள்ள அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (3)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு மேற்சொன்ன அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய தொகை எதனையும் வசூல் செய்யும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய தொகை எதற்காகவும் பற்றுகை செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்கா 1839ஆம் ஆண்டு தமிழ்நாடு வாடகை மற்றும் வருவாய் விற்பனைகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் VII/1839) ஆணையருக்குள்ள அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) 1839ஆம் ஆண்டு தமிழ்நாடு வாடகை மற்றும் வருவாய் விற்பனைகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் VII/1839) அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், மேற்சொன்ன அதிகார அமைப்பு உட்பிரிவு (2)இல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை செலுத்துகையில் அவருடைய மேல் அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு இருத்தல் வேண்டும்.

**14. தண்டத் தொகையை வசூலித்தல்:** இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க தண்டம் எதுவும், சேகரித்தல் மற்றும் வசூலித்தல் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின்படியான வரியாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி குற்றச் செயல் ஒன்றுக்கான அல்லது இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படாமல் இருக்கும். முழுத் தொகையும் பெறப்படுவதற்கான நடவடிக்கை எதுவும் தொடங்கப்படுவதற்கு ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**15. பிரிவினையான குடும்பம், கலைக்கப்பட்ட நிறுவனம் முதலானவற்றின் வரி செலுத்தும் பொறுப்பு:** உரிமையாளர் ஒருவர் ஓர் இந்து கூட்டுக் குடும்பமாகவோ, நிறுவனமாகவோ அல்லது பிற நபர்களின் கழகமாகவோ இருந்து அத்தகைய குடும்பம், நிறுவனங்கள் அல்லது கழகம் பிரிவினையோ அல்லது நிகழ்வுற்கேற்ப கலைக்கப்படவோ செய்யப்படுகிறபோது

(a) அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பின் தேதி வரையிலான கால அளவிற்கு அத்தகைய குடும்பம், நிறுவனம் அல்லது கழகத்தினால் இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படத்தக்க வரியானது, அத்தகைய பிரிவினையோ அல்லது கலைப்போ நிகழாது இருந்தாற்போன்று வரி விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் மற்றும்

(b) அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பு சமயத்தில், இந்து கூட்டுக் குடும்பத்தின், நிறுவனத்தின் அல்லது நபர்களின் கழகத்தின் ஓர் உறுப்பினராகவோ அல்லது கூட்டாளியாகவோ இருந்த ஒவ்வொரு நபரும் மற்றும் இறந்துபோன அத்தகைய நபர்கள் எவரின் சட்டமுறையிலான பிரதிநிதியும் அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பு இருந்தபோதிலும், அத்தகைய குடும்பம், நிறுவனம் அல்லது நபர்களின் கழகத்தினால் இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படத்தக்க வரி, தண்டம் அல்லது பிற தொகைகளை அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பிற்கு முன்னரோ அல்லது பின்னரோ மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் அத்தகைய செலுத்தத்திற்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பு உடையவர் ஆவார்.

**16. காலதாமதமான செலுத்தம் மீதான வட்டி:** மதிப்பிடப்பட்ட வரி அல்லது அதன் தவணை எதனையும் உரிமையாளர் செலுத்தாமல் இருந்தால் அல்லது எவரிடமிருந்து வரி விதிப்பு அறிவிப்பில்

குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் உரிய வரி பெறப்பட வேண்டுமோ, அந்த உரிமையாளர் அல்லது அத்தகைய வரி செலுத்தத்திற்காக குறிப்பிடப்பட்ட

**வரம்புரை** : நூறு ரூபாய்க்கு குறையாமல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய வரி எதற்கும், வரி விதிப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவுற்ற பின்னர் ஒரு மாத கால அளவிற்கு வட்டி விதித்தல் கூடாது.

மேலும் வரம்புரை : இந்தப் பிரிவின்படி மதிப்பீட்டு ஆணை எதற்கும் எதிரான மேல்முறையீடு ஒன்றை செய்து இருந்த உரிமையாளர் அல்லது நபர் ஒருவர் இந்தப் பிரிவின்படி செலுத்தப்பட வேண்டிய நபர் மேல்முறையீட்டில் பிரச்சினைத் தொகையை பொறுத்து மேல்முறையீடு முடிவு செய்யப்படுகின்ற வரையில் தள்ளி வைக்கப்பட வேண்டும் மற்றும் அந்த மேல்முறையீட்டின் பொருளாக இருந்த அத்தகைய தொகையில் மேல்முறையீட்டின்பேரில் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணைக்கு இணங்க நிலுவையில் இருக்கின்ற தொகையின்பேரில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**17. ஆய்வு:** (1) இதன் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளால் ஆய்வு செய்ய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் பின்பற்றப்படுகிறதா என்பதைக் காண்கின்ற நோக்கத்திற்காக கேளிக்கை நடைபெறுகின்ற போது கேளிக்கை இடம் எதிலும் மற்றும் கேளிக்கை இடமாக சாதாரணமாக பயன்படுத்தப்பட்ட இடம் எதிலும் நியாயமான நேரம் எதிலும் நுழையலாம்.

(வரம்புரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முன் அனுமதியின்றி ஆய்வு அலுவலர் கேளிக்கை நடைபெறும் இடம் எதிலும் நுழைதல் கூடாது.

(2) கேளிக்கை இடம் ஒன்றின் உரிமையாளர் அல்லது சொந்தக்காரர் அல்லது கேளிக்கை இடமாக சாதாரணமாக பயன்படுத்தப்பட்ட இடம் எதனையும்

பொறுப்பில் கொண்டுள்ள நபர் எவரும் உட்பிரிவு (1)இன்படி அவரின் கடமைகளை நிறைவேற்றும்போது ஆய்வு அலுவலருக்கத் தேவையான உதவி அனைத்தையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஆய்வு அலுவலர் நுழைவதைத் தடுக்கின்ற அல்லது தடங்கல் செய்கின்ற நபர் எவரும், அப்போதைக்கு செல்லாற்றலில் உள்ள சட்டம் எதனின்படியும் எந்தத் தண்டனைக்கு அவர் பொறுப்பு உடையவராக இருக்கிறாரோ அந்தத் தண்டனை எதற்கு, கூடுதலாக ஐநூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம் இந்தப் பிரிவின் மற்றும் பிரிவு 21இன் நோக்கங்களுக்காக, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்பான கேளிக்கை இடம் என்பது அத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்த இடமாகப் பொருள் கொள்ளப்படும்.

**18. அனுமதித்தலுக்கான செலுத்துகையிலிருந்து விலக்களிப்பு** : பிரிவு 17இல் குறிப்பிடப்பட்ட அலுவலர் இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ அல்லது பிற சட்டம் எதனாலோ அவர் மீது விதிக்கப்பட்ட கடமையை ஒட்டி கேளிக்கை இடம் எதிலும் நுழையும் பிற அலுவலர் எவரும் கேளிக்கைக்கு அனுமதிக்கான தொகை செலுத்துவதற்கு கோரப்படுதல் கூடாது.

**19. நுழைதல், சோதனை செய்தல் மற்றும் கைப்பற்றுதலுக்கான அதிகாரம்**: (1) இந்தச் சட்டப் பிரிவுகளின்கீழ் அல்லது இதன்படி உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட துணை விதிகளின் வகைமுறைகளுக்கு முரணாக உள்ளதாக ஐயம் கொள்ளுவதற்கு போதிய காரணம் இரப்பதாக கருதும் உள்ளாட்சி அமைப்பினால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவராலும் புத்தகங்கள், பதிவுருக்கள், கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சீட்டுகள் மற்றும் அதனுடைய பாகம் அல்லது கேளிக்கை ஒன்றின்

உரிமையாளரால் வைத்து வரப்பட்டு அல்லது வைத்து வரப்படும் அதனுடன் தொடர்புடைய பிற பொருட்கள் எதனையும் எழுத்து மூலமாக காரணத்தை பதிவு செய்த பின்னர், வளாகங்கள் எதிலும் நியாயமான நேரங்களின் நுழைந்து கைப்பற்றலாம் மற்றும் அத்தகைய புத்தகங்கள், பதிவுருக்கள், கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சீட்டுகள் மற்றும் அதன் பகுதிகள் அல்லது அதனுடன் தொடர்புடைய பிற பொருட்கள் எதனையும் உரிமையாளர் அல்லது வளாகங்களைப் பொறுப்பில் கொண்டுள்ள நபருக்கு, அதன் பற்றுகை குறித்த பற்றுச் சீட்டு வழங்குதல் வேண்டும். அத்தகைய அலுவலர் புத்தகங்கள், பதிவுருக்கள், கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், சீட்டுகள் மற்றும் அதன் பாகங்கள் அல்லது அவ்வாறு பற்றுகை செய்யப்பட்ட பிற பொருட்கள் எதனையும் புலனாய்வு நோக்கத்திற்குத் தேவையான காலம் வரை மட்டுமே வைத்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய அலுவலர் எவரையும், நுழைய, சோதனையிட அல்லது கைப்பற்றுகை செய்ய தடுக்கிற அல்லது தடங்கல் செய்கிற நபர் எவரும், அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதன்படியும் எந்தத் தண்டனைக்கு அவர் பொறுப்பு உடையவராக இருக்கிறாரோ அந்தத் தண்டனை எதற்கும் கூடுதலாக ஐநூறு ரூபாய் நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**20. சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பவும் ஆவணத்தை முன்னிடக் கோரவும் அதிகாரம்:** (1) இந்தச் சட்டத்தின்படி வரி விதிப்பதற்கு தகுதி உள்ள அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எதுவும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக 1908ஆம் ஆண்டு உரிமையியல் தொகுப்புச் சட்டத்தினால் (மத்திய சட்டம் V/1908) நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் கெண்டிருக்கும்.

(a) நபர் எவரையும் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்புதல் மற்றும் கட்டாயப் படுத்துதல் மற்றும் ஆணை மொழி அல்லது உறுதியுரை மீது அவரை விசாரித்தல்.

(b) ஆவணம் எதனையும் முன்னிலைப்படுத்துமாறு வற்புறுத்துதல்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பு, இந்தச் சட்டத்தின்படி வரி மதிப்பீடு செய்யவும், விதிக்கும் மற்றும் வசூலிக்கும் நோக்கத்திற்காக தகவல், விவரங்கள், பதிவுருக்கள் ஆகிய அனைத்தையும் நபர் எவரிடமிருந்து கோருவதற்கு அதிகாரம் உடையதாகும்.

**21. கேளிக்கை இடம் ஒன்றின் மேலாளர் அல்லது பொறுப்பாளர் ஆகியோர் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பின் முன்பு முன்னிலையாதல்:** வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு எதன் முன்பும் முன்னிலையாக வேண்டும் எனக் கருதுகிற நபர் எவரும் மற்றும் மேலாளராக செயல்படுவர் அல்லது கேளிக்கை இடம் எதனையும் பொறுப்பில் கொண்டு செயல்படுகிற நபர் எவரும், கேளிக்கை இடம் எதனின் உரிமையாளரால், கூட்டாளியால் அல்லது கேளிக்கை அனுமதி கொண்டிருப்பவரால், வகுத்துரைக்கப்படும் படிவத்திலும், முறையிலும் உரியவாறு அதிகாரம் அளிக்கப்படுல் வேண்டும்.

**22. வரியை அடுத்த ரூபாய்க்கு முழுமையாக்குதல்** : வரி, வட்டி, தண்டம், பணத்தண்டம் அல்லது செலுத்தப்பட வேண்டிய பிற தொகை எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி திருப்பிக் கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்பட வேண்டிய பிற தொகை எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும் மற்றும் இந்த நோக்கத்திற்காக அத்தகைய தொகை, ரூபாயின் பகுதியான காசாக இருக்கும்போது அத்தகைய பகுதி ஐம்பது காசாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்குமானால் அது ஒரு ரூபாய்க்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பகுதி ஐம்பது காசுக்கு குறைவாக இருக்குமானால், விட்டு விடப்படுதல் வேண்டும்.

**23. தண்டங்கள்:** (1) (a) கேளிக்கை இடம் எதனின் உரிமையாளர் அல்லது கேளிக்கை இடம் எதிலும் அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் எவரும், பிரிவு 6இன் வகைமுறைகளுக்கு முரணாக கேளிக்கை இடம் எதிலும் நபர் எவரையும் அனுமதித்தால் அல்லது

(b) கேளிக்கை எதனின் உரிமையாளர்

(i) இந்தச் சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய வரியை மோசடியாக ஏய்ப்பாரானால் அல்லது

(ii) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறுவாரானால்

(c) கேளிக்கை இடத்தின் உரிமையாளர் அல்லது அவரால் பணியமர்த்தப்பட்ட நபர் எவரும், 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படியும் (தமிழ்நாடு சட்டம் IX/1955) அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியும் உரிமம் வழங்கும் அதிகாரியால் வகுத்துரைக்கப்பட்ட தொகைக்கும் அதிகமாக அனுமதி தொகை வசூலிப்பாரானால்,

குற்றவியல் நடுவரால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன்பேரில்

(i) கூறு (a)இன்படி அல்லது கூறு (b)இன் உட்கூறு (ii)இல் அல்லது (c)கூறின் கீழ்வரும் அத்தகைய குற்றச் செயல் ஒவ்வொன்றையும் பொறுத்து ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படத்தக்க பணத் தண்டத்திற்க உள்ளாதல் வேண்டும்.

(ii) கூறு (b)இன் உட்கூறு (i)இன் கீழ் வரும் அத்தகைய குற்றச்செயல் ஒன்றைப் பொறுத்து, ஓராண்டு கால அளவு வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறை தண்டனை வகைகள் ஏதொன்றையும் மற்றும் பணத் தண்டமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தில் (மையச் சட்டம் 2/1973) என்ன அடங்கியிருந்த போதிலும், உட்பிரிவு (1)இன் கூறு (b)இன் உட்கூறு (1)இன் கீழ்வரும் குற்றச் செயல் கைது செய்வதற்கு உரியதாகும்.

(3) உட்பிரிவு (1)இன் கூறு (b)இன் உட்கூறு (1)இன் கீழ் வரும் குற்றச்செயல் ஒன்றைப் பொறுத்து உள்ளாட்சி அமைப்பால் பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் எழுத்து வடிவில் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் அன்றி, நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

(4) நபர் எவரும் நுழைவுச் சீட்டு அல்லது அனுமதிச் சீட்டு இல்லாமல் கேளிக்கை இடம் எதிலும் காணப்படுகிறபோது, கேளிக்கை இடத்தின் உரிமையாளர் அல்லது பணிக்கு அமர்த்தப்பட்ட நபருக்கு தெரியாமல் அல்லது அவரின் மறைமுக ஆதரவு இல்லாமல் அந்த நபர் அனுமதிச் சீட்டு இல்லாமல் நுழைந்திருக்கிறார் என்று, உரிமையாளர் அல்லது அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் நிரூபித்தாலன்றி, பிரிவு 6இன் வகைமுறைகளுக்கு முரணாக அந்த நபர் அனுமதிக்கப்பட்டதாகக் கருதப்படுவார்.

**24. நுழைவுச் சீட்டு அல்லது அனுமதிச் சீட்டு இல்லாமைக்கான தண்டம்**: கேளிக்கை இடம் எதிலும், காணப்படும் நபர் எவரும் உரிமையாளர் அல்லது அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் எவருக்கும் தெரிந்தோ மறைமுக ஆதரவுடனோ அத்தகைய இடத்தில் அவர் நுழைந்தார் என்று அவர் நிரூபித்தால் அன்றி, குற்றவியல் நடுவரால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன்பேரில், நூறு ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டத்திற்கு உள்ளாவார்.

**25. குற்றம் செய்ய உடந்தையாக இருத்தலுக்கான தண்டம்**: இந்தச் சட்டத்தின்படியாக குற்றச் செயல் எதனையும் செய்வதற்கு உடந்தையாய் இருக்கிற எவரும் அந்தக் குற்றச் செயலுக்காக வகை செய்யப்பட்டுள்ள அதே தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**26. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்** : (1) இந்தச் சட்டத்தின்படி குற்றச் செயல் ஒன்று. நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருக்கும் போது, அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்த நிறுமனத்தின் அலுவலை நடத்தி வருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக்

கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும் அதோடு, அந்த நிறுமமும், அந்த குற்றச் செயலைச் செய்ததாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே, எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**வரம்புரை**: அந்தக் குற்றச் செயலானது, நமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றச் செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக அத்தகைய நபர் நிரூபிப்பாரானால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறாக இருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல இருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரின் சம்மதத்துடனோ மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவரது கவனக் குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று நிரூபிக்கப்படுகிறபோது அந்த இயக்குநர், மேலாளர், குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதலும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

விளக்கம் இப்பிரிவின் நோக்கங்களுக்காக

(ய) நிறுமம் என்பது, கூட்டு நிறுமம் எனப் பொருள்படும் மற்றம் ஒரு நிறுவனத்தை அல்லது தனி நபர்களின் பிற கழகத்தை உள்ளடக்கும் மற்றும்

இயக்குநர் என்பது தொடர்புடைய நிறுவனம் என்பது நிறுவனத்தில் உள்ள கூட்டாளி எனப் பொருள்படும்.

சங்கம், அறக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது சங்கத்தின் அறக்கட்டளையின் அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி சங்கத்தின் அறக்கட்டளையின் அல்லது நிகழ்விற்கேற்ப பிற கழகத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் எனப் பொருள்படும்.

27. குற்றங்களை இணக்கமாக தீர்த்துக் கொள்வதற்கான அதிகாரம்: (1) இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு எதிரான குற்றச் செயல் ஒன்றை, செய்துள்ள அல்லது செய்திருப்பதாக கருதப்படுகிற எவர் ஒருவரிடமிருந்தும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு தண்டத் தொகை எதனையும் பெறலாம்.

(a) இந்தச் சட்டத்தின்படி வரி ஏய்ப்பு குற்றத்தை செய்கிறபோது அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய வரிக்கு கூடுதலாக ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு அல்லது செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையின் மூன்று மடங்கு தொகை இதில் எது அதிகமோ அது மற்றும்

(b) பிற நிகழ்வுகளில், ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை, குற்றச் செயலை இணைக்காமல் தீர்த்துக் கொள்ளுவதற்கான வழிவகைகள் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு ஏற்றுக் கொள்ளலாம்.

**28. பதிவுருவைப் பார்த்தவுடன் தோன்றும் பிழை எதனையும் திருத்தி அமைப்பதற்கான அதிகாரம்** : (1) இந்தச் சட்டத்தின்படி வரி மதிப்பீடு செய்வதற்கு தகுதி உள்ள அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எதுவும் பதிவுருவை பார்த்த மாத்திரத்திலேயே தோன்றும் பிழை எதனையும் எந்த நேரத்திலும் அதனால் ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் திருத்தி அமைக்கலாம்.

வரம்புரை : அத்தகைய திருத்தி அமைத்தல் எதுவும், அத்தயை அதிகார அமைப்பு, உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தான்றியும் கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பு

அவருக்கு அளிக்கப்பட்டாலன்றியும், வரி விதிப்பு அல்லது தண்டனை எதனையும் அதிகரித்தல் கூடாது.

(2) அத்தகைய திருத்தியமைத்தலானது, வரி விதிப்பை, அல்லது தண்டத்தை குறைக்கும் விளைவைக் கொண்டதாக இருக்கும்போது இந்தச் சட்டத்தின்படி வரிவிதிப்பதற்கு தகுதியுள்ள அதிகார அமைப்பு உரிமையாளருக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையை திருப்பி கொடுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய திருத்தி அமைத்தல் எதுவும் வரி மதிப்பீட்டை அல்லது தண்டத்தை அதிகரிக்கும் விளைவைக் கொண்டதாக இருக்கிறபோது இந்தச் சட்டத்தின்படி வரி விதிப்பு செய்வதற்கான தகுதி வாய்ந்த அதிகார அமைப்பா கேளிக்கை இடத்தின் உரிமையாளருக்கு வரி விதிப்பதற்கான அல்லது தண்டம் விதிப்பதற்கான திருத்திய அறிவிப்பை வழங்குதல் வேண்டும் அதன்பேரில் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகளானது முதல் நிகழ்வில் அத்தகைய அறிவிப்பானது வழங்கப்பட்டது போன்றே பொருந்துதல் வேண்டும்.

**29. மேல்முறையீடு:** வரி (தண்டம், கட்டணம் மற்றும் வட்டி உள்ளடங்கலாக) செலுத்துவது தொடர்பான உள்ளாட்சி அமைப்பின் ஆணை அல்லது முடிவினால் குறையுற்ற கேளிக்கை இடத்தின் உரிமையாளர் அல்லது நபர் எவரும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய காலத்திற்குள்

(i) மாநகராட்சிகளின் ஆணையினால் அல்லது முடிவினால் அவர் குறையுற்று இருப்பாரானால் வரி மேல்முறையிட்டுத் தீர்ப்பாயத்திற்கு

(ii) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையினால் அல்லது முடிவினால் குறையுற்று இருப்பாரானால் வரிமேல்முறையீட்டுக் குழுவிற்கு அல்லது

(ii) அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையினால் அல்லது முடிவினால் குறையுற்று இருப்பாரானால் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) பிரிவு 83இன்படி நியமிக்கப்பட்ட நிருவாக அதிகார அமைப்பிற்கு.

மேல்முறையீடு செய்யலாம்.

**30. பொதுப் பணியாளர்களாகக் கருதப்படுதல்:** இந்தச் சட்டத்தின்படி செயற்பணிகளை ஆற்றுகின்ற அனைத்து நபர்களும் இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV1860) பிரிவு 21இன் பொருளின்படி பொதுப் பணியாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**31. நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி அல்லது துணை விதிகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது நல்லெண்ணத்தில் செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் இந்தச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவுமோ தொடரப்படுதல் கூடாது.

**32. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்:** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயல்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசானது பொதுவான அல்லது சிறப்பு ஆணையைத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதன் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, கூறப்பட்ட இடர்ப்பாட்டினை நீக்கும் நோக்கத்திற்குத் தேவையான அல்லது உகந்த வகைமுறைகளை செய்யலாம்.

**வரம்புரை** : அத்தகைய ஆணையானது இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு கால அளவு முடிவடைந்த பின்பு செய்யப்படுதல் கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

**33. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்:** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதையும் நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு அரசிதழில் அறிக்கையின் வாயிலாக விதிகளை செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். அந்த விதிகள் குறிப்பிட்ட தேதியில் நடைமுறைக்கு வருவதாகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தாலன்றி அந்த விதிகள் அவ்வாறு வெளியிடப்பட்ட அதே தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்ட தேதியில அவைகள் நடைமுறைக்கு வருவதாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி அவைகள் வெளியிடப்பட்ட அதே தேதியில்தான் நடைமுறைக்கு வரும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது இயற்றப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றமானது அத்தகைய விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றமானது விதி அல்லது அறிவிக்கையை இயற்றுதலோ அல்லது பிறப்பித்தலோ கூடாது என முடிவு செய்யுமானால் அதன் பிற்ற அந்த விதி அல்லது அந்த அறிவிக்கையானது அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது செல்திறம் இல்லாது போகும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**34. துணை விதிகளை செய்வதற்கான அதிகாரம்:** (1) உள்ளாட்சி அதிகார அமைப்பானது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்க செயல் வடிவம் அளிக்கும் நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு முரணாக இல்லாத துணை விதிகளை இயற்றலாம்.

(2) குறிப்பாகவும் முன்னர் உள்ள பொதுவான அதிகாரத்திற்கு ஊறின்றியும் அத்தகைய துணை விதிகளானது.

(a) அனுமதிக்கான நுழைவுச் சீட்டு மற்றும் அதன் மீதான வரி கணக்கிடப்படுதல் கணக்கிடப்படும் வரி, மற்றும் கேளிக்கை இடத்தின் ஒரு பகுதியிலிருந்து பிற இடத்திற்கு மாறுதலுக்கு செலுத்த வேண்டிய வரிகளுக்கான மற்றும் இருக்கைகளுக்காக அல்லது பிற தங்கம் வசதிகளுக்காக பணம் செலுத்துவதற்காக.

(b) தடுப்புகளை கட்டுப்பாடு செய்ய அல்லது இயந்திர சூட்சமங்களை பயன்படுத்துவதை (அதே தடுப்புகள் அல்லது இயந்திர சூட்சமங்கள் வேறு தொகை செலுத்தத்திற்கு பயன்படுத்துவதை தடுத்தல் உள்ளிட்ட) மற்றும் தடுப்புகள் அல்லது இயந்திர சூட்சமங்கள் மூலமாக அனுமதி குறித்த பதிவு ஆவணங்களை உரியவாறு பாதுகாப்பதற்காக.

(c) அனுமதியை ஆய்வு செய்வதாக, கேளிக்கை தொழில் உரிமையாளர் கணக்குகளை பேணி வருவதற்காக மற்றும் விவர அறிக்கைகளை அளிப்பதற்காக அளிப்பதற்காக உரிமையாளர் கணக்குகளை பேணி வருவதற்காக மற்றும் விவர அறிக்கைகளை அளிப்பதற்காக.

(d) அகேளிக்கை விவர செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதற்காகவோ அல்லது செலுத்திய பணபத்தை திரும்ப கோருவதற்காகவோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி விண்ணப்பம் தாக்கல் செய்வதற்காக மற்றும் முடிவு செய்வதற்காக.

(e) இந்தச் சட்டத்தின்படி கேளிக்கைகள் வரியை வசூல் செய்வதற்காக மற்றும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பால் அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக.

(f) உள்ளாட்சி அதிகார அமைப்பின் அதிகார எல்லைக்குள் அல்லது அத்தகைய பரப்பிடத்தின் பகுதி எதிலும், பரப்பிடத்தில் கேளிக்கை வரியை வசூல் செய்வதற்கு நபர் எவருக்கும் அதிகாரம் அளிப்பதற்காக மற்றும் அத்தகைய வசூல் தொடர்பாக உள்ளாட்சி அதிகார அமைப்பின் அலுவலர்களால் அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக.

(g) கேளிக்கை இடம் எதிலும் கடமை எதையும் ஆற்றும் நபர்களை அனுமதித்தலுக்காக அல்லது கேளிக்கை எதுவும் தொடர்பாக அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது பிற சட்டம் எதனாலும் அவர்களுக்கு சுமத்தப்பட்ட கடமை எதற்காகவும் கேளிக்கைகளின் உரிமையாளர்களால் அனுமதி வழங்குவதற்காக.

(h) இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகள் தொடர்பான மேல்முறையீடுகளுக்காக, அத்தகைய மேல்முறையீடுகள் எந்தக் காலத்திற்குள் செய்யப்படுதல் வேண்டுமோ அந்தக் காலத்திற்காக மற்றும் அத்தகைய மேல்முறையீடுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களுக்காக வகை செய்யலாம்.

**நன்றி: தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## நீதிமன்றம் முன் ஜாமீனை மறுக்கலாம்; குற்றவாளியை சரணடைய உத்தரவிட முடியாது

ஒரு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு முன் ஜாமீனை அளிக்க மறுக்க முடியும். ஆனால், விசாரணை நீதிமன்றத்தின் முன் சரணடையுமாறு அவருக்கு உத்தரவிட நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்று உச்சநீதிமன்றம் கூறியது.

ஜார்கண்ட் மாநிலத்தில் நில விவகாரத்தில் ஒருவர் மீது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 323 வேண்டுமென்றே திட்டமிட்டு காயம் ஏற்படுத்துதல்), பிரிவு 420 (மோசடி), 467 (பிணை ஆவணத்தை போலியாக உருவாக்கி ஏமாற்றுதல்), 468 (ஏமாற்றும் நோக்கில் மோசடி செய்தல்), 471 (மோசடி ஆவணங்களைப் பண்படுத்துதல்), 120பி உள்ளிட்டப் பிரிவுகளின் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து குற்றஞ்சாட்டுக்கு உள்ளானவர் காவல் துறை நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக முன் ஜாமீன் கேட்டு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் மனுதாரர் உடனடியாக விசாரணை நீதிமன்றத்தில் சரணடைந்து ஜாமீன் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தியது.

அதைத் தொடர்ந்து முன் ஜாமீன் கோரி அவர் தரப்பில் இரண்டாவது மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவையும் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், முந்தைய உத்தரவையைப் பிறப்பித்தது. அதாவது சத்தேந்தர் குமார் அந்தில்–சிபிஐ ஆகியோருக்கு இடையே யான வழக்கில் எடுக்கப்பட்ட முடிவில் அடிப்படை யில் மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் சரணடைந்து, ஜாமீன் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் அறிவுறுத்தியது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அவர் தரப்பில் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வில் அண்மையில் விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், நீதிமன்றம் முன் ஜாமீன் கோரிக்கையை நிராகரிக்க விரும்பினால், அது தொடர்பான மனுவைத் தள்ளுபடி செய்யலாம். ஆனால் மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்று உத்தரவிடுவதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்று தீர்ப்பளித்தனர்.

**நன்றி: தினமணி 27.4.2026**

# சட்டச் சொற்கள் விளக்கம்

- இலக்குவனார் திருவள்ளுவன்

**வெருளி நோய்கள்** 1291 -1295

தீயர் வெருளி × Maleficiphobia

தீங்கிழைக்கும் தீயவன் அல்லது தீயவள் குறித்த அளவுகடந்த பேரச்சம் தீயர் வெருளி.

தனக்கோ பிறருக்கோ தீங்கிழைப்பவர்களைக் கண்டு வெறுப்பும் பேரச்சமும் கொள்வர்.

தொலைக்காட்சித் தொடர்களிலும் திரைப்படங்களிலும் கதைகளிலும் வரும் தீய பாத்திரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தும் பேரச்சத்திற்கு ஆளாவர். பொறாமையால் அல்லது பழி வாங்குவதற்காகத் தனக்குச் சூனியம் வைப்பதாக அல்லது மந்திரத் தகடு வைப்பதாக எண்ணியும் பிறர் மீது வெறுப்பும் சினமும் கொண்டு அஞ்சுவர்.

---

தீச்செய்தி வெருளி × Kakosphobia

தீச்செய்தி பற்றிய பெருங்கவலையும் பேரச்சமும் தீச்செய்தி வெருளி.

தேர்வில் தோல்வி, தேர்தலில் தோல்வி, உறவினர் மரணம், கூட்டாளி மோசடி செய்து ஓட்டம், கடை தீப்பற்றி எரிதல், வெள்ளத்தால் பயிர் நாசம் என்பன போன்ற தீயச் செய்திகள் ஆள்மூலம் அல்லது தொலைபேசி மூலம் அல்லது குறுந்தகவல், பகிரித் தகவல் மூலம் வரும் எனப் பேரச்சம் கொள்வர். தீங்கு நேரும் என எதிர்பார்த்தும் தீய செய்தி குறித்து அது வரும் முன்னரே அளவுகடந்த அச்சம் கொள்வர். தீய செய்தி வந்தாலும் அ?தை எதிர்கொள்ள முயலாமல் மனம் கலங்கி மேலும் துயரம் வரும் எனப் பேரச்சம் கொள்வர். சிலர் நோய்வந்தால் மருத்துவரைப் பார்த்தால் ஏதும் தீரா நோய் இருப்பதாகச் சொல்வாரோ எனக் கவலைப்பட்டு அவரைச் சந்திக்கவும் அஞ்சுவர்.

---

தீத்தடுப்புப் பயிற்சி வெருளி – Puraskisiphobia

தீத்தடுப்புப் பயிற்சி குறித்த வரம்பற்ற பேரச்சம் தீத்தடுப்புப் பயிற்சி வெருளி.

பள்ளியில் முதலுதவி வகுப்பில் தீத்தடுப்புப் பயிற்சிஅளிக்கும் பொழுதே உண்மையில் தீப்பற்றியுள்ளதாகக் கருதி அஞ்சுவர். தீத்தடுப்புப் பணியில் சேர்ந்த சிலருக்கும் இது போன்ற பேரச்சம் வருவதுண்டு.

தீத்தடுப்புப்பயிற்சியின் பொழுது தீக்காயம் ஏற்படுமோ தீயால் பாதிப்பு ஏதும் வருமோ என்று தேவையற்ற அச்சம் கொள்வோரும் உள்ளனர்.

---

தீப்பெட்டி வெருளி × Spirtophobia

தீப்பெட்டி குறித்த வரம்பற்ற பேரச்சம் தீப்பெட்டி வெருளி.

தீக்குச்சி அல்லது தீப்பெட்டி தொடர்பாக ஏற்படும் அளவுகடந்த பேரச்சம் தீப்பெட்டி வெருளி.

சூட்டில் தீக்குச்சி தானாகப் பற்றிக்கொண்டு விடும், கவனக் குறைவால் வேறு எதிலும் தீப்பற்றிப் பரவி அழிவு ஏற்படுத்தும் என்பனபோன்ற தேவையற்ற அளவுகடந்த பேரச்சத்திற்கு ஆளாவர்.

---

தீய கனவு வெருளி × Kakoneirophobia

தீய கனவு/நள்ளிரவுக் கனவு (nightmare) தொடர்பான அளவு கடந்த பேரச்சம் தீய கனவு வெருளி.

kakos என்றால் தீய என்று பொருள். oneiros என்றால் கனவு என்று பொருள்.

கனவு வெருளி (Oneirophobia)யுடன் தொடர்புடையது. ஆனால் கனவு வெருளி நல்ல கனவுகள் தொடர்பானது.

காண்க: அணங்கு வெருளி

– தொடரும்

(நன்றி: சட்டச் சொற்கள் விளக்கம், இலக்குவனார் திருவள்ளுவன்)

THINK AHEAD. STAY AHEAD.

# Bharath UNIVERSITY

30 YEARS OF EXCELLENCE

RATING AA+

# பாரத் பல்கலைக்கழகம்



## ■ B.TECH

- AERONAUTICAL ENGINEERING
- AUTOMOBILE ENGINEERING
- BIO-PROCESS ENGINEERING
- BIO-INFORMATICS
- BIO-MEDICAL ENGINEERING
- CHEMICAL ENGINEERING
- CIVIL ENGINEERING
- COMPUTER SCIENCE AND ENGINEERING
- COMPUTER SOFTWARE ENGINEERING
- ELECTRICAL AND ELECTRONICS ENGG.
- ELECTRONICS AND COMM. ENGINEERING
- ELECTRONICS AND CONTROL ENGINEERING
- ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
- ELECTRONICS AND TELECOM ENGINEERING
- FOOD PROCESS ENGINEERING
- GENETICS ENGINEERING
- INDUSTRIAL BIO-TECHNOLOGY
- INFORMATION TECHNOLOGY
- INSTRUMENTATION AND CONTROL ENGG.
- MECHANICAL ENGINEERING
- MECHATRONICS
- NANO TECHNOLOGY
- PRODUCTION TECHNOLOGY

## ■ M.TECH

[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]

**EVENING PROGRAMME : B.TECH & M.TECH**

- MECHANICAL ENGINEERING
- CIVIL ENGINEERING
- COMPUTER SCIENCE AND ENGINEERING
- ELECTRICAL AND ELECTRONICS ENGG.
- ELECTRONICS AND COMM. ENGINEERING

**B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME**

Eligibility : Diploma / B.Sc.

**M.S. BY RESEARCH AND Ph.D.**

All Disciplines Full time and Part time

**INTEGRATED PROGRAMME**

B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years

## MBA

[ Full time and Part time ]

## MCA

## HOTEL MANAGEMENT & CATERING

Courses : Diploma, B.Sc., & MBA

## B.ARCH

Eligibility : As per Council of Architecture norms

**PLACEMENT 100%**

1st among the participants from 125 Countries in International competition on Robotics

Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.

Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,

Internationally acclaimed curriculum in tune with global trends.

Scholarships worth ₹12.00 crores to the meritorius students

27 Centers of excellence to promote research and industry aided / driven projects

**SCHOLARSHIP** (TUITION FEES GRANT) ■ **100%**-State Toppers of all Boards ■ **50%**-School toppers, participated in National Level Sports Competition / Event ■ **30%**-Students having participated in State Level Sports Competition / Event ■ **35%**-Students securing 90% above Marks in the Board examinations ■ **25%**- "SARVA SIKSHA" Scheme I Scheduled Caste / Scheduled Tribe candidate I Parent being an Ex-servicemen I Physically Handicapped candidate I First Graduate candidate

HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.

BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph **044-22290247**

Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph **044-42115251 / 91-98410 64199**

Apply online : www.bharathuniv.ac.in

**ADMISSION HELPLINE**

**1800-419-1441**

Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

BY REGISTRAR

Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of May 2026
SATTAKADIR - Tamil Law Journal /Monthly May 2026 / Publication First Week of Every month.
Registration of News Papers for India, Reg. No. 62767/92
Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026



மொரிஷியஸில் நாட்டுக்கான இந்திய தூதர் மேதகு அனுராக் ஸ்ரீவஸ்தவா, IFS அவர்களை 13ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள மாநாட்டுத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் அவர்கள் நேரில் அழைத்தார்.



13ஆவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை மொரிஷியஸ் நாட்டில் நடத்தவும் அரசு உதவி பெறவும் மொரிஷியஸ் அமைச்சர் திரு.தேவன் நாகலிங்கம் அவர்களை டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், மாநாட்டு தலைவர் நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். தமிழ் கோயில்கள் கூட்டமைப்பு முன்னாள் தலைவர் திரு.கணேசன் உடன் இருந்தார்.



மொரிஷியஸ் தமிழ் கோயில்கள் கூட்டமைப்பு சார்பில் 13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு குறித்து கலந்துரையாடல் கூட்டம் அமைச்சர் மாண்புமிகு திரு.ராஜன் நரசிங்கன் தலைமையில் மொரிஷியஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி அவர்கள் முன்னிலையில் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டினை பற்றி எடுத்துரைத்தார்.



மொரிஷியஸ் அரசு பொருளாதார மேம்பாடு வாரிய முதன்மை அதிகாரி திரு.கந்தசாமி அவர்களை 13ஆவது மாநாட்டுத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் நேரில் சந்தித்து மாநாட்டு பங்குதாரராக சேர அழைப்பு விடுத்தார். உடன் கணினி மென்பொருள் வல்லுநர் திரு.கார்த்திக்.



13வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு நடத்துவது குறித்து மொரிஷியஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் பரமசிவம் பிள்ளை வையாபுரி தலைமையில் தமிழ் லீக் அமைப்பின் சார்பில் நடத்த கலந்துரையாடலில் 13ஆவது மாநாட்டு தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் கலந்து கொண்டு மாநாட்டினை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**